# Test-01 தமிழ் Material

## எழுத்து

1. பிரித்து எழுதுதல்
2. சேர்த்து எழுதுதல்
3. சந்திப்பிழை
4. குறில் நெடில் வேறுபாடு
5. ல,ள,ழ,ர,ற,ந,ண,ன வேறுபாடு அறிதல் மயங்கொலிகள்
6. இனஎழுத்துக்கள் அறிதல்
7. சுட்டு எழுத்துக்கள் அறிதல்
8. வினா எழுத்துக்கள் அறிதல்
9. ஒருமை பன்மை அறிதல்

## சொல்

1. வேர்ச்சொல் அறிதல்-வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர்,பெயரெச்சம் சொல் வகை அறிதல்
2. அயற்சொல் – தமிழ்ச்சொல்
3. எதிர்ச்சொல்
4. வினைச்சொல்
5. எழுத்துப்பிழை
6. ஒற்றுப்பிழை அறிதல்
7. இரண்டு வினைச்சொற்களின் வேறுபாடு அறிதல்

# பிரித்து எழுதுதல்

## ஆறாம் வகுப்பு புதிய புத்தகம்

### இன்பத்தமிழ்

- அமுதென்று = அமுது + என்று
- செம்பயிர் = செம்மை + பயிர்
- நிலவென்று = நிலவு + என்று
- புகழ்மிக்க = புகழ் + மிக்க
- சுடர்தந்த = சுடர் + தந்த
- தமிழ்க்கும்மி=தமிழ் + கும்மி
- செந்தமிழ் = செம்மை + தமிழ்
- பொய்யகற்றும்= பொய் + அகற்றும்
- கொட்டுங்கடி = காட்டுங்கள் + அடி
- வழிகாட்டிருக்கும் = வழிகாட்டு + இருக்கும்
- செந்தமிழ் = செம்மை + தமிழ்
- ஊற்றெனும் = ஊற்று + எனும்
- பாட்டிருக்கும் = பாட்டு + இருக்கும்

### வளர் தமிழ்

- இடப்புறம் = இடது + புறம்
- சீரிளமை = சீர் + இளமை

### சிலப்பதிகாரம்

- வெண்குடை = வெண்மை + குடை
- பொற்கோட்டு = பொன் + கோட்டு
- வானிலிருந்து = வானில் + இருந்து
- சிலப்பதிகாரம் =சிலம்பு + அதிகாரம்
- மாமழை= மா + மழை
- மேனின்று = மேல்+நின்று
- அங்கண் = அம்+கண்

### காணி நிலம்

- நன்மாடங்கள் = நன்மை + மாடங்கள்
- நிலத்தினிடையே = நிலத்தின் + இடையே

### சிறகின் ஓசை

- தட்பவெப்பம் = தட்பம் + வெப்பம்
- வேதியுரங்கள் = வேதி + யுரங்கள்
- பெருங்கடல் = பெருமை + கடல்
- செங்கோல் = செம்மை + கோல்
- வடதிசை = வடக்கு + திசை
- இளந்தளிர் = இளமை + தளிர்
- பறவையினம் - பறவை + இனம்

### முதலெழுத்தும், சார்பெழுத்தும்

- உயிர்மெய் = உயிர் + மெய்
- தனிநிலை = தனி + நிலை
- முப்புள்ளி = மூன்று + புள்ளி
- உயிரளபெடை = உயிர் + அளபடை
- ஐகாரக்குறுக்கம் = ஐகாரம் + குறுக்கம்

### அறிவியல் ஆத்திசூடி

- கண்டறி = கண்டு + அறி
- ஓய்வற = ஓய்வு + அற
- ஈடுபாட்டுடன் = ஈடுபாடு + உடன்

### அறிவியலால் ஆள்வோம்

- ஆழக்கடல் = ஆழம் + கடல்
- விண்வெளி = விண் + வெளி
- செயற்கைக்கோள் = செயற்கை + கோள்
- எந்திரமனிதன் = எந்திரம் + மனிதன்
- உள்ளங்கை = உள் + அம் + கை
- இணையவலை =இணையம் + வலை

### கணியனின் நண்பன்

- நின்றிருந்த = நின்று + இருந்த
- அவ்வுருவம் = அ + உருவம்

### மூதுரை

- இடமெல்லாம் = இடம் + மெல்லாம்
- மாசற = மாசு + அற

### துன்பம் வெல்லும் கல்வி

- கைப்பொருள் = கை + பொருள்
- குணமிருந்தால் = குணம் + இருந்தால்
- கைப்பொருள் = கை + பொருள்

### கல்விக்கண் திறந்தவர்

- பசியின்றி = பசி + இன்றி
- படிப்பறிவு = படிப்பு + அறிவு
- ஏற்றத்தாழ்வு = ஏற்றம் + தாழ்வு
- பெருந்தலைவர் = பெருமை + தலைவர்
- அரசுடமை = அரசு + உடமை

### ஆசாரக்கோவை

- நன்றியறிதல் = நன்றி + அறிதல்
- பொறையுடைமை = பொறை + உடைமை

### கண்மணியே கண்ணுறங்கு

- பாட்டிசைத்து = பாட்டு + இசைத்து
- கண்ணுறங்கு = கண் + உறங்கு

### தமிழர் பெருவிழா

- பொங்கல்+ அன்று = பொங்கலன்று
- போகிப்பண்டிகை= போகி + பண்டிகை

### திருக்குறள்

- அசைவிலா = அசைவு + இலா
- மருந்தெனினும் = மருந்து + எனினும்
- முகந்திரிந்து = முகம் + திரிந்து
- அளவிறந்து = அளவு + இறந்து
- பயனுடைய = பயன் + உடைய

### நானிலம் படைத்தவன்

- கல்லெடுத்து = கல் + எடுத்து
- நானிலம் = நான்கு+நிலம்

### கடலோடு விளையாடு

- கதிர்ச்சுடர் = கதிர் + சுடர்
- மூச்சடக்கி = மூச்சு + அடக்கி
- வெண்மணல் = வெண்மை + மணல்
- உடற்போர்வை = உடல் + போர்வை

### வளரும் வணிகம்

- வண்ணப்படங்கள் = வண்ணம்+படங்கள்
- விரிவடைந்த = விரிவு + அடைந்த

### பாரதம் அன்றைய நாற்றங்கால்

- நூலாடை = நூல்+ஆடை
- தேசமிது = தேசம் + இது
- வாசலிது = வாசல் + இது
- மேலாடை = மேல் + ஆடை
- மெய்யுணர்வு = மெய் + உணர்வு
- பூக்காடு = பூ + காடு
- அமுதக்கவிதை = அமுதம் + கவிதை
- வாசலிது = வாசல் + இது
- கைத்தடி = கை + தடி
- கலைக்கூடம் = கலை + கூடம்
- இசையமைக்க = இசை + அமைக்க

### பராபரக்கண்ணி

- தானென்று = தான் + என்று
- எவ்வுயிரும் = எ + உயிரும்
- இன்பநிலை = இன்பம் + நிலை
- இன்புற்ற = இன்பம் +உற்ற
- வேறொன்று = வேறு + ஒன்று
- வந்தெய்தும் = வந்து + எய்தும்
- ஆளாக்கி = ஆள் + ஆக்கி

### பசிப்பிணி போக்கிய பாவை

- வெண்மணல் = வெண்மை + மணல்
- கையிலிருந்த = கையில் + இருந்த
- அறநெறி = அறம் + நெறி

### திருக்குறள்

- மாசிலன் = மாசு + இலன்
- பல்லுயிர் = பல + உயிர்
- பகுத்துண்டு = பகுத்து + உண்டு
- உய்வுண்டாம் = உய்வு + உண்டாம்
- மற்றெல்லாம் = மற்று + எல்லாம்
- நன்னயம் = நன்மை + நயம்

### ஆசியஜோதி

- எளிதாகும் = எளிது + ஆகும்
- பாலையெல்லாம் = பாலை+எல்லாம்
- இன்னுயிர் = இனிமை + உயிர்
- நாடெங்கும் = நாடு + எங்கும்
- எளிதாகும் = எளிது + ஆகும்
- பக்குவமாவது = பக்குவம் + ஆவது

## ஏழாம் வகுப்பு புதிய புத்தகம்

### எங்கள் தமிழ் (நாமக்கல் கவிஞர்)

- குரலாகும் = குரல் + ஆகும்

### ஒன்றல்ல இரண்டல்ல

- ஒன்றல்ல = ஒன்று + அல்ல
- இரண்டல்ல = இரண்டு + அல்ல
- செங்கனி = செம்மை + கனி
- பெருஞ்செல்வம் = பெருமை + செல்வம்
- இரண்டல்ல = இரண்டு + அல்ல
- தந்துதவும் = தந்து + உதவும்

### காடு (கவிஞர் சுரதா)

- 'காடெல்லாம்' = காடு + எல்லாம்
- பெயரறியா = பெயர் + அறியா
- மனமில்லை = மனம் + இல்லை
- நேற்று + இரவு = நேற்றிரவு
- தானிருந்து = தான் + இருந்து
- கருநீலம் = கருமை + நீலம்
- பெயரறியா = பெயர் + அறியா
- நிலவொளி = நிலவு + ஒளி
- பழந்தின்னி = பழம் + தின்னி
- நேற்றிரவு = நேற்று + இரவு
- மனமில்லை = மனம் + இல்லை

### விலங்குகள் உலகம்

- காட்டாறு = காடு + ஆறு
- அனைத்துண்ணி = அனைத்து + உண்ணி
- நினைவாற்றல் = நினைவு + ஆற்றல்
- பண்புள்ள = பண்பு + உள்ள
- அனைத்துண்ணி = அனைத்து + உண்ணி

### திருக்குறள்

- பொருட்செல்வம் = பொருள் + செல்வம்
- யாதனில் = யாது + எனில்
- பொறாமையில்லா = பொறாமை + இல்லாத
- அருட்செல்வம் = அருள் + செல்வம்
- யாதொன்றும் = யாது + ஒன்றும்
- வலிமையுடையவர் = வலிமை + உடையவர்

### பாஞ்சை வளம் (கட்டபொம்மன்)

- பூட்டுங்கதவுகள் = பூட்டும் + கதவுகள்
- தோரணமேடை = தோரணம் + மேடை
- மதிலோடை = மதில் + ஓ
- முனையுள்ள = முனை + உள்ள
- வரந்தருவாளே = வரம் + தருவாளே
- வாக்கருள் = வாக்கு + அருள்
- வளர்ந்தேறும் = வளர்ந்து + ஏறும்

### புலி தங்கிய குகை

- யாண்டுளனோ? = யாண்டு + உனோ?

### கலங்கரை விளக்கம்

- மரக்கலங்கள் = மரம் + கலங்கள்
- பத்துப்பாட்டு = பத்து + பாட்டு
- முல்லைப்பாட்டு = முல்லை + பாட்டு
- அம்மாடத்தில் = அ + மாடத்தில்
- தீச்சுடர் = தீ + சுடர்

### கவின்மிகு கப்பல்

- பெருங்கடல் = பெருமை + கடல்
- புலவுத்திரை = புலவு + திரை
- பெருங்கடல் = பெருமை + கடல்
- அகநானூறு = அகம் + நானூறு
- புறநானூறு = புறம் + நானூறு

### இன்பத்தமிழ்க் கல்வி (பாரதிதாசன்)

- ஏடெடுத்தேன் = ஏடு + எடுத்தேன்
- துயின்றிருந்தார் = துயின்று + இருந்தார்
- எழுதென்று = எழுது + என்று
- என்றுரைக்கும் = என்று + உரைக்கும்
- பெண்களெல்லாம் = பெண்கள் + எல்லாம்
- மேற்றிசை = மேற்கு + திசை
- வெற்பென்று = வெற்பு + என்று
- என்றுரைக்கும் = என்று + உரைக்கும்

### அழியாச்செல்வம் (நாலடியார்)

- வாய்த்தீயின் = வாய்த்து + ஈயீன்

- கேடில்லை =கேடு + இல்லை
- வாழ்விக்கும் கல்வி
- உயர்வடைவோம் = உயர்வு + அடைவோம்

**திருக்குறள்**

- எழுத்தென்ப = எழுத்து + என்ப
- இவ்விரண்டும் = இ + இரண்டும்
- தொட்டனைத்து = தொட்டு + அனைத்
- கற்றனைத்து = கற்று + அனைத்து
- நன்னாற்றல் = நல்ல + ஆற்றல்
- கரைந்துண்ணும் = கரைந்து + உண்ணா
- பண்பறிந்து = பண்பு + அறிந்து
- கரைந்துண்ணும்= கரைந்து + உண்ணு
- எழுத்தென்ப = எழுத்து + என்ப

**பேசும் ஓவியங்கள் (ஓவியம்)**

- கோட்டோவியம் = கோட்டு + ஓவியம்
- செப்பேடு = செப்பு + ஏடு

**கீரைப்பாத்தியும் குதிரையும்**

- வண்கீரை = வண்ணம் + கீரை
- ஒரு வேண்டுகோள் (தேனரசன்)
- வனப்பில்லை = வனப்பு + இல்லை
- கலையுலகம் = கலை + உலகம்
- ஈரமண் = ஈரம் + மண்
- சித்திரமாக்கினால் = சித்திரம் + ஆக்கினால்
- வழித்தெடுக்குமாறு வழித்து + எடுக்குமாறு
- முக்பொலிவு = முகம் + பொலிவு
- உயிர்ப்பில்லை = உயிர்ப்பு + இல்லை

**விருந்தோம்பல் (பழமொழி நானூறு)**

- நீருலையில் = நீர் + உலையில்

**வயலும் வாழ்வும்**

- தேர்ந்தெடுத்து = தேர்ந்து + எடுத்து
- தாண்டிப்போயி = தாண்டி + போயி
- ஒண்ணரைக்குழி = ஒண்ணரை + குழி
- சீலையெல்லாம் = சீலை + எல்லாம்
- நாத்தெல்லாம் = நாத்து + எல்லாம்

**திருக்குறள்**

- நாடென்ப = நாடு + என்ப
- நாடல்ல = நாடு + அல்ல
- பிறப்பொக்கும் = பிறப்பு + ஒக்கும்
- நாடென்ப = நான் + என்ப

**மலைப்பொழிவு (கண்ணதாசான்)**

- மலையளவு = மலை + அளவு
- தன்னாடு = தன் + நாடு

**கண்ணியமிகு தலைவர்**

- எதிரொலித்தது = எதிர் + ஒலித்தது

## எட்டாம் வகுப்பு புதிய புத்தகம்

**தமிழ்மொழி வாழ்த்து (பாரதியார்)**

- என்றென்றும் = என்று + என்றும்
- வானமளந்தது = வானம் + அளந்தது

**தமிழ்மொழி மரபு (தொல்காப்பியர்)**

- இருதிணை = இரண்டு + திணை
- ஐம்பால் = ஐந்து + பால்
- ஞானச்சுடர் = ஞானம் + சுடர்
- இன்புருகு = இன்பு + உருகு

**ஓடை (வாணிதாசன்)**

- நன்செய் = நன்மை + செய்
- ஞானச்சுடர் = ஞானம் + சுடர்
- ஞானத்தமிழ் = ஞானம் + தமிழ்

**அறம் என்னும் கதிர்**

- நீளுழைப்பு = நீள் + உழைப்பு
- சீருக்கு + ஏற்ப = சீருக்கேற்ப
- இன்சொல் = இன்மை + சொல்

**கோணக்காத்துப் பாட்டு (கும்மி பாடல்)**

- விழுந்ததங்கே = விழுந்தது + அங்கே
- செத்திறந்த =செத்து + இறந்த
- வீடுகளெல்லாம் = வீடுகள் + எல்லாம்
- தென்னம்பிள்ளை = தென்னம் + பிள்ளை
- சுவரெல்லாம் = சுவர் + எல்லாம்

- தானடந்து = தான் + அடைந்து
- நாடெல்லாம் = நாடு + எல்லாம்
- செத்திறந்து = செத்து + இறந்து
- மார்க்கமான = மார்க்கம் + ஆன
- வேகமுடன் = வேகம் + உடன்

**நிலம் பொது (சுகுவாமிஷ் பழங்குடியினர்)**

- இன்னோசை = இனிமை + ஓசை
- ஊசியிலை = ஊசி + இலை
- மறப்பதேயில்லை = மறப்பதே + இல்லை
- உணவளிக்கின்றனர் = உணவு + அளிக்கின்றனர்
- நீரானது = நீர் + ஆனது
- நிலத்திலிருந்து = நிலத்தில் + இருந்து
- உங்களுடைய =உங்கள் + உடைய
- பாழாக்கி = பாழ் + ஆக்கி
- முறையிலிருந்து = முறையில் + இருந்து
- காட்சிகளெல்லாம் = காட்சிகள் + எல்லாம்
- ஒன்றாகும் = ஒன்று + ஆகும்
- சொந்தமானவை = சொந்தம் + ஆனவை
- பனித்துளி = பனி + துளி
- புனிதமானது = புனிதம் + ஆனது
- தண்ணீரன்று = தண்ணீர் + அன்று
- தேவையானவை = தேவை + ஆனவை

**திருக்குறள்**

- வல்லுருவம் = வன்மை + உருவம்

**நோயும் மருந்தும்**

- போலாதும் = போல் + ஆதும்
- உய்ப்பனவும் = உய்ப்பன + உம்
- கூற்றவா = கூற்று + அவா
- ஐம்பெருங்காப்பியம் = ஐந்து + பெருமை + காப்பியம்
- அரும்பிணி = அருமை + பிணி
- தெளிவோடு = தெளிவு + ஓடு
- பிணியுள் = பிணி + உள்
- இன்பமுற்றே = இன்பம் + உற்றே
- இவையுண்டார் = இவை + உண்டார்

**வருமுன் காப்போம்**

- நலமெல்லாம் = நலம் + எல்லாம்

**தமிழர் மருத்துவம்**

- மருந்தென = மருந்து + என
- உடற்கூறுகள் = உடல் + கூறுகள்
- தங்களுக்கென = தங்களுக்கு + என
- வந்துள்ளோம் = வந்து + உள்ளோம்
- பழந்தமிழர் = பழமை + தமிழர்
- கண்டறிந்து = கண்டு + அறிந்து

**கல்வி அழகே அழகு**

- கலனல்லால் = கலன் + அல்லால்

**புத்தியைத் தீட்டு**

- கோயிலப்பா = கோயில் + அப்பா
- எண்ணிப்பாரு = எண்ணி + பாரு
- தெளிவாகும் = தெளிவு + ஆகும்
- கோயிலப்பா = கோயில் + அப்பா
- போகுமப்பா = போகும் + அப்பா

**திருக்கேதாரம்**

- கனகச்சுனை = கனகம் + சுனை
- முழவு + அதிர = முழவுதிர
- பாடறிந்து ஒழுகுதல் (கலித்தொகை)
- பாடறிந்து = பாடு + அறிந்து
- முறை + எனப்படுவது = முறையெனப்படுவது
- நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்
- மட்டுமல்ல = மட்டும் + அல்ல
- கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்

**திருக்குறள்**

- ஒத்தாங்கு = ஒத்து + ஆங்கு
- இன்னச்சொல் =இன்னா + சொல்
- கேளாரும் = கேள் +ஆரும்
- உருகெழும் = உருகு + எழும்
- அகன்றலை = அகன்ற + அலை
- கதிரீன = கதிர் + ஈன

- பெடையோடு = பெடை + ஓடு
- அக்கிளை= அ + கிளை

**மழைச்சோறு**

- முருங்கைச்செடி = முருங்கை + செடி
- பாதையெலாம் = பாதை + எலாம்
- வேலியிலே = வேலி + இலே
- பெற்றெடுத்தோம் = பெற்று + எடுத்தோம்
- காலிறங்கி = கால் + இறங்கி
- உலகமெங்கும் = உலகம் + எங்கும்
- வாசலெல்லாம் = வாசல் + எல்லாம்
- பெற்றெடுத்தோம் = பெற்று + எடுத்தோம்
- வெங்கரி = வெம்மை + கரி
- என்றிருள் = என்று + இருள்
- தூய்மையவர் = தூய்மை + அவர்
- கற்றறிந்தார் = கற்று + அறிந்தார்
- விடுதலைத் திருநாள் (கவிஞர் மீரா)
- தொகையறிந்த = தொகை + அறிந்த
- முற்றுகையிட்ட = முற்றுகை + இட்ட
- சீவனில்லாமல் = சீவன் + இல்லாமல்
- கசடற = கசடு + அற
- முட்காட்டை = முள் + காட்டை
- கண்ணோடாது = கண் + ஓடாது
- மூச்சுக்காற்றை = மூச்சு + காற்றை

**வளம் பெருகுக**

- இதந்தரும் =இதம் + தரும்
- அக்கதிர் = அ + கதிர்
- தமிழால் = தமிழ் + ஆல்
- பகையைத்துடைத்து = பகையை + துடைத்து
- வாய்ப்பளித்த = வாய்ப்பு + அளித்த
- அரக்கராகி = அரக்கர் + ஆகி
- சீவனில்லாமல் = சீவன் + இல்லாமல்
- விலங்கொடித்து = விலங்கு + ஒடித்து

**ஒன்றே குலம் (திருமூலர்)**

- நமனில்லை = நமன் + இல்லை

**மெய்ஞ்ஞான ஒளி**

- ஆனந்தவெள்ளம் = ஆனந்தம் + வெள்ளம்

**திருக்குறள்**

- பெருஞ்செல்வம் = பெருமை + செல்வம்
- ஊராண்மை = ஊர் + ஆண்மை
- பேராண்மை = பேர் + ஆண்மை
- பண்புடையாளர் = பண்பு + உடையாளர்
- மிகுதிக்கண் = மிகுதி + கண்
- மேற்சென்று = மேல் + சென்று
- பண்பிலான் = பண்பு + இலான்
- திரிந்தற்று = திரிந்து + அற்று
- நற்பண்பு = நல்ல + பண்பு
- அறிவருள் = அறிவு + அருள்
- இன்பதுன்பம் = இன்பம் + துன்பம்
- குறைவற = குறைவு + அற
- குணங்களெல்லாம் = குணங்கள் + எல்லாம்
- பூத்தேலோ = பூத்து + ஏலோ
- பெண்ணரசி = பெண் + அரசி

**இளைய தோழனுக்கு (மு.மேத்தா)**

- விழித்தெழும் = விழித்து + எழும்
- போவதில்லை = போவது + இல்லை
- படுக்கையாகிறது = படுக்கை + ஆகிறது
- மட்டுமல்ல = மட்டும் + அல்ல
- போவதில்லை = போவது + இல்லை
- உனக்கொரு = உனக்கு + ஒரு
- தூக்கிக்கொண்டு =தூக்கி + கொண்டு
- கைக்குழந்தைகள் = கை + குழந்தைகள்
- குழந்தைகளல்ல = குழந்தைகள் + அல்ல
- ஒருவருமில்லையா = ஒருவரும் + இல்லையா
- படுக்கையாகிறது = படுக்கை + ஆகிறது
- பாதையாகிறது = பாதை + ஆகிறது
- விழித்தெழும் = விழித்து + எழும்
- நம்முடையது = நம் + உடையது

- மலையளவு = மலை + அளவு

**உயிர்க்குணங்கள்**

- இன்பதுன்பம் = இன்பம் + துன்பம்

## ஒன்பதாம் வகுப்பு புதிய புத்தகம்

**வல்லினம் மிகும் இடங்கள்**

- கண்டெடுக்கப்பட்டுள்ளன= கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

## பத்தாம் வகுப்பு புதிய புத்தகம்

**அன்னை மொழியே**

- எந்தமிழ்நா = எம் + தமிழ் + நா

**நீதிவெண்பா**

- அருந்துணை = அருமை + துணை
- கல்வியென்ற = கல்வி + என்ற

## பதினொராம் வகுப்பு புதிய புத்தகம்

குரங்குக்குட்டி = குரங்கு + குட்டி

செங்கயல் = செம்மை + கயல்

ஐங்குறுநூறு = ஐந்து + குறுமை + நூறு

கருவிழி = கருமை + விழி

பாசிலை = பசுமை + இலை

சிறியன் = சிறுமை + அன்

பெருங்கல் = பெருமை + கல்

வழியில்லை = வழி + இல்லை

திரைப்படம் = திரை + படம்

ஞாயிற்றுச்செலவு = ஞாயிறு + செலவு

வெற்றிலை = வெறுமை + இலை

கல்லதர் = கல் + அதர்

கருங்கடல் = கருமை + கடல்

திருப்புகழ் = திரு + புகழ்

தண்டுடை = தண்டு + உடை

துஞ்சல் = துஞ்சு + அல்

இயைவதாயினும் = இயைவது + ஆயினும்

புகழெனின் = புகழ் + எனின்

சிறுகோல் = சிறுமை + கோல்

பொற்சிலம்பு = பொன் + சிலம்பு

இழுக்கின்றி = இழுக்கு + இன்றி

கொழுஞ்சோறு = கொழுமை + சோறு

அரும்பொருள் = அருமை + பொருள்

மனையென = மனை + என

பயமில்லை = பயம் + இல்லை

கற்பொடி = கல் + பொடி

உலகனைத்தும் = உலகு + அனைத்தும்

திருவடி = திரு + அடி

நீரோடை = நீர் + ஓடை

சிற்றூர் = சிறுமை + ஊர்

கற்பிளந்து = கல் + பிளந்து

மணிக்குலம் = மணி + குலம்

அமுதென்று = அமுது + என்று

புவியாட்சி = புவி + ஆட்சி

மண்ணுடை = மண் + உடை

புறந்தருதல் = புறம் + தருதல்

பெருங்காடு = பெருமை + காடு

உழுதுழுது = உழுது + உழுது

காலத்தச்சன் = காலம் + தச்சன்

உழுதுழுது = உழுது + உழுது

பேரழகு = பெருமை + அழகு

புலனறிவு விதி = புலன் + அறிவு

வில்லொடிந்தது = வில் + ஒடிந்தது

## பன்னிரண்டாம் வகுப்பு

செம்பரிதி = செம்மை + பரிதி

வானமெல்லாம் = வானம் + எல்லாம்

உன்னையல்லால்= உன்னை+அல்லால்

செந்தமிழே = செம்மை + தமிழே

ஆஙகவற்றுள் = ஆங்கு + அவற்றுள்

தனியாழி = தனி+ ஆழி

வெங்கதிர் = வெம்மை+ கதிர்

இனநிரை=இனம் + நிரை

புதுப்பெயல் =புதுமை +பெயல்

எத்திசை = எ+திசை

உள்ளொன்று = உள்+ ஒன்று

ஒருமையுடன் = ஒருமை + உடன்

பூம்பாவாய் = பூ + பாவாய்

பெருங்கடல் = பெருமை +கடல்

முன்னுடை = முன் + உடை

ஏழையென = ஏழை + என

நன்மொழி = நன்மை + மொழி

உரனுடை = உரன் + உடை

tnpscbooks

# 6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் -1

## இயல் - 1

### இலக்கணமும் மொழித்திறனும்

#### பிரித்து அறிதல்

தமக்குரியர் = தமக்கு + உரியர்

நிழலருமை = நிழல் + அருமை

புறத்துறுப்பு = புறத்து + உறுப்பு

அன்பீனும் = அன்பு + ஈனும்

வழக்கென்ப = வழக்கு + என்ப

தரமில்லை = தரம் + இல்லை

#### சேர்த்து எழுதுக

பருப்பு + உணவு= பருப்புணவு

அவன் + அழுதான் = அவனழுதான்

கரும்பு + எங்கே = கரும்பெங்கே

அவள் + எங்கே = அவளெங்கே

#### இலக்கணம் எதற்கு?

- நாம் பேசும் மொழியை எழுதும் மொழியை முறையாகப் புரிந்து கொள்வதற்கு இலக்கணம் தேவை
- இப்படி எழுது, அப்படி எழுது என்று கட்டளை இடுவதற்காக இல்லை
- அவன் வந்தாள் – என்று எழுதினால் யாருக்காவது புரியுமா? வந்தவர் ஆணா பெண்ணா என்பது எப்படி தெரியும்?
- நாம் பேசுவதும் எழுதுவதும் மற்றவர்க்கும் புரிய வேண்டும், ஆகையால் இலக்கணம் தேவைப்படுகிறது.

#### மொழிக்குள் வியப்பு

- ஒரு கடலைப் பார்க்கிறோம். ஒரு மலையைப் பார்க்கிறோம் எப்படி வியக்கிறோம் ஒரு மொழியைப் படிக்கும் போது அப்படி ஒரு வியப்பு ஏற்படும்
- தமிழின் முதல் எழுத்து – அ
- அ என்னும் எழுத்தின் முதுகுக்குப் பின்னால் | என்று ஒரு கோடு இருக்கிறது, உலகத்தில் நூற்றுக்கணக்கான மொழிகளின் முதல் எழுத்தில் இப்படி ஒரு கோடு இருக்கிறது. அ எழுத்து மனிதனைக் குறிக்கிறதாம். | என்னும் முதுகுக்கோடு பழங்காலத்தில் வேட்டை ஆடுவதற்கு மனிதன் முதுகில் சுமந்த அம்புக் கூட்டைக் குறிக்கிறதாம், என்னே வியப்பான செய்தி!
- எழுத்துகளும் மனிதர்களும்
- மனிதர்களைப் போலத்தான் எழுத்துகளும், அவற்றுக்குள் நட்பும் உண்டு இனமும் உண்டு.

- 'ங' என்னும் எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும். 'ங' , 'க' இரண்டும் நண்பர்கள் (எ.கா.) சிங்கம், தங்கை
- அதேபோல் 'ஞ்', 'ச்' இரண்டும் நண்பர்கள் இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ,கா.) மஞ்சள், அஞ்சாதே
- ண்ட, ந்த, ம்ப, ன்ற எழுத்துகளும் நண்பர்கள். பெரும்பாலும் இவை சேர்ந்தே வரும். (எ,கா.) பண்டம், பந்தல், கம்பன், தென்றல்
- நட்பு எழுத்துகளை இன எழுத்துகள் என இலக்கணம் கூறுகிறது.

வேறுபாடு அறிதல்

குறில் நெடில்

- ஓடோடி வந்தான் – இத்தொடரில் ந் மற்றும் ன் இரண்டு மெய் எழுத்துகள், அவற்றை விடுத்து மீதம் உள்ள எழுத்துகளில்.
- ஓ, டோ, தா – இவை மூன்றும் நெடில் எழுத்துகள்
- டி, வ – இவை இரண்டும் குறில் எழுத்துகள்
- ஒற்றைக் கொம்பு, இரட்டைக்கொம்பு
- செய், சேய் என்னும் இரண்டு சொற்களைப் பாருங்கள்
- செ இ்து ஒற்றைக்கொம்பு
- சே இ்து இரட்டைக்கொம்பு
- இதனைச் செய், தாய்சேய் நலவிடுதி
- ச் என்பது மெய்யெழுத்து
- எ என்பது உயிரெழுத்து
- இரண்டும் சேரும் போது செ இதில் குறில்
- ச் உடன் ஏ சேரும் போது சே இதில் நெடில்

ஒற்றைக்கொம்பு இரட்டைக் கொம்புகளோடு துணை எழுத்துச் சேரும் போது ஏற்படும் மாற்றங்கள்

- கொடி பறக்கும்
- க் + ஒ இரண்டும் சேர்ந்தால் கொ இது குறில்
- க் + ஓ இரண்டும் சேர்ந்தால் கோ இது நெடில்

## 6ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் 2

இலக்கணமும் மொழித்திறனும்

- தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது
- உயிர் எழுத்துகள் 30
- மெய் எழுத்துகள் 18
- எ.கா. அண்ணா (ண் - மெய்யெழுத்து, ணா - உயிர்மெய் எழுத்து))

- உயிரும் மெய்யும் சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன. அனைத்தும் பேச்சு வழக்கில் பயன்படுவது இல்லை.
- எடுத்துக்காட்டாக கி,சி,பி,டி,தி,மி போன்ற உயிர்மெய் எழுத்துகள் அன்றாடப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவது இல்லை.

குறில் நெடில்

- அ,இ,உ,எ,ஒ ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள் இவை மெய் எழுத்துகளோடு சேரும் போது உயிர்மெய்க்கு எழுத்துகள் உண்டாகின்றன,
- கடல், கிளி, குரங்கு, சென்னை, சொல்
- ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ ஏழும் நெடில் எழுத்துகள், இந்த மெய் எழுத்துகளோடு சேரும் போது உயிர்மெய் நெடில் எழுத்துகள் உண்டாகின்றன.
- குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக
- பல் தேய்த்தேன்
- பால் குடித்தேன்
- பல்,பால் இடம் மாறினால் குழப்பம் வரும்

சேர்த்து எழுதுக

- முதல் சொல்லின் கடைசி எழுத்து மெய்
- சேரும் சொல்லின் முதல் எழுத்து உயிர்
- சேரும்போது நடக்கும் மாற்றம்
- மணம் + உண்டு = மணமுண்டு
- சிலர் + அழுவார் = சிலரழுவார்
- புகழ் + இழந்தேன் = புகழிழந்தேன்
- மாற்றம் : உயிர் எழுத்தானது மெய் எழுத்தில் இணைந்து உயிர் மெய்யானது

பிரித்து எழுதுக

- தமிழழகு = தமிழ் + அழகு
- மலரடி = மலர் + அடி
- தேனருவி = தேன் + அருவி
- மாற்றம் ; உயிர் எழுத்துத் தனியே பிரிந்தது

பிழையின்றித் தமிழ் எழுதுவோம்

பின்வரும் சொற்களைப் பிழையின்றி எழுதுக

பன்னொண்டு = பன்னிரெண்டு

நார்பது = நாற்பது

அம்பது = ஐம்பது

வாய்க்கால், செய் ஆகியவை வயல் சார்ந்த அருமையான தமிழ்ச் சொற்கள்

வண்மை – கொடைத்தன்மை

வன்மை – கொடுமை

தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள்

- எழுத்துகளுக்குள் நட்பு உண்டு, தமிழில் சில எழுத்துகள் தன் எழுத்தோடு மட்டும் சேர்ந்து வரும் (எ,கா) பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்
- க்,ச்.த்,ப் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும் எழுத்துகள் ,

தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துகளுடன் சேரும் எழுத்துகள்(வேற்றுநிலை மெய்ம்மயக்கம்)

- (எ,கா) சார்பு, வாழ்க்கை
- ர், ழ் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் சேர்ந்து வாரா, பிற எழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும்

தன் எழுத்து, பிற எழுத்து இரண்டுடனும் சேர்ந்து வரும் எழுத்துகளும் உள்ளன

- (எ,கா) ற் – குற்றம், மேற்கு
- ன் - அன்னம், அன்பு

சேர்த்து எழுதுக

- முதல் சொல்லின் கடைசி எழுத்து மெய்
- சேரும் சொல்லின் முதல் எழுத்து உயிர்
- சேரும்போது நடக்கும் மாற்றம்
- மணம் + உண்டு = மணமுண்டு
- சிலர் + அழுவார் = சிலரழுவார்
- புகழ் + இழந்தேன் = புகழிழந்தேன்
- மாற்றம் : உயிர் எழுத்தானது மெய் எழுத்தில் இணைந்து உயிர் மெய்யானது

பிரித்து எழுதுக

- தமிழழகு = தமிழ் + அழகு
- மலரடி = மலர் + அடி
- தேனருவி = தேன் + அருவி
- மாற்றம் ; உயிர் எழுத்துத் தனியே பிரிந்தது

## 9ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

புணர்ச்சி

- நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேருவது புணர்ச்சி ஆகும்.
- வாழை + மரம் = வாழை மரம்
- வாழைமரம் இதில் வாழை, மரம் என்னும் இருசொற்கள் இணைந்து ஒரு சொல்லாகிறது, வாழை என்னும் சொல் நிலைமொழி, அதன் ஈற்றெழுத்து (ழ்+ஐ=ழை) ‘ஐ’ அதனை அடுத்து வரும் (ம் + அ=மா) மரம் என்னும் சொல் வருமொழி,

- அச்சொல்லின் முதல் ம் என்பது இதில் இருசொற்களும் இயல்பாகப் புணர்கின்றன. அதனால் இதனை இயல்புப் புணர்ச்சி என்பர்

வாழை + பழம் = வாழைப்பழம்

வாழை, பழம் ஆகிய சொற்கள் இரண்டும் இணையும் போது , 'ப்' என்னும் மெய் தோன்றுகின்றது. இதனை விகாரப்புணர்ச்சி என்பர். இவ்விகாரப்புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

1. தமிழ் + பாடம் = தமிழ்ப்பாடம் - தோன்றல் புணர்ச்சி
2. கல் + சிலை = கற்சிலை – திரிதல் புணர்ச்சி
3. மரம் +வேர் = மரவேர் – கெடுதல் புணர்ச்சி

குற்றியலுகரப்புணர்ச்சி

- கு,சு,டு,து,பு,று ஆகிய ஆறும் நெடிலடுத்தும் இரண்டு முதலிய பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும் இதனைக் குற்றியலுகரம் என்பர்.
- நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால் நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த வல்லினி மெய்யை விட்டு நீங்கும்.
- (எ.கா.) பந்து + ஆட்டம் = பந்த் + உ + ஆட்டம் – உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் என்னும் விதிப்படி உ நீங்கியது .
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்வே என்னும் விதிப்படி
- பந்த் + ஆட்டம் = பந்தாட்டம் என நிலைமொழி இறுதி மெய் வருமொழியின் முதல் எழுத்தாகிய உயிரோடு இணைந்து புணர்ந்தது.
- குறிப்பு: நிலைமொழி ஈற்று முற்றுகரமும், வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருப்பின் குற்றியலுகரப் புணர்ச்சியைப் போலப் புணரும்,
- (எ.கா.) உயர்வு (வ் + உ) + அடைந்தார் = உயர்வடைந்தார்

- நிலைமொழியின் ஈறு குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதல் எழுத்து, ய கரமாக இருந்து புணரும் போது, உகரம் இகரமாகத் திரியும், இதனைக் குற்றியலிகரப் புணர்ச்சி என்பர்,
- (எ.கா.) குரங்கு + யாது = குரங்கியாது
- டகரம்(ட்) ஊர்ந்து வரும் நெடில் தொடர்க் குற்றியலுகரம் றகரம்(ற்) ஊர்ந்து வரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வருமொழியோடு இணையும போது அவை ஊர்ந்து வரும் ஒற்று இரட்டித்து புணரும்,
- (எ.கா.) காடு + கோழி =காட்டுக்கோழி
- ஆறு + பாலம் =ஆற்றுப்பாலம்

- கிணறு + தவளை = கிணற்றுத்தவளை
- வல்லினத் தொடர்க் குற்றியலுகரம் தவிர ஏணைய குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் அவ்வழிப் புணர்ச்சியில் மிகாது
- (எ.கா.) நாகு + கடிது = நாகு கடிது
- எஃகு + சிறிது = எஃகு சிறிது
- வரகு + தீது = வரகு தீது
- குரங்கு + பெரிது = குரங்கு பெரிது
- தெள்கு + சிறிது = தெள்கு சிறிது
- வேற்றுமைப் புணர்ச்சியில்,இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும் ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகாது,
- (எ.கா.) தெள்கு + கால் = தெள்குகால்
- எஃகு + சிறுமை = எஃகுசிறுமை
- நாகு + தலை= நாகுதலை
- மெல்லினத் தொடர்க் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லினத் தொடராய் முடியும்
- (எ.கா.) செம்பு + குடம்= செப்புக்குடம்
- கரும்பு + நாண் = கருப்புநாண்
- கரும்பு + வில் = கருப்பு வில்
- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்
- பொன் + வளையல் = பொன்வளையல்
- வட்டம் + பலகை = வட்டப்பலகை
- குளம் + கரை = குளக்கரை
- குருத்து + ஓலை = குருத்தோலை
- உலகு + உயிர்கள் = உலகயிர்கள்
- இரும்பு + ஆணி= இருப்பாணி

பொருத்துக

- இயல்பு புணர்ச்சி = பொன்வளையல்
- தோன்றல் விகாரம் = வாழைப்பழம்
- கெடுதல் விகாரம் = மரவேல்
- திரிதல் விகாரம் = கற்கோட்டை

## பிரித்து எழுதுக

**6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1-இயல் 1,2,3**

- ஓலைச்சுவடி = ஓலை + சுவடி
- தமிழ்ப்பணி= தமிழ் + பணி
- குறிஞ்சிப்பாட்டு= குறிஞ்சி+ பாட்டு
- நாய்க்கால் = நாய் + கால்
- நன்கணியர் = நான்கு + அணியர்
- நட்பென்னாம் = நட்பு + என்னாம்
- வேறில்லை =வேறு +இல்லை
- தொழிலனைத்தும் = தொழில் + அனைத்தும்
- இரண்டொழிய = இரண்டு + ஒழிய
- தமிழழகு = தமிழ் + அழகு
- மலரடி = மலரடி
- தேனருவி = தேன் + அருவி ( உயிர் எழுத்து தனித்தே பிரிந்தது )

**6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 2 - இயல் 1,2,3**

- பலரில்-பலர் + இல்
- புறநானூறு = புறம் + நான்கு + நூறு.
- நாற்றிசை = நான்கு + திசை
- ஆற்றுணா = ஆறு + உணா
- அறிவுடையார் = அறிவு + உடையார்
- அஃதுடையார் = அஃது + உடையார்
- நாடில்லை= நாடு+ இல்லை
- இரண்டு + உற + மொழிதல் இரட்டுறமொழிதல்.

**7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1 - இயல் 1,2,3**

- யாதெனின்= யாது+எனின்
- பொய்யாதொழுகின்
- புறந்தூய்மை= புறம் + தூய்மை
- மக்கட்கெல்லாம்= மக்கள் +எல்லாம்
- பிணியின்மை= பிணி + இன்மை
- குலனுடைமை = குல+உடைமை

**7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 2 - இயல் 1,2,3**

- பூங்கோயில்= பூ+கோயில்
- புடைத்தென்னார்= புடை+என்னார்
- என்றுருகுவார்= என்று+உருகுவார்
- அழுக்கில்லா= அழுக்கு+ இல்லா

- அறிவுண்டாம்= அறிவு+உண்டாம்
- அணிவதாலல்லவோ= அணிவது+அலல்லவோ
- உடற்குண்டாம்= உடல்+உண்டாம்
- செவ்விதழ்=செம்மை+இதழ்
- விலையில்லா= விலை +இல்லா
- நேரிங்கே= நேர் + இங்கே
- பூ சேமமுற= பூ + சேமமுற
- தேசமெல்லாம்= தேசம் + எல்லாம்
- பருவப்பெண்= பருவம் + பெண்

**7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 3 - இயல் 1,2,3**

- நெற்கதிர்= நெல்+கதிர்
- மண்ணுண்டோ= மண்+உண்டோ
- நிலவுமுண்டோ =நிலவு+உண்டோ
- நின்னடி= நின்று+ அடி
- கசடற =
- எழுத்தென்ப =எழுது+என்ப
- மணற்கேணி =மணல்+கேணி
- கற்றறிந்தார் =கற்று+ அறிந்தார்

**8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் 1)**
**இயல்-1,2,3**

- பசும்பொற்சுடர் = பசுமை+பொன்+சுடர்
- கண்ணிறைந்த= கண்+நிறைந்த
- செயற்கரிய =செயற்கு +அரிய
- பொருட்டன்று = பொருட்டு+அன்று
- நட்பன்று= நட்பு+அன்று
- ஆறுய்த்து= ஆறு+உய்த்து
- செந்தமிழ்= செம்மை +தமிழ்
- பேச்சுக்கலை=பேச்சு+கலை
- புத்துயிரூட்டி= புது + உயிர்+ ஊட்டி
- சதுரகராதி=சதுர் + அகராதி
- பிணியின்றி=பிணி + இன்றி
- அவையஞ்சான்=அவை + அஞ்சான்
- மாண்புடையார்=மாண்பு + உடையார்
- வேண்டியதில்லை=வேண்டியது + இல்லை
- புகழெனக்கு=புகழெனக்கு

- குவையெனக்கு=குவை + எனக்கு
- தமிழ்ப்பசி=தமிழ் + பசி
- செய்தித்தாள்=செய்தி + தாள்
- ஓரிடம்=ஒரு + இடம்
- தினையளவு=தினை + அளவு
- பனையளவு=பனை + அளவு
- பசுந்தலை=பசுமை + தலை
- மாசிலா=மாசு + இலா
- ஈரிருவர்=இரு + இருவர்
- பைங்குவளை=பசுமை + குவளை
- செந்தாமரை=செம்மை + தாமரை
- இருபதாண்டு=இருபது + ஆண்டு
- மின்னணுவியல்=மின் + அணு + இயல்
- உள்ளங்கை=உள் + அம் + கை
- மேம்பாடடைய=மேம்பாடு + அடைய
- மின்னஞ்சல்=மின் + அஞ்சல்

**8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் 2)**

**இயல்-1,2,3**

- மலர்க்கரம்= மலர் + கரம்
- குவியுமென்று= குவியும் + என்று
- தாய்மையன் பிறனை = தாய்மை + அன்பின் + தனை.
- செங்கதிரவன் = செம்மை + கதிரவன்
- தாய்மையன்பு = தாய்மை + அன்பு
- ஐயாயிரம்= ஐந்து + ஆயிரம்
- வேடமணிந்து= வேடம் + அணிந்து
- சிறையிலடைத்த = சிறையில் + அடைத்த
- தென்னாடு = தெற்கு + நாடு
- மெய்ஞ்ஞானம்=மெய் + ஞானம்
- உடம்பார்=உடம்பு + ஆர்
- ஒன்றுற = ஒன்று + உற
- கோலமிட்டு = கோலம் + இட்டு
- கதையழகு=கதை + அழகு
- ஏட்டிலக்கியம்=ஏடு + இலக்கியம்
- நாடகக்கலை=நாடகம் + கலை
- நூற்றாண்டு=நூறு + ஆண்டு

- தேசியப்பாடல்=தேசியம் + பாடல்
- நாடகம்=நாடு + அகம்
- சண்பகக்காடு=சண்பகம் + காடு
- போதவிழ்=போது + அவிழ்
- வனந்தொறும்=வனம் + தொறும்
- உயிரென=உயிர் + என
- அருந்திறல்= அருமை + திறல்
- ஒற்றைக்கால்= ஒற்றை + கால்
- காட்டுயிரிகள்=காட்டு + உயிரிகள்
- சிற்றாறு=சிறுமை + ஆறு
- புகலிடம்=புகல் + இடம்
- விலங்கினம்=விலங்கு + இனம்
- ஐம்பூதங்கள்=ஐந்து + பூதங்கள்
- வாழிடம்=வாழும் + இடம்

**8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் 3)**
**இயல்-1,2,3**

- எளிதென்ப= எளிது + என்ப
- பயனுடையார்= பயன் + உடையார்
- பண்புடைமை= பண்பு + உடைமை
- பண்புடையார் = பண்பு + உடையார்
- மக்களொப்பு = மக்கள் + ஒப்பு
- கட்டுச்சோறு = கட்டு + சோறு
- திருவுளம் =திரு + உளம்
- இருநிலம்= இரும் + நிலம்
- திருப்புயம்= திரு + புயம்
- பெருந்தவம்= பெருமை + தவம்
- மாசற=மாசு + அற
- தன்னினம்=தன் + இனம்
- தலைவனென=தலைவன் + என
- அரும்பணி=அருமை + பணி
- தமிழன்னை=தமிழ் + அன்னை
- தனித்தமிழ்=தனி + தமிழ்
- செந்தமிழ்ச்செல்வி=செம்மை + தமிழ் + செல்வி
- நன்றியுணர்வு=நன்றி + உணர்வு
- அமுதகிரணம்= அமுதம்+கிரணம்

- பிள்ளைத்தமிழ்= பிள்ளை+தமிழ்
- நகைச்சுவை= நகை+சுவை
- புத்துணர்ச்சி= புத்து+உணர்ச்சி
- மண்ணுலகம்= மண்+உலகம்
- சிற்றிலக்கியம் = சிற்று+ இலக்கியம்
- உள்ளொதுங்கி= உள்+ஒதுங்கி

**9ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1-இயல் 1,2,3**

- தாமுள=தாம் +உள
- விளையாட்டுடையார்= விளையாட்டு + உடையார்
- அலகிலா= அலகு+இலா

1. தவறான இணையைத் தேர்வு செய்க,

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்

ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

இ) கடல் + அலை - உயிர் + மெய்

ஈ) மண் + வளம் - மெய் + மெய்

[விடை: இ) கடல்+அலை - உயிர்+மெய்]

## 8ம் வகுப்பு பழைய புத்தகம்

### புணர்ச்சி

- தமிழ், அமுதம் ஆகிய இரு சொற்களையும் சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். தமிழமுதம் என்று ஒலிக்கிறது அல்லவா?
- இவற்றுள் முதலில் உள்ள சொல்லை நிலைமொழி என்றும் அதனுடன் வந்து சேரும் சொல்லை வருமொழி என்றும் கூறுவர். இவ்விரு சொற்களும் சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைகின்றன. இவ்வாறு நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இணைவதைப் புணர்ச்சி என்கிறோம்.
- நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) சிலை + அழகு = சிலையழகு (லை=ல்+ஐ)
- நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) மண் + அழகு = மண்ணழகு
- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அஃது உயிர்முதல் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) பொன் + உண்டு = பொன்னுண்டு
- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் அஃது மெய்முதல் புணர்ச்சி எனப்படும். (எ.கா.) பொன் + சிலை = பொற்சிலை (சி = ச் + இ)
- இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்
- நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி

ஆகும். (எ.கா.) தாய் + மொழி = தாய்மொழி (இரு சொற்களிலும் எம்மாற்றமும் நிகழவில்லை.)

- உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்கு ல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை.)
- இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம் ஆகும். (எ.கா.) தமிழ் + தாய் = தமிழ்த்தாய்
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரம் ஆகும். (எ.கா.) வில் + கொடி = விற்கொடி
- நிலைமொழியும் வருமொழியும் இணையும்போது ஓர் எழுத்து மறைவது கெடுதல் விகாரம் ஆகும். (எ.கா.) மனம் + மகிழ்ச்சி = மனமகிழ்ச்சி
- இரண்டு சொற்கள் இணையும்போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வதும் உண்டு. (எ.கா.) நாடகம் + கலை = நாடகக்கலை
- இங்குக் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்தது. தோன்றல் விகாரத்தின்படி க் என்னும் மெய்யெழுத்து தோன்றியது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. விகாரப் புணர்ச்சி ---------- வகைப்படும்.

அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

2. 'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி

அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

**பொருத்துக.**

1. மட்பாண்டம் – அ) தோன்றல் விகாரம்
2. மரவேர் – ஆ) இயல்புப் புணர்ச்சி
3. மணிமுடி – இ) கெடுதல் விகாரம்
4. கடைத்தெரு – ஈ) திரிதல் விகாரம்

விடை ஈ, இ ஆ, அ

## 9ம் வகுப்பு புத்தகம்

**புணர்ச்சி**

## நிலைமொழி - வருமொழி

- புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி - வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும்போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு; மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.
- புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொறுத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்..

## புணர்மொழியின் இயல்பு

- எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.
  - கலை + அழகு – உயிரீறு
  - மண் + குடம் – மெய்யீறு
  - வாழை + இலை – உயிர்முதல்
  - வாழை + மரம் – மெய்ம்முதல்
- மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.
  - உயிர்முன் உயிர் – மணி (ண்+இ) + அடி = மணியடி
  - உயிர்முன் மெய் – பனி + காற்று = பனிக்காற்று
  - மெய்ம்முன் உயிர் – ஆல் + இலை = ஆலிலை
  - மெய்ம்முன் மெய் – மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை

## இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப் படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.
  - வாழை + மரம் = வாழைமரம்
  - செடி + கொடி = செடிகொடி
  - மண் + மலை = மண்மலை
- புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை:
- தோன்றல், திரிதல் கெடுதல்.
  - நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)
  - கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)
  - பல் + பசை = பற்பசை (திரிதல்)

- புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

உயிரீற்றுப் புணர்ச்சி

உடம்படுமெய்

- உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர்.
- நிலைமொழியின் ஈற்றில் 'இ,ஈ,ஐ' என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின் முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.
  - மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு
  - தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி
  - ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்
- 'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும் போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.
  - பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்
  - பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்
- நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.
  - சே + அடி = சே + ய் + அடி = சேயடி;
  - சே + வ் + அடி = சேவடி
  - தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்
  - இவனே + அவன் = இவனே +ய் + அவன் = இவனேயவன்
  - இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
  - உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
  - உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
  - (நன்.162)

குற்றியலுகரப் புணர்ச்சி

- வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்
- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.
- குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரங்களுக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.
- உறவு + அழகு = உற(வ் +உ) = உறவ் + அழகு = உறவழகு

- தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.
- நாக்கு, வகுப்பு - வன்தொடர்க் குற்றியலுகரம்
- நெஞ்சு, இரும்பு - மென்தொடர்க் குற்றியலுகரம்
- மார்பு, அமிழ்து - இடைத்தொடர்க் குற்றியலுகரம்
- முதுகு, வரலாறு - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
- எஃகு, அஃது - ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
- காது, பேசு - நெடில் தொடர்க் குற்றியலுகரம்

மெய்ம்மயக்கம்

- புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை' வலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.

எ.கா. மெய் + மயக்கம் = மெய்ம்ம யக்கம்

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி = செய்ந்நன்றி

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய,ர,ழ முன்னர் மெல்லினம் மிகும்.

எ.கா. வேய் + குழல் = வேய்ங்குழல்

கூர் + சிறை = கூர்ஞ்சிறை

பாழ் + கிணறு = பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினம் மிகும்.

எ.கா. புளி + கறி = புளிங்கறி

புளி + சோறு = புளிஞ்சோறு

4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப்
பெயர்களுக்கு முன்னர் மெல்லினமும் மிகும்.

எ.கா. மா + பழம் = மாம்பழம்

விள + காய் = விளங்காய்

5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

எ.கா. பூ + கொடி = பூங்கொடி

பூ + சோலை = பூஞ்சோலை

பூ + தொட்டி = பூந்தொட்டி

# 11ம் வகுப்பு இயல் 1

## மொழி முதல், இறுதி எழுத்துகள்

- சொற்கள் எழுத்தொலிகளால் ஆனவை. அவை நாம் ஒலிப்பதற்கு இனிமையாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும். இதற்குச் சொற்களின் முதலிலும் இறுதியிலும் ஒலிக்கும் எழுத்தொலிகள் காரணமாக அமைகின்றன. சொற்களின் புணர்ச்சியில், முதற்சொல்லின் இறுதி எழுத்தும் வரும் சொல்லின் முதல் எழுத்துமே சந்திக்கின்றன. அவ்வாறு சந்திக்கும் இடத்தில் வரும் எழுத்துகள் எவையெவையென அறிந்துகொள்ள வேண்டும்.
- காவிரி, டமாரம், றெக்கை, பாவை, ராக்கி, கோதை, டப்பா போன்ற சொற்களில் தமிழ்ச்சொற்கள் எவை என்பதை அறிய முடிகிறதா?
- இவற்றுள் காவிரி, பாவை, கோதை ஆகியவை தமிழ்மொழிச் சொற்களாக உள்ளன. டமாரம், றெக்கை, ராக்கி, டப்பா ஆகியவை பிறமொழிச்சொற்களாக உள்ளன. எனவே, சொற்களில் தமிழ்மொழிக்கு உரியவை, பிறமொழிக்கு உரியவை எவையெவை என்பதை அறிந்து பயன்படுத்த வேண்டும். இதற்குச் சொற்களில் எழுத்துகளின் வருகை குறித்து அறிந்துகொள்ள வேண்டும்.

### மொழி முதல் எழுத்துகள் - 22

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
2. மெய்யெழுத்துகள் தனிமெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.
3. மெய்களில் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும்.

(ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்)

4. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.
5. ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

- குறள் என்ற சொல்லை க் + உ + ற் + அ + ள் எனப் பிரிக்கலாம். சொல்லின் முதலில் உள்ள 'கு ' என்னும் உயிர்மெய் எழுத்தை, க் + உ எனப் பிரிக்கும்பொழுது க் என்ற மெய்யெழுத்தே சொல்லின் முதலில் வருவதை அறியலாம்.
- 'ங்' என்னும் மெல்லின மெய் 'விதம்' எனப் பொருள் தரும் 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராது, அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்து அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று வரும். தற்காலத் தமிழில் இவற்றின் பயன்பாடு அரிதாகவே உள்ளது.

- உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லை. ஆனால், தமிழ் இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
- இவ்விலக்கண வரையறைகள் அனைத்தும் எழுத்து மொழிக்கானவையே அன்றி, பேச்சு மொழிக்கானவை அல்ல. மேற்காட்டிய 22 எழுத்துகள் நீங்கலாக உள்ள பிற எழுத்துகள், சொல்லின் முதலில் வந்தால் அவை தமிழ்ச் சொற்களாக இருக்கமாட்டா: பிறமொழிச் சொற்களாகவோ. ஒலிபெயர்ப்புச் சொற்களாகவோ இருக்கின்றன.

மொழிமுதல் எழுத்துகள்

உயிரெழுத்துகள் -12

மெய்யெழுத்துக்கள் - 10

மொத்தம் – 22

மொழி இறுதி எழுத்துகள் - 24

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
2. மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினோரெழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.
3. க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
4. பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக்கொள்வர்.

ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும், இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

மொழி இறுதி எழுத்துகள்

உயிரெழுத்து 12

மெய்யெழுத்து 11

குற்றியலுகரம்1

மொத்தம்24

## 9ம் வகுப்பு புதிய புத்தகம்

### புணர்ச்சி

- நாம் பேசும்போது சில சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி ஒருசொல் போலவே பேசு கிறோம். எழுதும்போதும் அவ்வாறே எழுதுகிறோம். தமிழரசி, நாட்டுப்பண் ஆகிய இச்சொற்க ள் ஒருசொல் வடிவம் உடையன. ஆயினும், இவை இரண்டு சொற்களின் சேர்க்கையாக உள் ளன.
  - தமிழ் + அரசி - தமிழரசி
  - நாடு + பண் - நாட்டுப்பண்

- இவற்றில் முதலில் நிற்கும் சொல்லை 'நிலைமொழி' என்றும் அதனொடு வந்து சேரும் சொல்லை 'வருமொழி' என்றும் அழைப்பர். இவ்வாறு நிலை
- நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்ச்சிக்கு உரியன ஆகும்.

**உயிரீறு, மெய்யீறு**

- நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும்.
- நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது "மெய்யீறு' எனப்படும்.
  - மணி (ண் + இ) + மாலை = மணிமாலை - உயிரீறு; பொன் + வண்டு = பொன்வண்டு - மெய்யீறு

**உயிர்முதல், மெய்ம்முதல்**

- வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும். வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது 'மெய்ம்முதல்' எனப்படும்.

வாழை + இலை = வாழையிலை - உயிர்முதல்; தமிழ் + நிலம் (ந்+இ) = தமிழ்நிலம் - மெய்ம்முதல்

**எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சி**

- சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எண் எழுத்தாகவும் வருமொழி முதலெழுத்தாகவும் எழுத்துகள் சந்திக்கும் முறையை நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

| வ. எண் | ஈற்றெழுத்து முதலெழுத்து | எ.கா. | சந்திப்பு |
|---|---|---|---|
| 1 | உயிர் + உயிர் | மலை + அருவி | ஐ + அ |
| 2 | மெய் + உயிர் | தமிழ் + அன்னை | ழ் + அ |
| 3 | உயிர் + மெய் | தென்னை + மரம் | ஐ + ம் |
| 4 | மெய் + மெய் | தேன் + மழை | ன் + ம் |

**சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி**

- இலக்கண வகையால் சொற்கள் நான்கு வகைப்படும். இவற்றுள் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்தே வருகின்றன. இவ்விரு சொற்களும் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் வந்தாலும் அவற்றின் புணர்ச்சி, எழுத்துகளின் புணர்ச்சியே ஆகும்.

| வ. எண் | நிலைமொழி வருமொழி | எ.கா. |
|---|---|---|
| 1 | பெயர் + பெயர் | கனி + சாறு |
| 2 | பெயர் + வினை | தமிழ் + படி |
| 3 | வினை + வினை | நடந்து + செல் |
| 4 | வினை + பெயர் | படித்த + நூல் |

- புணர்ச்சி என்பது எழுத்துகளின் சந்திப்பாகவும் சொற்களின் சந்திப்பாகவும் அமைகிறது. எனவே, எழுத்துகளும் சொற்களும், ஒலிக்கூறுகளாகவும் பொருள் கூறுகளாகவும் சந்திக்கும் நிகழ்வே புணர்ச்சி ஆகும்.

குற்றியலுகர ஈறு

- சார்பெழுத்துகளுள் ஆய்தம் சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது. குற்றியலுகரமும் (நுந்தை தவிர) குற்றியலிகரமும் இக்காலத்தில் சொல்லின் முதலில் வாரா. ஆயினும், குற்றியலுகரத்தின் ஆறு வகைகளும் சொல்லின் இறுதியில் வருகின்றன. குற்றியலுகர ஈற்றுடன் வரும் நிலைமொழி, குற்றியலுகர ஈறு அல்லது குற்றியலுகர நிலைமொழி எனப்படும்.

| | |
|---|---|
| வீடு + இல்லை = வீடில்லை | நெடில்தொடர்க் குற்றியலுகரம் |
| முரடு + காளை = முரட்டுக்காளை | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| அச்சு + பலகை = அச்சுப் பலகை | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு + கூடு = மார்புக்கூடு | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு + கம்பி = எஃகுக்கம்பி | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |

என் சொல்லுக்கு என்ன மரியாதை எனத் தர்க்கம் பேசுவது இருக்கட்டும் எங்கு இருந்தாலும் நம் மொழிக்கு முதல் இடம் ஏற்படுத்தச் சந்தியுங்கள் இறுதியில் தாய்மொழியை வளப்படுத்தும் தனிவழியைச் சிந்தியுங்கள்.

## 10ம் வகுப்பு பழைய புத்தகம் புணர்ச்சி

- நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது புணர்ச்சி எனப்படும்.இவ்வாறு இருசொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகச் சேர்வது இயல்புப்புணர்ச்சி.

பொன் + வளையல் பொன்வளையல்.

- இருசொற்கள் சேரும்போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விகாரப்புணர்ச்சி என்பர்.

1.வாழை +பழம்=வாழைப்பழம்- தோன்றல்

2. மரம் + வேர் =மரவேர்- கெடுதல்

3. பொன் + குடம்=பொற்குடம்- திரிதல்

இவை குறித்த விளக்கங்களை முன்வகுப்பில் பெற்றீர்கள்.இப்போது திசைப்பெயர்ப் புணர்ச்சி, பண்புப்பெயர்ப் புணர்ச்சி, மகர ஈற்றுப் புணர்ச்சி ஆகியன குறித்துக் காண்போம்.

அ) திசைப்பெயர்ப் புணர்ச்சி

- முதன்மைத் திசைகள் நான்கு.அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன.திசைப்பெயர்களோடு திசைப்பெயரும், பிறபெயரும் சேர்வது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

1. வடக்கு + கிழக்கு =வடகிழக்கு

வடக்கு + மேற்கு =வடமேற்கு

வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு நீங்கிப் புணர்ந்தது.

2. தெற்கு + மேற்கு =தென்மேற்கு

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு என்னும் திசைப்பெயரோடு மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் சேரும்போது, நிலைமொழியின் இறுதியிலுள்ள கு நீங்கும்; பிறகு றகர மெய் னகரமாகிப் புணரும்.

ஆ) திசைப்பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி

1. வடக்கு + மலை=வடமலை.

இதில் நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க்,கு ஆகியன இரண்டும் நீங்கிப் புணர்ந்தது.

2. தெற்கு + திசை = தென்திசை.

இதில் நிலைமொழியின் இறுதியாகிய கு நீங்கியது; அதன் அயல் எழுத்தான ன் ஆக மாறிப் புணர்ந்தது.

3. கிழக்கு + நாடு= கீழ்நாடு.

இங்கு நிலைமொழியின் இறுதியாகிய க்கு நீங்கி, ழ என்னும் உயிர்மெய்யில் (ழ் + அ ) அகரம் நீங்கி, கி என்னும் முதல் எழுத்து கீ என நீண்டு கீழ் + கீழ்நாடு எனப் புணர்ந்தது.

4. மேற்கு + நாடு = மேல்நாடு, மேனாடு

நிலைமொழியில் கு நீங்கியது. அதன்அயலெழுத்தான ற் ல் ஆக மாறி மேல் + நாடு = மேல்நாடு எனவும், ற் ன் ஆக மாறி மேல் + நாடு =மேனாடுஎனவும் இருவகையில் புணர்ந்தன.

திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற. - நன்னூல், 186

பண்புப்பெயர்ப் புணர்ச்சி

நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் பண்புப் பெயர்களாம்.செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, இளமை, புதுமை போல்வனவும் இவற்றுக்குரிய எதிர்ச்சொற்களும் இவைபோன்ற பிறவும் மையீற்றுப் பண்புப்பெயர்கள் எனப்படும்.

1. கருவிழி =கருமை + விழி- கரு+ விழி =கருவிழி

ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து மை நீங்கிப்புணர்ந்தது.

2. பெரியன் = பெருமை + அன் =பெரு+ அன்; பெரி + அன்; பெரி + ய் + அன் = பெரியன்.

ஈறு போதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து, மை நீங்கிப் பின் பெரு என்பதன் இறுதி உகரம் இடைஉகரம் ஆதல் எனும் விதிப்படி பெரி யாகிப் பின் யகர உடம்படுமெய் பெற்றுப் பெரி + ய் + அன் என்பது உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, ய் + அ = ய என்றாகிப் பெரியன் எனப் புணர்ந்தது.

3. பாசிலை =பசுமை + இலை- பசு + இலை; பாசு + இலை; பாச் + இலை= பாசிலை.

நிலைமொழி ஈறுகெட்டு ஆதி நீடல் என்னும் விதிப்படி, பாசு + இலை என்றாகியது.உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் எனும் விதிப்படி, பாச் + இலை என்றாகிப் பின், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி பாசிலை எனப் புணர்ந்தது.

4. பைங்கூழ் = பசுமை + கூழ் - பசு+ கூழ், பைசு+கூழ், பை + கூழ்; பைங் + கூழ் = பைங்கூழ்

ஈறுபோதல் என்னும் விதிப்படி மை நீங்கியது.(பசு + கூழ்) அடிஅகரம் ஐ ஆதல் எனும் விதிப்படி ப - பை ஆனது.இனையவும் என்னும் விதிப்படி உயிர்மெய் (சு) கெட்டது.இனமிகல் என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான க் எழுத்துக்கு இனமான ங் மிகுந்து பைங்கூழ் எனப் புணர்ந்தது.

5. சிற்றோடை=சிறுமை + ஓடை - சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற் + ஓடை = சிற்றோடை.

ஈறுபோதல் என்னும் விதிப்படி மை கெட்டது.தன்னொற்று இரட்டல் என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது.பின் உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் எனும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது.பின்னர் உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.

6.சேதாம்பல் = செம்மை + ஆம்பல் - செம் + ஆம்பல், சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல்

ஈறுபோதல் விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் ஆதி நீடல் விதிப்படி – சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் முன்னின்ற மெய் திரிதல் என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.

7. கருங்குயில் =கருமை + குயில்- கரு + குயில்=கருங்குயில்.

ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது. இனமிகல் என்னும் விதிப்படி வருமொழி ககரத்திற்கு ( கு ) இனமான மெல்லெழுத்து ங் மிகுந்து, கருங்குயில் எனப் புணர்ந்தது.

ஈறு போதல், இடையுகரம் இய்யாதல்,
ஆதி நீடல், அடியகரம் ஐயாதல்,
தன்னொற் றிரட்டல், முன்னின்ற மெய்திரிதல்,
இனமிகல், இனையவும் பண்பிற் கியல்பே.-நன்னூல், 136

ஈ) மகரஈற்றுப் புணர்ச்சி

1. மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு சேரும்பொழுது, இறுதி மகரம் (ம்) கெட்டு, உயிரீறு போல நின்று, உயிர்முதல் மொழியோடு உடம்படுமெய் பெற்றுப் புணரும்.

மரம் + அடி; மர + அடி; மர + வ் + அடி= மரவடி.

2. நிலைமொழியின் மகர ஈறுகெட்டு வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து மிக்குப் புணரும்.

வட்டம் + கல் = வட்டக்கல் எனப் புணரும்.

3. நிலைமொழியின் மகரஈறு வருமொழி முதலிலுள்ள வல்லினத்திற்கு இன னமான மெல்லினமாகத் திரிந்து புணரும்.

(எ-டு) நிலம் + கடந்தான் = நிலங்கடந்தான்.

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்

வன்மைக்கு இனமாய்த் திரிபவும் ஆகும்.நன்னூல், 219

புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது.............

1. நிலைமொழி ஈறு நீங்கும்.

2. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்.

3. வருமொழி முதல் கெடும்.

ஆ) மேற்கு+ நாடு என்பது............. எனச் சேரும்.

1.மேற்கு நாடு

2. மேநாடு

3. மேனாடு

இ). கருமை + குழி என்பது...........எனும் விதிகளின்படி புணரும்

1. ஆதிநீடல், இனமிகல்

2. தன்னொற்றிரட்டல், இடையுகரம்இஆதல்

3. ஈறுபோதல், இனமிகல்

2. பொருத்துக.

1.ஈறுபோதல் -வெற்றிலை

2. ஆதிநீடல் -செந்தமிழ்

3. இனமிகல் - செம்மொழி

4.தன்னொற்றிரட்டல் – மூதூர்

3412

1.ஈறுபோதல் - செம்மொழி

2. ஆதிநீடல்– மூதூர்

3. இனமிகல் – வெற்றிலை

4. தன்னொற்றிரட்டல் - செந்தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

## வல்லினம் மிகும், மிகா இடங்கள்

- சொல்லுக்கு முதலில் வரும் வல்லின எழுத்துகளாவன க், ச், த், ப்.இவை நிலைமொழிச் சொற்களோடு சேரும்போது சில இடங்களில் மிகுந்தும், சில இடங்களில் மிகாமலும் வரும். இவற்றையே வலிமிகுமிடங்கள், வலிமிகா இடங்கள் என்பர் (வலி – வல்லினம்) .

அ) வல்லினம் மிகுமிடங்கள்

1. நிலைமொழி உயிரீற்றுச் சொல் முன் வல்லினம் (க்,ச்,த்,ப்) மிகும்.

கறி + குழம்பு= கறிக்குழம்பு

பலா+ சுளை= பலாச்சுளை

வழி+ தடம் = வழித்தடம்

பாட்டு+ போட்டி = பாட்டுப்போட்டி

2. அ, இ உ என்னும் சுட்டெழுத்துகள் முன்னும், எ என்னும் வினா எழுத்தின் முன்னும் வல்லினம் மிகும்.

அ+ கடை = அக்கடை

இ + சட்டை =இச்சட்டை

உ + பக்கம்= உப்பக்கம் (செய்யுள் வழக்கு)

எ + பாடம் = எப்பாடம்

3. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

அந்த + கோவில் =அந்தக்கோவில்

இந்த + சட்டி=இந்தச்சட்டி

எந்த + தோட்டம்=எந்தத்தோட்டம்

4. அப்படி, இப்படி, எப்படிஎன்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

அப்படி + கூறினான் =அப்படிக்கூறினான்.

இப்படி + தாவினான் =இப்படித்தாவினான்.

எப்படி + சொன்னான் = எப்படிச்சொன்னான்.

5. இரண்டாம் வேற்றுமை (ஐ) விரியில் வரும் வல்லினம் மிகும்.

பாரியை + கண்டான் = பாரியைக்கண்டான்.

பொருளை + சேர்த்தான் = பொருளைச்சேர்த்தான்.

அவனை+ தடுத்தான் = அவனைத்தடுத்தான்.

நிலவை + பார்த்தான் = நிலவைப்பார்த்தான்.

6. நான்காம் வேற்றுமை (கு) விரியில் வரும் வல்லினம் மிகும்.

எனக்கு + கொடு = எனக்குக்கொடு.

குழந்தைக்கு + சோறு = குழந்தைக்குச்சோறு.

அவளுக்கு + தா = அவளுக்குத்தா.

பாப்பாவுக்கு + பாட்டு = பாப்பாவுக்குப்பாட்டு

7. ஓரெழுத்து ஒருமொழியில் வரும் க, ச, த, ப மிகும்.

ஈ+ கால்= ஈக்கால்

தீ+ சட்டி = தீச்சட்டி

கை + தடி = கைத்தடி

தை + பொங்கல் = தைப்பொங்கல்

8. வன்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் வரும் வல்லினம் மிகும்.

கொக்கு+ கால் = கொக்குக்கால்

9. இகர ஈற்றுச் செய்து என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

ஓடி + போனான் =ஓடிப்போனான்.

10. அகரஈற்றுச் செய என்னும் எச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகும்.

பாட + கேட்டேன்= பாடக்கேட்டேன்.

தேட+ சென்றாள்=தேடச்சென்றாள்.

பாட + தெரியுமா?=பாடத்தெரியுமா?

ஓட + பார்த்தான்=ஓடப்பார்த்தான்.

11. சால, தவ என்னும் உரிச்சொற்கள்முன் வரும் வல்லினம் மிகும்.

சால + பசி = சாலப்பசி

தவ + கோலம்=தவக்கோலம்.

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வல்லினம் மிகும்.

காணா + கண்கள் = காணாக்கண்கள்

கேளா+ செவி= கேளாச்செவி

ஓடா + தேர் = ஓடாத்தேர்

நாறா + பூ= நாறாப்பூ

வல்லினம் மிகா இடங்கள்

1. வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

விடு + கணை = விடுகணை

விரி + சுடர் = விரிசுடர்

தோய் + தயிர் = தோய்தயிர்

பாய் + புலி = பாய்புலி

2. உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

காய்+ கனி=காய்கனி

தாய்+ தந்தை = தாய்தந்தை

முத்து + பவளம்=முத்துபவளம்

3.இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

கதை + சொன்னார்=கதை சொன்னார்.

கடல்+ தாவினான் =கடல் தாவினான்.

புகழ் + பெற்றார் =புகழ் பெற்றார்.

4. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.

கற்க + கசடற =கற்க கசடற

வளர்க + சிந்தனை =வளர்க சிந்தனை

வாழ்க+ தமிழ்=வாழ்க தமிழ்

காண்க+ படம்= காண்க படம்

5. விளித்தொடரை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

முருகா + கேள்= முருகா கேள்

கண்ணா + சொல்= கண்ணா சொல்.

கிளியே + தா= கிளியே தா.

அண்ணா + போ=அண்ணா போ.

6. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது.

கடகட, தடதட, சட்சட், படபட

7. அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள், எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

அவை + பறவைகள் = அவை பறவைகள்

இவை + சட்டைகள் =இவை சட்டைகள்

அவை+ தடங்கள் =அவை தடங்கள்

எவை + படங்கள் = எவை படங்கள்

8. அது, எது எனும் சுட்டுச்சொற்களை அடுத்துவரும் வல்லினம்மிகாது.

அது + கூடை= அது கூடை

இது + சட்டி=இது சட்டி

அது + தோணி =அது தோணி

இது + பாடம்=இது பாடம்

9.பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர் (படித்து என்பதுபோல் வன்றொடர்க் குற்றியலுகரச்சொல் அல்லாதவை ) ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

வந்த + கயல்விழி = வந்த கயல்விழி

தைத்த + சட்டை = தைத்த சட்டை

வந்து+ தந்தான்= வந்து தந்தான்

செய்து + பார்த்தான்=செய்து பார்த்தான்

10.எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது.

கண்ணகி+பார்த்தாள் = கண்ணகி பார்த்தாள்

தங்கை + கேட்டாள் = தங்கை கேட்டாள்

பூவிழி + தந்தாள் = பூவிழி தந்தாள்

## 11ம் வகுப்பு இயல் 2 இயல் 2 புணர்ச்சி விதிகள்

- சொற்புணர்ச்சியின்போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர். மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்துகொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

அ) உடம்படுமெய்ப் புணர்ச்சி

- நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துகளாய் இருந்தால், உச்சரிப்பின்போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும். எனவே. உடன்படாத அவ்விரு மொழிகளையும் சேர்த்துப் புணர்க்க வரும் மெய், உடம்படுமெய் ஆகும். பதினெட்டு மெய்களுள் ய், வ் ஆகிய இரு மெய்கள் மட்டும் உடம்படுமெய்களாக வரும்.

காட்சியழகு - காட்சி + ய் + அழகு (இகர ஈறு)

தீயணைப்பான் – தீ + ய் + அணைப்பான் (ஈகார ஈறு )

கலையறிவு - கலை + ய் + அறிவு (ஐகார ஈறு)

மாவிலை - மா + வ் + இலை (ஆகார ஈறு)

பூவழகு - பூ + வ் + அழகு ( ஊகார ஈறு )

சேயிழை - சே + ய் + இழை

சேவடி - சே + வ் + அடி – (ஏகார ஈறு யகர, வகர உடம்படுமெய்கள் பெற்று வருகின்றன)

| | |
|---|---|
| இ ஈ ஐவழி யவ்வும் ஏனை<br>உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்<br>உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்<br>( நன்னூல் – 162 ) | இ, ஈ, ஐ } – ய்<br>பிற உயிர்கள் – வ்<br>ஏ – ய், வ் |

ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

i) குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

மாசற்றார் மாசு + அற்றார்

மாசு(ச்+உ) + அற்றார் -

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி 'உ'மறைந்தது.

மாச் + அற்றார் -

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் ( நன்னூல்-164 )

ii) ட், ற் என்னும் இரு மெய்களோடு ஊர்ந்துவரும் நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும்போது ஒற்று இரட்டித்துப் புணரும்.

வீடு + தோட்டம் - வீட்டு + தோட்டம் - வீட்டுத்தோட்டம்

காடு + மரம் - காட்டு மரம்

முரடு + காளை - முரட்டு + காளை - முரட்டுக்காளை

பகடு + வாழ்க்கை - பகட்டுவாழ்க்கை

சோறு + பானை - சோற்று + பானை - சோற்றுப்பானை

ஆறு + நீர் - ஆற்றுநீர்

வயிறு + பசி - வயிற்று + பசி - வயிற்றுப்பசி

கயிறு + வண்டி - கயிற்றுவண்டி

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்

டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே. (நன்னூல்-183)

இ) முற்றியலுகரப் புணர்ச்சி

- நிலைமொழியின் இறுதியில் உள்ள முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலவே தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

வரவறிந்தான் – வரவு + அறிந்தான்

வரவு (வ் +உ) + அறிந்தான் - 'முற்றும் அற்று ஒரோவழி' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

வரவ் + அறிந்தான் -

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வரவறிந்தான்" எனப் புணர்ந்தது.

முற்றும் அற்று ஒரோவழி (நன்னூல்-164)

ஈ) இயல்பீறு, விதியீறு - புணர்ச்சி

- இயல்பீராகவோ விதியீறாகவோ வரும் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உயிரெழுத்துடன், கசதப என்னும் வல்லின மெய்களை முதலில்கொண்ட வருமொழிச்சொல் சேரும்போது அவற்றிடையே வல்லொற்று மிகுந்து புணரும்.

இயல்பீறு என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம்

பள்ளி + தோழன் - பள்ளித்தோழன்

விதியீறு என்பது புணர்ந்தபின் நிற்கும் சொல்லின் வடிவம்

நிலம் + தலைவர் - நில + தலைவர் ( விதியீறு ) - நிலத்தலைவர்

திரைப்படம் - திரை + படம்

திரை + ப் + படம் -

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும் 'என்னும் விதிப்படி' திரைப்படம்'எனப் புணர்ந்தது.

மரக்கலம் – மரம் + கலம் – மவ்வீறு ஒற்றழிந்து உயிரிறு துப்பவும் என்னும் விதியின்படி

மர + கலம் -

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி 'மரக்கலம்' எனப் புணர்ந்தது.

இயல்பினும் விதியினும் நின்ற க ச த ப மிகும்; விதவாதன மன்னே. (நன்னூல்-165)

உ) பூப்பெயர்ப் புணர்ச்சி

- பூ என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியின் முதலில் வல்லின மெய்யெழுத்துகள் வரும்போது வல்லினமெய் மிகுந்து புணர்வது மட்டுமன்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு. எனினும், மெல்லின மெய் மிகுதலே பெருவழக்காக உள்ளது.

பூ + கொடி - பூக்கொடி, பூங்கொடி

பூ + சோலை - பூச்சோலை, பூஞ்சோலை

பூ + தொட்டி - பூத்தொட்டி, பூந்தொட்டி

பூ + பந்து - பூப்பந்து, பூம்பந்து

பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும் (நன்னூல்-200]

ஊ) மெய்யீற்றுப் புணர்ச்சி

- நிலைமொழியீற்றின் இறுதி எழுத்து, மெய்யெழுத்தாக நிற்க வருமொழியின் முதலாக வரும் உயிரெழுத்துடனும் மெய்யெழுத்துடனும் சேரும் புணர்ச்சியை மெய்யீற்றுப் புணர்ச்சி என்பர்.

வாயொலி - வாய் + ஒலி -

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி 'வாயொலி' எனப் புணர்ந்தது.

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன்னூல் - 204)

மண் + மகள் -

மண்மகள் என்பதில் நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் மெய்யெழுத்தாக நிற்க இயல்பாகப் புணர்ந்தது.

எ) தனிக்குறில்முன் ஒற்று - புணர்ச்சி

- நிலைமொழி தனிக்குறில் சார்ந்த மெய்யெழுத்தாக நின்று, வருமொழியின் முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.

கல் + அதர் - கல்லதர் - தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

கல்ல் + அதர் -

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி கல்லதர் எனப் புணர்ந்தது.

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன்னூல்205)

ஏ) மகர ஈற்றுப் புணர்ச்சி

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்.

- மகரமெய் கெட்டுப் புணரும்
- மகரமெய் கெட்டு தின மெல்லெழுத்துத் தோன்றிப் புணரும்.
- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.

பாடம் + வேளை - பாடவேளை - மகரமெய் கெட்டுப் புணர்ந்தது.

பழம் + தோல் - பழ + தோல் - பழத்தோல்

- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

காலம் + கடந்தவன் - காலங்கடந்தவன்

- வருமொழி முதலெழுத்துக்கேற்ப மகரமெய் திரிந்து புணர்ந்தது.

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்

வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் (நன்னூல்-219)

ஐ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

பண்புப்பெயர்ச்சொல் நிலைமொழிச் சொல்லாக நின்று வருமொழிச்சொல்லுடன் புணரும்போது பின்வரும் மாற்றங்களை அடையும்.

1. நிலைமொழியின் இறுதியில் உள்ள மை கெட்டுப் புணரும்.

பெருவழி - பெருமை + வழி -

'ஈறுபோதல்' விதிப்படி 'மை' விகுதி கெட்டுப் பெருவழி எனப் புணர்ந்தது.

2. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாகத் திரியும்.

பெரியன் - பெருமை + அன்

பெரு + அன் - ஈறுபோதல்

பெரி + அன் - இடை உகரம் இய்யாதல்

பெரி + ய் + அன் - உடம்படுமெய் 'ய்' இடையில் தோன்றும்

பெரியன் - (ய்+அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

3. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள குறில் எழுத்து நெடில் எழுத்தாய் மாறும்.

மூதூர் - முதுமை + ஊர்

முது + ஊர் - ஈறுபோதல்

மூது + ஊர் - ஆதிநீடல்

மூத் + ஊர் - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

மூதூர் - (த்+ஊ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

4. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள அகரம் ஐகாரமாக மாறும்.

பைந்தமிழ் - பசுமை + தமிழ்

பசு + தமிழ் - ஈறுபோதல்

பைசு + தமிழ் - அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தமிழ் இனையவும் 'சு' கெட்டது

பைந்தமிழ் - (ந்) இனமிகல் என்னும் விதிப்படி.

5. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.

நெட்டிலை - நெடுமை + இலை

நெடு + இலை - ஈறுபோதல்

நெட்டு + இலை - தன்னொற்றிரட்டல்

நெட்ட் + இலை - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

நெட்டிலை - (ட்+இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் தன்னொற்றிரட்டல் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

வெற்றிலை - வெறுமை + இலை - வெற்று + இலை - வெற்றிலை எனப் புணர்ந்தது.

**6. ஈறுபோதல் விதியின்படி மை செட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் "முன் நின்ற மெய் திரிதல்' விதியின்படி புணரும்.**

செந்தமிழ் செம்மை + தமிழ்

செம் + தமிழ் - ஈறுபோதல்

செம் + தமிழ் - (ம்-ந்) முன் நின்ற மெய் திரிதல்

**7. ஈறுபோதல் விதியின்படி மைவிகுதி கெட்டு, நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாய் இருந்து வருமொழி வல்லின மெய்யாக இருப்பின் "இனமிகல்'விதியின்படி புணரும்.**

tnpscbooks

கருங்கடல் - கருமை + கடல்

கரு + கடல் - ஈறுபோதல்

கரு + கடல் - (ங்) இனமிகல்

**8. மை விகுதி கெட்டு நிற்கும் நிலைமொழியின் இறுதி எழுத்து மேற்சொன்ன எவ்விதியிலும் பொருந்தாதிருப்பின் இனையவும் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.**

பைந்தளிர் - பசுமை + தளிர்

பசு + தளிர் - ஈறுபோதல்

பைசு + தளிர் - அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தளிர் – இனையவும்

பை + தளிர் - (ந்) இனமிகல்

ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்

ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்

தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்

இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே (நன்னூல்-136)

# 11ம் வகுப்பு இயல் 7 ஆக்கப்பெயர்கள்

- உலகிலுள்ள அனைத்துப்பொருள்களும். பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. முன்னோர்கள் சில பொருள்களுக்குக் காரணம் கருதியும் சில பொருள்களுக்குக் காரணமின்றியும் பெயர் வைத்தனர்.
- இலை, மண், கல், நாற்காலி, காற்றாடி எனப் பெயர்களை நினைவில் கொண்டுவரும்போது இவற்றுள் காரணத்தோடு வரும் பெயர்களை உணர்ந்துகொள்ள முடிகிறது. காலப்போக்கில் பொருளின் மாற்றத்தால் அவை பயன்படுத்தப்படும் நிலைமைக்கேற்றவாறு காரணப்பெயர்கள் சிலநேரங்களில் இடுகுறிப்பெயர்களாகி விடுகின்றன.
- மரத்தால் செய்யப்பட்டுப் பின்புறம் சாய்ந்துகொள்ளவும் கைகளை வைத்துக்கொள்ள வசதியாகவும் நான்கு கால்களைக் கொண்ட இருக்கைக்கு நாற்காலி எனக் காரணம் கருதிப் பெயர் வைத்தனர்.
- ஆனால், இன்று நான்குகால்கள் இல்லாத இருக்கை சிலவற்றையும் நாற்காலி என்றே அழைக்கிறோம். ஒருகாலத்தில் காரணம் கருதி வழங்கப்பட்ட ஒரு பொருளுக்கான பெயர் இன்று இடுகுறியாக வழங்கப்படுகிறது.
- காலச் சூழலுக்கேற்றவாறு நம் பயன்பாட்டிற்கெனப் பல்வேறு பெயர்களைப் புதியதாக ஆக்கிக்கொள்கிறோம். அவை இடுகுறியாகவும் இருக்கலாம்; காரணமாகவும் இருக்கலாம். இவ்வாறு, புதியதாக ஆக்கப்படும் சொல் ஆக்கப்பெயர் என அழைக்கப்படுகின்றது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது பழமொழி. இதில் ஆத்திரம் கொண்ட ஒருவனைக் குறிப்பிட காரன் என்னும் விகுதி சேர்த்து ஆத்திரக்காரன் என்னும் சொல்லை உருவாக்குகிறோம்.
- பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் (Derivative noun) எனப்படும். இவ்வாறு பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.

  தமிழில் ஆக்கப்பெயர் விகுதிகள்

  காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம்
- ஆக்கப் பெயர்களில் விகுதிகளே தனிச்சிறப்பு உடையன. தமிழ்ச்சொற்களோடு இவ்வகையான விகுதிகள் சேரும்போது எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகித் தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகின்றது. தமிழ்மொழியில் ஆக்கப்பெயர்கள் பேச்சு வழக்கிலேயே மிகுதியாக உள்ளன.

  மலர்ந்த மலரைக்

  கண்டு வாடினாள்

  பூக்காரி
- இத்துளிப்பாவில் பூ விற்கும் பெண். பூக்காரி என்று அழைக்கப்படுகிறார். மேலும். நெசவு

செய்பவரை நெசவாளி/நெசவாளர் என்றும் உழைப்பவரை உழைப்பாளி/ உழைப்பாளர் என்றும் அழைக்கப்படுகிற ஆக்கப்பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன.

தெரியுமா?

- வண்டிக்காரன், சினிமாக்காரன், மாட்டுக்காரன், வீட்டுக்காரன், ஆட்டோக்காரன் போன்ற சொற்கள் எல்லாம் காரன் விகுதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெயர்கள் என்பதை அறிவீர்களா?
- அறிவியல், திறமைசாலி, கோழைத்தனம், சமத்துவம், பெண்ணியம், பேச்சாளன். ஏற்றுமதி முதலான சொற்கள் ஆக்கப்பெயர்ச்சொற்களே என்பதை உணரவேண்டும். இச்சொற்களில் இயல், சாலி, தனம், துவம், இயம், ஆளன், மதி ஆகிய விகுதிகள் சேர்ந்து ஆக்கப் பெயராக்கப்பட்டுள்ளன.
- கண்டறிக: குரங்காட்டி, வண்டியோட்டி, பழந்தின்னி, வாயாடி, குடித்தனம், நீதிமான் இச்சொற்களைப் பிரித்து ஆக்கப்பெயர் விகுதிகளைக் கண்டறிக.
- ஆக்கப்பெயர்ச்சொற்களை ஈற்றில் நிற்கும் விகுதிகளைக் கொண்டு மூவகையாகப் பிரிக்க லாம். அவை

1. பெயருடன் சேரும் விகுதிகள்
2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்
3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

1. பெயருடன் சேரும் விகுதிகள் (காரன், காரர், காரி, ஆள், ஆளி, தாரர்)

| பெயர் + விகுதி | = ஆக்கப்பெயர் |
|---|---|
| வண்டி + காரன் | = வண்டிக்காரன் |
| சமையல் + காரர் | = சமையல்காரர் |
| வேலை + காரி | = வேலைக்காரி |
| பணி + ஆள் | = பணியாள் |
| ஆணை + ஆளர் | = ஆணையாளர் |
| குற்றம் + ஆளி | = குற்றவாளி |
| விண்ணப்பம் + தாரர் | = விண்ணப்பதாரர் |

- காரன், காரி, காரர் ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில்
அல்லது ஆளுதல் என்னும் நான்கு பொருள்களில் வரும்.

வீடு + காரன் – வீட்டுக்காரன் - உடைமை

தமிழ்நாடு + காரி – தமிழ்நாட்டுக்காரி - உரிமை

உறவு + காரர் – உறவுக்காரர் – உறவு

தோட்டம் + காரர் – தோட்டக்காரர் - தொழில்

- தொழிற்பெயர் விகுதிகளுடன் "ஆளர்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து சொற்கள்

உருவாகின்றன.

'ஆளர்'

'ஆளி' முதலான விகுதிகள் இருபாற்பொதுப்பெயர்களை உருவாக்கத் துணை நிற்கின்றன.

| தொழிற்பெயர் விகுதி | தொழிற்பெயர் | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| சி | ஆட்சி | ஆட்சியாளர் |
| அல் | செயல் | செயலாளர் |
| தி | செய்தி | செய்தியாளர் |
| மதி | இறக்குமதி | இறக்குமதியாளர் |
| வை | பார்வை | பார்வையாளர் |
| வு | தேர்வு | தேர்வாளர் |
| பு | அழைப்பு | அழைப்பாளர் |

| ஆளர் | | | | |
|---|---|---|---|---|
| உதவி | + | ஆளர் | = | உதவியாளர் |
| காப்பு | + | ஆளர் | = | காப்பாளர் |
| மேல் | + | ஆளர் | = | மேலாளர் |
| கண்காணிப்பு | + | ஆளர் | = | கண்காணிப்பாளர் |
| தயாரிப்பு | + | ஆளர் | = | தயாரிப்பாளர் |

| ஆளி | | | | |
|---|---|---|---|---|
| நெசவு | + | ஆளி | = | நெசவாளி |
| முதல் | + | ஆளி | = | முதலாளி |
| தொழில் | + | ஆளி | = | தொழிலாளி |
| பயன் | + | ஆளி | = | பயனாளி |
| கூட்டு | + | ஆளி | = | கூட்டாளி |

tnpscbooks

## 2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்

வினையடியுடன் 'மானம்' என்னும்விகுதி சேர்ந்து புதிய சொற்கள் உருவாகின்றன.

வினை விகுதி ஆக்கப்பெயர்

அடை + மானம் = அடைமானம்

கட்டு + மானம் = கட்டுமானம்

தேய் + மானம் = தேய்மானம்

## 3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

பெயருடன் சேர்ந்து வரும் விகுதிகள்.

பெயர் விகுதி ஆக்கப்பெயர்

அச்சு அகம் அச்சகம்

வினையுடன் சேர்ந்து வரும் விகுதிகள்

வினை விகுதி ஆக்கப்பெயர்

பயில் அகம் பயிலகம்

இவ்வாறு, தமிழில் எண்ணற்ற ஆக்கப் பெயர்ச்சொற்கள் விரவிக் கிடக்கின்றன. இவ்வகையான சொற்கள் தம் மொழிக்குப் புதிய புதிய சொற்களை உருவாக்குவதோடு நில்லாமல், மொழி காலந்தோறும் வளர்வதற்கும் துணை நிற்கின்றன.

## சேர்த்து எழுதுக

### ஆறாம் வகுப்பு புதிய புத்தகம்

**இன்பத்தமிழ்**

- நிலவு + என்று = நிலவென்று
- தமிழ் + எங்கள் = தமிழெங்கள்
- அமுது + என்று = அமுதென்று
- இன்பம் + தமிழ் = இன்பத்தமிழ்
- மணம் + என்று = மணமென்று

**தமிழ்க்கும்மி**

- பாட்டு+ இருக்கும் = பாட்டிருக்கும்
- எட்டு + திசை = எட்டுத்திசை
- இளமை + கோதையர் = இளங்கோதையர்
- பூட்டு + அறுக்கும் = பூட்டறுக்கும்
- அறம் + மேன்மை = அறமேன்மை
- பல + நூறு = பலநூறு
- ஊற்று + எனும் = ஊற்றெனும்

**வளர் தமிழ்**

- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்
- கணினி + தமிழ் = கணினித்தமிழ்
- செம்மை + மொழி செம்மொழி
- பாகு + அல் + காய் - பாகற்காய்

**சிலப்பதிகாரம்**

- கொங்கு + அலர் = கொங்கலர்
- அவன் + அளிபோல் = அவன்வளிபோல்

**காணி நிலம்**

- முத்து + சுடர் = முத்துச்சுடர்
- நிலா + ஒளி = நிலாவொளி
- இளமை + தென்றல் - இளந்தென்றல்
- பத்து + இரண்டு - பன்னிரண்டு

**சிறகின் ஓசை**

- தரை + இறங்கும் = தரையிறங்கும்
- வழி + தடம் = வழித்தடம்
- முதலெழுத்தும், சார்பெழுத்தும்
- சார்பு + எழுத்து = சார்பெழுத்து
- முதல் + எழுத்து = முதெலழுத்து
- உயிர் + எழுத்து = உயிரெழுத்து
- மெய் + எழுத்து = மெய்யெழுத்து
- குறுமை + இயல் + உகரம் = குற்றியலிகரம்

**அறிவியல் ஆத்திசூடி**

- ஏன் + என்று ஏனென்று
- ஔடதம் + ஆம் = ஔடதமாம்

**அறிவியலால் ஆள்வோம்**

- நீலம் + வான் = நீலவான்
- இல்லாது + இயங்கும் = இல்லாதியங்கும்

**கணியனின் நண்பன்**

- மருத்துவம் + துறை = மருத்துவத்துறை
- செயல் + இழக்க = செயலிழக்க

**மூதுரை**

- குற்றம் + இல்லாதவர் = குற்றமில்லாதவர்
- சிறப்பு + உடையார் = சிறப்புடையார்

**துன்பம் வெல்லும் கல்வி**

- மானம் + இல்லா = மானமில்லா

**கல்விக்கண் திறந்தவர்**

- காடு+ஆறு = காட்டாறு

**ஆசாரக்கோவை**

- அறிவு + உடைமை = அறிவுடைமை
- இவை + எட்டும் = இவையெட்டும்

**கண்மணியே கண்ணுறங்கு**

- வாழை + இலை = வாழையிலை
- கை + அமர்த்தி= கையமர்த்தி
- மூன்று + தேன் = முத்தேன்
- மூன்று + கனி = முக்கனி
- மூன்று + தமிழ் = முத்தமிழ்
- பூ + சோலை = பூஞ்சோலை
- நன்மை + தமிழ் = நற்றமிழ்

**திருக்குறள்**

- பொருளுடைமை = பொருள்+உடைடை
- உள்ளுவது+எல்லாம் = உள்ளுவதெல்லாம்
- பயன் + இலா = பயனிலா
- நானிலம் படைத்தவன்
- நாடு+ என்ற = நாடென்ற
- கலம்+ ஏறி = கலமேறி

**கடலோடு விளையாடு**

- பெருமை + வானம் = பெருமானம்
- அடிக்கும் + அலை = அடிக்குமலை

**வளரும் வணிகம்**

- வணிகம் + சாத்து = வணிகச்சாத்து
- பண்டம் + மாற்று = பண்டமாற்று
- பாரதம் அன்றைய நாற்றங்கால்
- எதிர் + ஒலிக்க = எதிரொலிக்க

**பராபரக்கண்ணி**

- தம் + உயிர் = தம்முயிர்
- இன்புற்று + இருக்கை = இன்புற்றிருக்கை

**ஆசியஜோதி**

- இனிமை + உயிர் = இன்னுயிர்
- மலை + எலாம் =மலையெலாம்

**ஏழாம் வகுப்பு புதிய புத்தகம்**

**எங்கள் தமிழ் (நாமக்கல் கவிஞர்)**

- வான் + ஒலி = வானொலி

**ஒன்றல்ல இரண்டல்ல**

- ஒப்புமை + இல்லாத = ஒப்புமையில்லாத

**காடு (கவிஞர் சுரதா)**

- கிழங்கு + எடுக்கும் = கிழங்கெடுக்கும்

**விலங்குகள் உலகம்**

- நேரம் + ஆகி = நேரமாகி
- வேட்டை + ஆடிய = வேட்டையாடிய

**நால்வகைக் குறுக்கங்கள்**

- வாழை + காய் = வாழைக்காய்
- வாழை + பழம் = வாழைப்பழம்
- குருவி + கூடு = குருவிக்கூடு
- குருவி + கூட்டம் = குருவிக்கூட்டம்
- விளையாட்டு + திடல்= விளையாட்டுத்திடல்
- விளையாட்டு + போட்டி = விளையாட்டுப்போட்டி
- தயிர் + சோறு = தயிர்ச்சோறு
- கொய்யா + காய் = கொய்யாக்காய்
- கொய்யா + பழம் = கொய்யாப்பழம்
- அவரை +காய் = அவரைக்காய்
- பாட்டு + போட்டி = பாட்டுப்போட்டி
- பறவை + கூடு = பறைவக்கூடு
- பறவை + கூட்டம் = பறவைக்கூட்டம்

**திருக்குறள்**

- தன் + நெஞ்சு = தன்நெஞ்சு
- தீது + உண்டோ = தீதுண்டோ
- தீதுண்டோ = தீது + உண்டோ

**பாஞ்சை வளம் (கட்டபொம்மன்)**

- வாசல் + அலங்காரம் = வாசலலங்காரம்

**புலி தங்கிய குகை**

- கல் + அளை = கலலளை

**கவின்மிகு கப்பல்**

- இன்று + ஆகி = இன்றாகி

**இன்பத்தமிழ்க் கல்வி (பாரதிதாசன்)**

- என்று + உரைக்கும் = என்றுரைக்கும்

**அழியாச்செல்வம் (நாலடியார்)**

- எவன் + ஒருவன் = எவனொருவன்

**வாழ்விக்கும் கல்வி**

- இவை + எல்லாம் = இவையெல்லாம்

**திருக்குறள்**

- கற்றனைத்து+ ஊறும் = கற்றனைத்தூறும்

**பேசும் ஓவியங்கள் (ஓவியம்)**

- எழுத்து + ஆணி = எழுத்தாணி

**கீரைப்பாத்தியும் குதிரையும்**

- கட்டி + அடித்தல் = கட்டியடித்தல்

**ஒரு வேண்டுகோள் (தேனரசன்)**

- வார்ப்பு + எனில் = வார்ப்பெனில்

**விருந்தோம்பல் (பழமொழி நானூறு)**

- மாரி + ஒன்று = மாரியொன்று
- வறந்து + இருந்து = வறந்திருந்த
- ஒன்று + ஆகு = ஒன்றாகு
- முன்று + இலோ = முன்றிலோ

**வயலும் வாழ்வும்**

- ஓடை + எல்லாம் = ஓடையெல்லாம்

**புதுமை விளக்கு**

- அறம் + கதிர் = அறக்கதிர்

## எட்டாம் வகுப்பு புதிய புத்தகம்

**தமிழ்மொழி வாழ்த்து (பாரதியார்)**

- அறிந்தது + அனைத்தும் = அறிந்தனைத்தும்
- வானம் + அறிந்த = வானமறிந்த

**தமிழ்மொழி மரபு (தொல்காப்பியர்)**

- இன்பு + உருகு = இன்புருகு

**அறம் என்னும் கதிர்**

- ஓடை + ஆட = ஓடையாட

**கோணக்காத்துப் பாட்டு (கும்மி பாடல்)**

- பருத்தி + எல்லாம் = பருத்தியெல்லாம்

**நிலம் பொது (சுகுவாமிஷ் பழங்குடியினர்)**

- பால் + ஊறும் = பாலூறும்

**திருக்குறள்**

- நெடுமை + தேர் = நெடுந்தேர்

**நோயும் மருந்தும்**

- தாம் + இ = தாமினி

**வருமுன் காப்போம்**

- இடம் + எங்கும் = இடம்மெங்கும்

**புத்தியைத் தீட்டு**

- பகைவன் + என்றாலும் = பகைவனென்றாலும்

**திருக்கேதாரம்**

- முழவு + அதிர = முழவுதிர

**பாடறிந்து ஒழுகுதல் (கலித்தொகை)**

- முறை + எனப்படுவது = முறையெனப்படுவது

**நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்**

- கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்

**திருக்குறள்**

- பெடை + ஓடு = பெடையோடு

**மழைச்சோறு**

- கால் + இறங்கி = காலிறங்கி

**படை வேழம் (கலிகத்துப்பரணி)**

- போல் + உடன்றன = போலுடன்றன
- சிதைந்து + ஓடல் = சிதைந்தோடல்
- என்று + இருள் = என்றிருள்
- போல் + உடன்றன = பேலுடன்றன

**விடுதலைத் திருநாள் (கவிஞர் மீரா)**

- என்று + ஆய்ந்து = என்றாய்ந்து

**வளம் பெருகுக**

- காட்டை + எரித்து = காட்டையெரித்து
- இதம் + தரும் = இதந்தரும்

**ஒன்றே குலம் (திருமூலர்)**

- நம்பர்க்கு + அங்கு = நம்பர்க்கங்கு

**மெய்ஞ்ஞான ஒளி**

- உள் + இருக்கும் = உள்ளிருக்கும்

**திருக்குறள்**

- திரிந்து + அற்று = திரிந்தற்று
- குணங்கள் + எல்லாம் = குணங்களெல்லாம்

**இளைய தோழனுக்கு (முமேத்தா)**

- தூக்கி + கொண்டு =தூக்கிக்கொண்டு
- விழித்து + எழும் = விழித்தெழும்

## ஒன்பதாம் வகுப்பு புதிய புத்தகம்

**வல்லினம் மிகும் இடங்கள்**

- மா + அடி = மாவடி
- தனி + ஆள் = தனியாள்
- இவள் + ஐ = இவளை

**புணர்ச்சி**

- தொன்மை + ஆன = தொன்மையான
- நூல் + ஆகிய =நூலாகிய
- தொல்காப்பியம் + இல் = தொல்காப்பியத்தில்
- சிற்பம் + கலை = சிற்பக்கலை

## 6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1- இயல் 1,2,3

முதல் சொல்லின் கடைசி எழுத்து மெய் சேரும் சொல்லின் முதல் எழுத்து உயிர் சேரும்போது நடக்கும் மாற்றம் என்ன?

- மணம் + உண்டு = மணமுண்டு
- சிலர் + அழுவார் =சிலரழுவார்
- புகழ் + இழந்தேன் = புகழிழந்தேன் (மாற்றம் உயிர் எழுத்தானது மெய் எழுத்தில் இணைந்து உயிர் மெய் ஆனது )
- எழுத்து +ஆணி= எழுத்தாணி
- பத்து + பாட்டு = பத்துப்பாட்டு
- பாடலை+ சொன்னேன்= பாடலைச் சொன்னேன்
- அ + கல்லில் = அக்கல்லில்
- தமிழக + சிற்பம் + கலை = தமிழகச் சிற்பக்கலை
- இதனை + கொள்ளலாம் = இதனைக் கொள்ளலாம்
- கண்ணகிக்கு + சிலை = கண்ணகிக்குச் சிலை
- சுதை + சிற்பங்கள் = சுதைச் சிற்பங்கள்
- அறிய + முடிகிறது = அறிய முடிகிறது
- தமிழ் + பேசு = தமிழ்பேசு
- தமிழ் + பேச்சு = தமிழ்பேச்சு
- கை + கள் = கைகள்

## பத்தாம் வகுப்பு புதிய புத்தகம்

**அன்னை மொழியே**

- பூ + கள் = பூக்கள்

**நீதிவெண்பா**

- பாடு+ஆண்+திணை = பாடாண் திணை
- கடவுளை+ கண்டேன்= கடவுளைக் கண்டேன்
- பழத்தை+தின்றேன்=பழத்தைத் தின்றேன்
- கண்ணனுக்கு + கொடுத்தேன் = கண்ணனுக்குக் கொடுத்தேன்
- மதுரைக்கு + செல்வோம் = மதுரைக்குச்செல்வோம்

## 7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் 1 - இயல் 1,2,3

- தன் + நெஞ்சு= தன்நெஞ்சு
- புகழ் + இல்லை= புகழில்லை
- கூடி + சென்றான்= கூடிச்சென்றான்
- பதுங்கி + கொண்டான் = பதுங்கிக் கொண்டான்
- சொல்லி + பார்த்தான் = சொல்லிப் பார்த்தான்

- புலம்பி + தீர்த்தான் = புலம்பித் தீர்த்தான்
- அள்ளி + கொடுத்தான் = அள்ளிக் கொடுத்தான்

**8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் 1)**

**இயல்-1,2,3**

- என் +உள்ளம்= என்னுள்ளம்
- பெருமை + அறிவு= பேரறிவு
- புகழ் + ஆரம்= புகழாரம்
- நம் + தமிழ்= நம்தமிழ்
- பெருமை + இன்பம்= பேரின்பம்
- நன்மை + நூல்= நன்னூல்
- மயரிகள் + அல்லராய்=மயரிகளல்லராய்
- மன் + உயிர்=மன்னுயிர்
- மலர் + தலை=மலர்தலை
- வான் + ஒலி=வானொலி
- சொல் + பிழை=சொற்பிழை
- சுயம் + வரம்= சுயம்வரம்
- மாசு + இலா= மாசிலா
- செம்மை + தாமரை= செந்தாமரை
- கோடு + இடறி= கோடிடறி
- அருள் + என்றான்= அருளென்றான்
- நுண் + அறிவு=நுண்ணறிவு
- இணையம் + தளம்=இணையதளம்
- சிறுமை + ஊர்=சிற்றூர்
- பல்கலை + கழகம்=பல்கலைக்கழகம்
- தொலை + தொடர்பு=தொலைத்தொடர்பு
- கம்பி + சுருள்=கம்பிச்சுருள்

**8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் 2)**

**இயல்-1,2,3**

- வான் + உறு= வானுறு
- பழம் + தான்= பழந்தான்
- பாரதம் + தாய் = பாரதத்தாய்
- சேய்மை + உற்ற = சேய்மையுற்ற
- விடுதலை + உணர்வு = விடுதலையுணர்வு
- அறம் + போராட்டம் = அறப்போராட்டம்
- தொழில் + பயிற்சி = தொழிற்பயிற்சி
- தமிழ் + பண்பு=தமிழ்ப்பண்பு
- பெருமை + ஆசிரியர்=பேராசிரியர்
- எட்டு + தொகை=எட்டுத்தொகை
- சிறப்பு + இடம்=சிறப்பிடம்
- நிழல் + பாவை=நிழற்பாவை
- நடிப்பு + கலை=நடிப்புக்கலை

**8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் 3)**

**இயல்-1,2,3**

- அன்பு + உடைமை = அன்புடைமை
- பண்பு + ஒத்தல் = பண்பொத்தல்
- மக்கள் + பண்பு = மக்கட்பண்பு
- பண்பு + இலான் = பண்பிலான்
- திரிந்து + அற்று = திரிந்தற்று
- உறுதி + உரை=உறுதியுரை
- உணவு + இன்றி =உணவின்றி
- சொல் + பொழிவு =சொற்பொழிவு
- சொல் + ஆராய்ச்சி =சொல்லாராய்ச்சி

- உருவம் + சிலை= உருவச்சிலை
- மலர் + அடி =மலரடி
- கனல் + எரி = கனலெரி
- கடல் + ஓரம் = கடலோரம்
- கண் + அழகு = கண்ணழகு
- கல் + அணை = கல்லணை
- கண் + ஆடி = கண்ணாடி
- பல் + அழகு = பல்லழகு
- விண் + அரசு = விண்ணரசு
- அங்கும் + இங்கும் =அங்குமிங்கும்
- இயற்கை + அன்னை=
- வால் + எங்கே= வாலெங்கே
- குரங்கு + அரசர்= குரங்கரசர்
- கண் + மலர் = கண்மலர்

- வளம் + நூல் = வளநூல்
- முள் + செடி = முட்செடி

## குறில் நெடில் வேறுபாடு அறிதல்

### 6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 1
### இயல் - 1

**இலக்கணமும் மொழித்திறனும்**

ஓடோடி வந்தான் – இத்தொடரில் ந் மற்றும் ன் இரண்டு மெய் எழுத்துகள், அவற்றை விடுத்து மீதம் உள்ள எழுத்துகளில்.

ஓ, டோ, தா – இவை மூன்றும் நெடில் எழுத்துகள்

டி, வ – இவை இரண்டும் குறில் எழுத்துகள்

ஒற்றைக் கொம்பு, இரட்டைக்கொம்பு

செய், சேய் என்னும் இரண்டு சொற்களைப் பாருங்கள்

செ இஃது ஒற்றைக்கொம்பு

சே இஃது இரட்டைக்கொம்பு

இதனைச் செய், தாய்சேய் நலவிடுதி

ச் என்பது மெய்யெழுத்து

எ என்பது உயிரெழுத்து

இரண்டும் சேரும் போது செ இதில் குறில்

ச் உடன் ஏ சேரும் போது சே இதில் நெடில்

**ஒற்றைக்கொம்பு இரட்டைக் கொம்புகளோடு துணை எழுத்துச் சேரும் போது ஏற்படும் மாற்றங்கள்**

கொடி பறக்கும்

க் + ஒ இரண்டும் சேர்ந்தால் கொ இது குறில்

க் + ஓ இரண்டும் சேர்ந்தால் கோ இது நெடில்

### 6ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் - 2

**இலக்கணமும் மொழித்திறனும்**

தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது

உயிர் எழுத்துகள் 30

மெய் எழுத்துகள் 18

எ.கா. அண்ணா (ண் - மெய்யெழுத்து, ணா - உயிர்மெய் எழுத்து))

உயிரும் மெய்யும் சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன. அனைத்தும் பேச்சு வழக்கில் பயன்படுவது இல்லை.

எடுத்துக்காட்டாக கி,சி,பி,டி,தி,மி போன்ற உயிர்மெய் எழுத்துகள் அன்றாடப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவது இல்லை.

குறில் நெடில்

அ,இ,உ,எ,ஒ ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள் இவை மெய் எழுத்துகளோடு சேரும் போது உயிர்மெய்க்கு எழுத்துகள் உண்டாகின்றன,

கடல், கிளி, குரங்கு, சென்னை, சொல்

ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ ஏழும் நெடில் எழுத்துகள், இந்த மெய் எழுத்துகளோடு சேரும் போது உயிர்மெய் நெடில் எழுத்துகள் உண்டாகின்றன.

குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக

பல் தேய்த்தேன்

பால் குடித்தேன்

பல்,பால் இடம் மாறினால் குழப்பம் வரும்

பிழையின்றித் தமிழ் எழுதுவோம்

பின்வரும் சொற்களைப் பிழையின்றி எழுதுக

பன்னெண்டு = பன்னிரெண்டு

நார்பது = நாற்பது

அம்பது = ஐம்பது

வாய்க்கால், செய் ஆகியவை வயல் சார்ந்த அருமையான தமிழ்ச் சொற்கள்

வண்மை – கொடைத்தன்மை

வன்மை – கொடுமை

தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள்

எழுத்துகளுக்குள் நட்பு உண்டு, தமிழில் சில எழுத்துகள் தன் எழுத்தோடு மட்டும் சேர்ந்து வரும் (எ,கா) பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்

க்,ச்.த்,ப் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும் எழுத்துகள் ,

தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துகளுடன் சேரும் எழுத்துகள்(வேற்றுநிலை மெய்ம்மயக்கம்)

(எ,கா) சார்பு, வாழ்க்கை

ர், ழ் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் சேர்ந்து வாரா, பிற எழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும்

தன் எழுத்து, பிற எழுத்து இரண்டுடனும் சேர்ந்து வரும் எழுத்துகளும் உள்ளன

(எ,கா) ற் – குற்றம், மேற்கு

ன் - அன்னம், அன்பு

கற்கண்டு

## தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

### தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து.

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்

### எழுத்து

- ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

### உயிர் எழுத்துகள்

- உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன.
- வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.
- அ,இ,உ,எ,ஒ - ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன.குறுகி ஒலிக்கும் ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள்.
- ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ -ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.நீண்டு ஒலிக்கும் ஆகிய ஏழும் நெடில் எழுத்துகள்.
- ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு. எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.

### மாத்திரை

- மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை க ண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.
- குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 1 மாத்திரை
- நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 2 மாத்திரை

### மெய்யெழுத்துகள்

மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க்,ங்,ச்,ஞ், ட், ண், த், க், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.

மெய் எழுத்துகன் ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை

- க், ச், ட், த், ப், ற் - ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன.
- ங்,ஞ், ஸ்,ந், ம், ன் - ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன.

- ய், ர், ல், வ், ழ், ள் –

ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

**உயிர்மெய்**

மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.

**ஆய்த எழுத்து**

தமிழ்மொழியில் உயிர்,மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி ஆய்த எழுத்தை எழுத்து ஒன்றும் உள்ளது, அது ஃ என்னும் ஆய்த எழுத்தாகும்.

ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு அரை மாத்திரை

**கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக**

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல்.

[விடை: அது]

2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல்

[விடை : தீ]

3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல்.

[விடை: அஃது]

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம்.சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரித்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு --------- சொல்வது

அ) விரிவாகச் ஆ) சுருங்கச்

இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது விடை: சுத்தம்

3. உடல்நலமே -------- அடிப்படை விடை: உழைப்புக்கு

4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?

விடை: உணவு, உடை.உறைவிடம்

5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

விடை: சுத்தம்

பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக

1. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.

விடை : எங்கள் பள்ளியில் சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.

2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

விடை : பெற்றோரிடம் அனுமதி கடிதம் வாங்கி வரச் சொன்னார்கள்.

சொல் வளம் பெறுவோம்.

1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) கரும்பு – கரு, கம்பு

கவிதை – கவி, விதை, கதை, தை

பதிற்றுப்பத்து – பதி, பத்து, பற்று

பரிபாடல் – பரி, பாடல், பா, பால், பாரி

2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

நூல் மொழி கோல் மீன் நீதி எழுது

கண் வெளி தமிழ் மணி மாலை விண்

(எ.கா.) விண்மீன்

விடை

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்மீன் | 7 | தமிழ்மணி |
| 2 | மொழிநூல் | 8 | மீன்கண் |
| 3 | தமிழ்மொழி | 9 | தமிழ்மாலை |
| 4 | எழுதுகோல் | 10 | தமிழ்நூல் |
| 5 | கண்மணி | 11 | விண்வெளி |
| 6 | நீதிநூல் | 12 | மணிமாலை |

## சந்திப்பிழை அறிதல்

### 8th new book

- ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர். எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகும் என்று கூறமுடியாது. மிதந்து சென்றது, செய்து பார்த்தான், படித்த கவிதை, பெரிய தாவரம் ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை

என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு வல்லின மெய் மிகக்கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் எனக் குறிப்பிடுவர்.

- வல்லின மெய்களைச் சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பது மட்டுமன்று. செய்திகளில் கருத்துப் பிழையோ, பொருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கும் வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன.
  மண்வெட்டி கொண்டு வா.
  மண்வெட்டிக் கொண்டு வா.
- இவற்றில் முதல் தொடர் மண்வெட்டியை எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இரண்டாம் தொடர் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு பொருள் தெளிவை ஏற்படுத்தவும் வல்லினம் மிகுதல் உதவுகிறது.
- வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப் பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

**வல்லினம் மிகும் இடங்கள்**

அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அந்தப்பக்கம். இந்தக்கவிதை.

எந்த என்னும் வினாத்திரியை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) எந்தத்திசை? எந்தச்சட்டை?

இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) தலையைக் காட்டு. பாடத்தைப்படி.

நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) எனக்குத் தெரியும். அவனுக்குப் பிடிக்கும்.

இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும். (எ.கா.) எழுதிப் பார்த்தான். ஓடிக் களைத்தான்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) பெற்றுக் கொண்டேன். படித்துப் பார்த்தார்.

எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.

(எ.கா.) செல்லாக்காசு, எழுதாப்பாடல்,

உவமைத்தொகையில் வல்லினம் மிகும். (எ.கா.) மலர்ப்பாதம், தாய்த்தமிழ்.

உருவகத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) தமிழ்த்தாய், வாய்ப்பவளம்.

எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) எட்டுப்புத்தகம், பத்துக்காசு.

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா) அப்படிச்செய், இப்படிக்காட்டு, எப்படித்தெரியும்?

திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) கிழக்குக்கடல், மேற்குச்சுவர், வடக்குத்தெரு, தெற்குப்பக்கம்.

மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) மரம் + சட்டம் = மரச்சட்டம், வட்டம் + பாறை = வட்டப்பாறை.

**வல்லினம் மிகா இடங்கள்**

எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) தம்பி படித்தான், யானை பிளிறியது.

அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அது சென்றது. இது பெரியது, எது கிடைத்தது?

பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதிய பாடல், எழுதாத பாடல்.

இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) வல்லினம் மிகாது. (எ.கா.) இலை பறித்தேன், காய் தின்றேன்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ, இடைத்தொடர்க் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது. (எ.கா.) தின்று தீர்த்தான், செய்து பார்த்தாள்.

வினைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதுபொருள், சுடுசோறு

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களைத் தவிர, படி என முடியும் பிறசொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதும்படி சொன்னேன். பாடும்படி கேட்டுக்கொண்டார்.

உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) தாய்தந்தை, வெற்றிலைபாக்கு

**பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.**

1. சுட்டுத் திரிபு – மிகும்
2. திசைப் பெயர்கள் – மிகும்
3. பெயரெச்சம் – மிகாது
4. உவமைத் தொகை – மிகும்
5. நான்காம் வேற்றுமை விரி – மிகும்
6. இரண்டாம் வேற்றுமை தொகை – மிகாது
7. வினைத்தொகை – மிகாது
8. உருவகம் – மிகும்
9. எழுவாய்த் தொடர் – மிகாது
10. எதிர்மறைப் பெயரெச்சம் – மிகாது

## 9ம் வகுப்பு இயல் - 3

**வல்லினம் மிகும் இடங்கள்**

வாணன் வேலைக் கொடுத்தான்.

வாணன் வேலை கொடுத்தான்.

இந்த இரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?

வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர். இவ்வாறு எந்த எந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.

வல்லினம் மிகும் இடங்கள்

தற்கால உரைநடையில் வல்லினம் மிகவேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

1. அச்சட்டை

இந்தக்காலம்

எத்திசை?

எந்தப்பணம்?

அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும்.

2. கதவைத்திற

தகவல்களைத்திரட்டு

காட்சியைப்பார்

ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.

3. முதியவருக்குக்கொடு

மெட்டுக்குப்பாட்டு

ஊருக்குச்செல்

கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.

4. எனக்கேட்டார்

வருவதாகக்கூறு

என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும்.

மேற்கண்டவாறு வல்லினம் மிகும் இடங்களை இனங்கண்டு பயன்படுத்தத் தொடங்கினாலே , தவறுகளைத் தவிர்த்துவிடலாம். மரபையும் பட்டறிவையும் தாண்டி, சொற்களை ஒலித்துப் பார்ப்பதும் வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவதற்கு எளியவழி எனலாம்.

தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்

வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின்பாற்படும்.

சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

மேலும் சில வல்லினம் மிகும் இடங்களை அறிந்துகொள்வோம்

- அதற்குச் சொன்னேன்
- இதற்குக் கொடு
- எதற்குக் கேட்கிறாய்?

அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

- இனிக் காண்போம்
- தனிச் சிறப்பு

இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும்.

- மிகப் பெரியவர்

மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும்.

- எட்டுத்தொகை
- பத்துப்பாட்டு

எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும்.

- தீப் பிடித்தது
- பூப் பந்தல்

ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.

- கூவாக் குயில்
- ஓடாக் குதிரை

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும்.

- கேட்டுக் கொண்டான்
- விற்றுச் சென்றான்

வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும்.

- ஆடச் சொன்னார்
- ஓடிப் போனார்

(அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும்.

- புலித்தோல்

ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.

- கிழக்குப் பகுதி
- வடக்குப் பக்கம்

திசைப் பெயர்களின்பின் வலிமிகும்.

- மல்லிகைப்பூ

- ❖ சித்திரைத்திங்கள்

இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

- ❖ தாமரைப்பாதம்

உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.

- ❖ சாலப்பேசினார்
- ❖ தவச்சிறிது

சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும்.

- ❖ நிலாச் சோறு
- ❖ கனாக் கண்டேன்

தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும்.

- ❖ வாழ்க்கைப்படகு
- ❖ உலகப்பந்து

சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.

## 9ம் வகுப்பு இயல் - 4

### வல்லினம் மிகா இடங்கள்

- தோப்புக்கள் – தோப்புகள்
- கத்தி கொண்டு வந்தான் - கத்திக்கொண்டு வந்தான்
- மேற்கண்ட சொற்களில் வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும் வருவதை அறியலாம். நாம் பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.
- வல்லினம் மிகா இடங்கள்:
- தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களாகக் கீழ்க்காண்பவற்றைக் கூறலாம்.
- அது செய் இது காண் - அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
- எது கண்டாய்? எவை தவறுகள்? - இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
- குதிரை தாண்டியது. கிளி பேசும் - எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
- அண்ணனோடு போ. எனது சட்டை. - மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது.
- தந்தையே பாருங்கள். மகளே தா. - விளித் தொடர்களில் வல்லினம் மிகாது.
- வந்த சிரிப்பு. பார்த்த பையன் - பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
- நாடு கண்டான். கூடு கட்டு - இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.
- வரும்படி சொன்னார். பெறும்படி கூறினார். - படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது.
- வாழ்க தமிழ் வருக தலைவா! - வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.

- குடிதண்ணீர், வளர்பிறை, திருவளர்செல்வன் - வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
- ஒரு புத்தகம், மூன்று கோடி - எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.
- தாய்தந்தை, இரவுபகல் - உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.
- அன்று சொன்னார். என்று தருவார். அவராவது தருவதாவது யாரடா சொல். ஏனடி செல்கிறாய்? கம்பரைப் போன்ற கவிஞர் யார்? - அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.
- அவ்வளவு பெரியது. அத்தனை சிறியது. அவ்வாறு பேசினான். அத்தகைய பாடங்கள். அப்போதைய பேச்சு. அப்படிப்பட்ட காட்சி. நேற்றைய சண்டை. - அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அத்தகைய, இத்தகைய, எத்தகைய, அப்போதைய, இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.
- என்னோடு சேர். மரத்திலிருந்து பறி. குரங்கினது குட்டி. - மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது.
- தமிழ் படி. (ஐ) கை தட்டு. (ஆல்) வீடு சென்றாள். (கு) கரை பாய்ந்தான். (இருந்து) - இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது.
- தலைவி கூற்று. தொண்டர் படை - நிலைமொழி உயர்திணையாய் அமையும் தொடரில் வல்லினம் மிகாது.
- உறு பொருள் நனி தின்றான். கடி காவல் - சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.
- பார் பார் சலசல - அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது.
- கருத்துகள் பொருள்கள் வாழ்த்துகள் - கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. (மிகும் என்பர் சிலர்)
- பைகள், கைகள் - ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது.

## 9ம் வகுப்பு இயல் -5

### இடைச்சொல் - உரிச்சொல்

- இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்.
- பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப்போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

- இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.
- இடைச்சொல் பலவகையாக அமையும்.

இடைச்சொற்களின் வகைகள்

வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது, கண்

பன்மை விகுதிகள் - கள், மார்

திணை, பால் விகுதிகள் - ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ

கால இடைநிலைகள் - கிறு, கின்று,...

பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் - அ, உ, இ, மல்,...

எதிர்மறை இடைநிலைகள் - ஆ, அல், இல்

தொழிற்பெயர் விகுதிகள் - தல், அம், மை

வியங்கோள் விகுதிகள் - க, இய

சாரியைகள் - அத்து, அற்று, அம்,...

உவம உருபுகள் - போல, மாதிரி

இணைப்பிடைச் சொற்கள் - உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்,...

தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் - உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்

சொல்லுருபுகள் - மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை

வினா உருபுகள் – ஆ, ஓ

இவற்றுள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உம்

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை )

பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

ஓ

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை - அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

- இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)

• பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)

• பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை - அதுவும் இல்லை )

ஏ

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

நடந்தே வந்தான்.

தான்

'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

*நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.*

*நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.*

*நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.*

*நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.*

வேறுபாட்டை உணருங்கள்:

நிர்மலாதான் பாடினாள். (தான் - இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள். (தான் - தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் - பெயர்ச்சொல்)

மட்டும்

இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

படிப்பு மட்டும் இருந்தால் போதும். (வரையறைப் பொருள்)

ஆவது

இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

• ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)

• அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும். (இது அல்லது அது)

முதலாவது, இரண்டாவது, .... (வரிசைப்படுத்தல்)

கூட

• என்னிடம் ஒரு காசு கூட இல்லை . (குறைந்தபட்சம்)

• தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை . (முற்றுப் பொருள்)

• அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

ஆ

வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.

ஆ என்னும் இடைச் சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

ஆம்

சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

உள்ளே வரலாம். (இசைவு)

இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்)/செய்தி

பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி

அன்று என்பது ஒருமைக்கும்

அல்ல என்பது பன்மைக்கும் உரியன.

(எ.கா.) இது பழம் அன்று . இவை பழங்கள் அல்ல.

எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்

எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்

(எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்? எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

tnpscbooks

## உரிச்சொற்கள்

- உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

கடி மலர் - மணம் மிக்க மலர்

கடி நகர் - காவல் மிக்க நகர்

கடி விடுதும் - விரைவாக விடுவோம்

கடி நுனி - கூர்மையான நுனி- ஒரு சொல் பல பொருளுக்கு உரியது

உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.

உறு பசி; தவச் சிறிது; நனி நன்று - பல சொல் ஒரு பொருள்

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன.

மேலும் அவை

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு

2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

(எ.கா) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. அலுவலர் வந்தார் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

விடை :

அலுவலர் வந்தவுடன் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

(அல்ல து)

அலுவலர் வந்ததால் அனைவரும் பதற்றம் அடைந்தனர்

2. சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.

விடை :

சுடர்க்கொடியும் மாலனும் பாடினார்கள்.

3, பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.

விடை :

பழனிமலையைவிட இமயமலைதான் மிகவும் பெரியது.

4. கவலையற்ற எதிர்காலம் ; கல்வியே நிகழ்காலம்.

விடை :

கவலையற்ற எதிர்காலம் அமைய வேண்டுமெனில் கல்வியே நிகழ்காலமாக வேண்டும்.

## 7ம் வகுப்பு இயல் - 2

பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.

எ.கா : கண்ணகி சிலம்பு அணிந்தான்.

விடை : கண்ணகி சிலம்பு அணிந்தாள்.

1. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.

கோவலன் சிலம்பு விற்கப் போனான்.

2. அரசர்கள் நல்லாட்சி செய்தார்.

அரசர்கள் நல்லாட்சி செய்தனர்.

3. பசு கன்றை ஈன்றன.

பசு கன்றை ஈன்றது.

4. மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

மேகங்கள் சூழ்ந்து கொண்டன.

5. குழலி நடனம் ஆடியது.

குழலி நடனம் ஆடினாள்.

## 8ம் வகுப்பு

### வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

- ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர். எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகும் என்று கூறமுடியாது. மிதந்து சென்றது, செய்து பார்த்தான், படித்த கவிதை, பெரிய தாவரம் ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு வல்லின மெய் மிகக்கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் எனக் குறிப்பிடுவர்.
- வல்லின மெய்களைச் சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பது மட்டுமன்று. செய்திகளில் கருத்துப் பிழையோ, பொருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கும் வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன. மண்வெட்டி கொண்டு வா.
- மண்வெட்டிக் கொண்டு வா.
- இவற்றில் முதல் தொடர் மண்வெட்டியை எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இரண்டாம் தொடர் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு பொருள் தெளிவை ஏற்படுத்தவும் வல்லினம் மிகுதல் உதவுகிறது.
- வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப் பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

### வல்லினம் மிகும் இடங்கள்

அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அந்தப்பக்கம். இந்தக்கவிதை.

எந்த என்னும் வினாத்திரியை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) எந்தத்திசை? எந்தச்சட்டை?

இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) தலையைக் காட்டு. பாடத்தைப்படி.

நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) எனக்குத் தெரியும். அவனுக்குப் பிடிக்கும்.

இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும். (எ.கா.) எழுதிப் பார்த்தான். ஓடிக் களைத்தான்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) பெற்றுக் கொண்டேன். படித்துப் பார்த்தார்.

எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.

(எ.கா.) செல்லாக்காசு, எழுதாப்பாடல்,

உவமைத்தொகையில் வல்லினம் மிகும். (எ.கா.) மலர்ப்பாதம், தாய்த்தமிழ்.

உருவகத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) தமிழ்த்தாய், வாய்ப்பவளம்.

எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) எட்டுப்புத்தகம், பத்துக்காசு.

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா) அப்படிச்செய், இப்படிக்காட்டு, எப்படித்தெரியும்?

திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) கிழக்குக்கடல், மேற்குச்சுவர், வடக்குத்தெரு, தெற்குப்பக்கம்.

மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) மரம் + சட்டம் = மரச்சட்டம், வட்டம் + பாறை = வட்டப்பாறை.

## வல்லினம் மிகா இடங்கள்

எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) தம்பி படித்தான், யானை பிளிறியது.

அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அது சென்றது. இது பெரியது, எது கிடைத்தது?

பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதிய பாடல், எழுதாத பாடல்.

இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) வல்லினம் மிகாது. (எ.கா.) இலை பறித்தேன், காய் தின்றேன்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ, இடைத்தொடர்க் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது. (எ.கா.) தின்று தீர்த்தான், செய்து பார்த்தாள்.

வினைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதுபொருள், சுடுசோறு

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களைத் தவிர, படி என முடியும் பிறசொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதும்படி சொன்னேன். பாடும்படி கேட்டுக்கொண்டார்.

உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) தாய்தந்தை, வெற்றிலைபாக்கு

பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.

விடை

1. சுட்டுத் திரிபு – மிகும்
2. திசைப் பெயர்கள் – மிகும்
3. பெயரெச்சம் – மிகாது
4. உவமைத் தொகை – மிகும்
5. நான்காம் வேற்றுமை விரி – மிகும்
6. இரண்டாம் வேற்றுமை தொகை – மிகாது
7. வினைத்தொகை – மிகாது
8. உருவகம் – மிகும்
9. எழுவாய்த் தொடர் – மிகாது
10. எதிர்மறைப் பெயரெச்சம் – மிகாது

## 12ம் வகுப்பு இயல் - 3 பொருள் மயக்கம்

### இடைவெளியும் பொருள் வேறுபாடும்

- எம் மொழி யார்க்கும் எளிது : எம்மொழியார்க்கும் எளிது
- அப் பாவின் நலங் காண்க : அப்பாவின் நலங்காண்க
- ஐந்து மாடிவீடு : ஐந்துமாடி வீடு
- அன்றுமுதல் பாடம் கற்றோம் : அன்று முதல்பாடம் கற்றோம்
- இவ்வாறு சொற்களைச் சேர்த்தும் பொருள் பிரித்தும் எழுதுவதால் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

### வல்லின மெய்களும் பொருள் வேறுபாடும்

- பிட்டுத் தின்றான் - பிட்டு தின்றான்
- உள்ளக் கருத்து - உள்ள கருத்து
- ஈட்டிக் கொண்டு வந்தான் - ஈட்டி கொண்டு வந்தான்
- போன்ற தொடர்களில் வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

### காற்புள்ளியும் பொருள் மயக்கமும்

- இயல்பாக உரையாடும்போது பொருள் நிலையில் பெரும்பாலும் எந்தக் குழப்பமும் ஏற்படுவதில்லை. குரலில் ஏற்றம் - இறக்கம், சொற்களில் அழுத்தம் - குழைவு, இறுதிச் சொல் மூலம் வினாவா உணர்ச்சியா என்பதையெல்லாம் உணர்ந்து பொருளை நாம் சரியாக விளங்கிக் கொள்கிறோம். ஆனால் எழுதும்போது காற்புள்ளியிடாமல்

எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறுபொருளைத் தந்துவிடும்.

- அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.
- இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும்போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது,
- அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.
- எனவே, நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டும் இடாமலும் எழுதிப் பொருள் மயக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### இடைச் சொற்களும் விகுதிகளும் சொல்லுருபுகளும்

- தமிழில் உள்ள சில இடைச்சொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள் ஆகியவற்றைத் தொடர்களில், சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் வேறுபாடு தோன்றுகிறது.

விடும்

தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று

தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று

தன்

பாண்டியன்தன் கவிதையைப் படித்தான்

பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்

தான்

கண்ணன்தான் எழுதுவதாகச் சொன்னான்

கண்ணன் தான் எழுதுவதாகச் சொன்னான்.

பற்றி

குகன் இராமனைப்பற்றிக் கூறினான்

குகன் இராமனைப் பற்றிக் கூறினான்

முன்

சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்

சில குறைகளை மக்கள்முன் வைத்தனர்

முதல்

அன்றுமுதல் அமைச்சர் வந்தார்

அன்று முதல்அமைச்சர் வந்தார்

பால்

அவன்பால் கொண்டு சென்றான்

அவன் பால்கொண்டு சென்றான்

கண்

அவன்கண் பெற்று மகிழ்ந்தான்

அவன் கண்பெற்று மகிழ்ந்தான்

படி

அளக்கும்படி வேண்டினான்

அளக்கும் படி வேண்டினான்

மூலம்

அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது

அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது

கூட

அவன்கூடக் கொடுத்தான்

அவன் கூடக் கொடுத்தான்

சொல்லுருபுகள்

- வீட்டிலிருந்து சென்றான் - வீட்டில் இருந்து சென்றான்
- இத்தொடரில் அமைந்துள்ள வீட்டிலிருந்து என்ற சொல்லைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும்போது இருவேறு பொருள் உணர்த்துவதைக் காணலாம்.

சொற்களை மாற்றி எழுதும்போது ஏற்படும். பொருட்குழப்பம்

- தொடர்கள் அமைக்கும்போது தேர்ந்தெடுத்த சொற்களையும் சொற்களுக்குரிய தெளிவான பொருளையும் தொடரமைப்பு மாறாமல் அமைத்தல் வேண்டும்.
- "ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்"
- இத்தொடரில் உள்ள பொருட்பிழையை அறிய முடிகிறதா? தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருள் அமையும்படி வந்துள்ளது.
- "மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்"
- என்றே அமைந்திருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு தொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை அமைந்திருக்கும். சில தொடர்களில் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. கீழ்க்காணும் இத்தொடர்களைப் புரிந்துகொள்ள முடிகிறதா?
- இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
- பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
- காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.
- இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்
- இத்தொடர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொறு பொருளை தருகின்றன. நான்காம் தொடர் தவிர்த்துப் பிற தொடர்கள் உணர்த்தும் பொருள் முழுமையாக வெளிப்படவில்லை.
- முதல் தொடர் 'காட்டிற்குப்' பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான் என்னும் பொருளையும் இரண்டாம் தொடர் 'யாரோ ஒருவருக்குப் பணி விடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருளையும் மூன்றாம் தொடர்

'காட்டில் உள்ள இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்' என்னும் பொருளையும் தருகின்றன.

நினைவில் கொள்ள வேண்டியவை

1. பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்கள் ஒருசொல் என்னும் தன்மை கொண்டவை. எனவே அவற்றைப் பிரித்து எழுதக் கூடாது.

செங்கடல் (சரி) - செங் கடல் (தவறு)

கத்துகடல் (சரி) - கத்து கடல் (தவறு)

2. பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் இடைச்சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

அணங்குகொல் (சரி) அணங்கு கொல் (தவறு)

3. இடைச்சொல்லுடன் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

பேசியபடி பணம் கொடுத்தான் ( பேசியவாறு )

பேசிய படி பணம் கொடுத்தான் ( படியளவு )

4. உடம்படுமெய்கள் அமைந்த சொற்களில் உடம்படுமெய்களைச் சேர்த்துத்தான் எழுத வேண்டும்.

மணியடித்துச் சென்றான் (ஒலி எழுப்புதல்)

மணி அடித்துச் சென்றான் (மணி என்பவன் யாரையோ அறைதல்)

5. பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.

ஈக்கள் மொய்த்தன - ஈக் கள் மொய்த்தன

குரங்குகள் உண்டன - குரங்கு கள் உண்டன

6. இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்

படபடவெனச் சிறகை அடித்தது (சரி)

பட பட எனச் சிறகை அடித்தது (தவறு)

7. சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவற்றைச் சேர்த்தே எழுத வேண்டும்.

சுடராழி - சுடர் + ஆழி

8. உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுத வேண்டும்.

கடிமணம் - கடி மணம்

9. உம்மைத்தொகைச் சொற்களையும் நேரிணைச் சொற்களையும் எதிரிணைச் சொற்களையும் சேர்த்தே எழுத வேண்டும்.

உற்றாருறவினர் (சரி ) - உம்மைத்தொகை

உற்றார் உறவினர் (தவறு)

சீரும்சிறப்பும் (சரி ) - நேரிணைச்சொற்கள்

சீரும் சிறப்பும் (தவறு)

மேடுபள்ளம் (சரி) - எதிரிணைச்சொற்கள்

மேடு பள்ளம் (தவறு)

சொற்றொடர்ப்பிழை

திணை, பால், எண், இடம், காலம் முதலிய பிழைகள் ஏற்படாவண்ணம் தொடர் எழுதப் பழகுதல் சாலச்சிறந்தது. கீழுள்ள தொடர்கள் பிழையானவை அல்லவா? சிந்தியுங்கள்.

- கோவலன் மதுரைக்குச் சென்றது.
- பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றது.
- குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
- அவன் வெண்மதியிடம் பேசினாய்.
- சென்னையிலிருந்து நேற்று வருகிறான்.

அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்பனவற்றைத் திணை, பால் எண், இடம் அறிந்து ஆளுதல் வேண்டும். (அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், நாய் அன்று, நாய்கள் அல்ல)

அது என்னும் வேற்றுமை உருபு அஃறிணைக்கு உரியது. வரும் சொல் உயர்திணையாயின் அது என்னும் உருபினைப் பயன்படுத்துதல் கூடாது. எனது வீடு, அரசரது மாளிகை என்று எழுதலாம். ஆனால், எனது மனைவி, அரசரது மகன் என்றெழுதுதல் பிழை (மனைவி, மகன் - உயர்திணை ).

தொடர் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அமைக்கப்பட வேண்டும். இரண்டாவது குழந்தையிடம் கேள்வி கேட்டான் / குழந்தையிடம் இரண்டாவது கேள்வி கேட்டான். முதலிரண்டு சொற்கள் இடம் மாறியதால் தொடருக்கான பொருள் மாறுகிறது. அவன் அருகில் இருந்தான் அவன் அருகாமையில் இருந்தான். அருகில் என்பதற்கு எதிர்ச்சொல் அருகாமை . இவ்வேறுபாடு தெரியாவிடின் தொடரின் பொருள் மாறிவிடும். பேருந்து மோதி மிதிவண்டியில் சென்றவர் காயம் என்னும் தொடரும் பிழையானது. பேருந்து மோதியா மிதிவண்டியில் சென்றார்? மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதி காயம் என்று எழுதவேண்டும்.

பொதுவான பிழைகள்

சுடுதண்ணீர் என்று எழுதுவதும் பிழையே. தண்ணீர் - குளிர்ந்த நீர். சூடும் குளிருமாக நீர் எப்படி இருக்க முடியும்? நடுசென்டரில் நின்றான் - நடு என்பது தமிழ். சென்டர் என்பது ஆங்கிலம். இரண்டிற்கும் ஒரே பொருள். நடுவில் நின்றான் என்று எழுதினாலே போதும். ஒரு வரியின் இறுதியிலுள்ள சொல்லைப் பிரித்து எழுதுவதாக இருந்தால் பொருள் கெடாதபடி பிரிக்கவேண்டும். நம்பியார் கூடச் சென்றார் என்பதற்கும், நம்பி யார் கூடச் சென்றார் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு

வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

சரி திருவளர்செல்வன் / செல்வி, திருநிறைசெல்வன் / செல்வி

தவறு திருவளர்ச்செல்வன் / செல்வி, திருநிறைச்செல்வன் / செல்வி

பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்

• ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.

• சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.

• மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும். (யானை - கன்று ; குதிரை - கனைக்கும்)

• இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.

• எழுதியதை மீளப் படித்துப் பார்த்துப் பிழையிருப்பின் திருத்துதலும் கடமையாகும்.

## 12ம் வகுப்பு பழைய புத்தகம்

**தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.
2. செம்பியன் மாதேவிப் போன்ற சோழ பேரரசியர் செப்பு திருமேனிகள் செய்தளிப்பதை நம் கடமை என கருதினர் போலும்.
3. சீத்தலை சாத்தன் என்றப் புலவர்ப் பெருமான் தனது காப்பியத்திற்கு மணிமேகலைத் துறவு என்றேப் பெயரிட்டார்.
4. பித்தர் சொன்னவும் பேதையர்ச் சொன்னவும் பத்தர்ச் சொன்னவும் பன்ன பெறுபவோ என்றார்க் கம்பர்.
5. வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்றுச் சஞ்சீவிபர்வதச் சாரல் பாடுகிறது.

**கீழ்க்காணும் தொடர்களில் ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இடுக.**

1. நெல்லிகாய், தான்றிகாய், கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும்.
2. கொச்சை சொற்களும் வழூஉ சொற்களும் மிகுதியாக புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையை புறக்கணிக்க கூடுமோ?

**வல்லினம் மிகுமிடங்களில் அவ்வொற்றுகளை இட்டெழுதுக:**

1. பட்ட பகலினிலே பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு.
2. பதிக கிளவி பல்வகை பொருளை தொகுதியாக சொல்லுதல் ஆம்.
3. கள்வார்க்கு தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்கு தள்ளாது புத்தேள் உ
4. தேருளை புரவி வாரணதொகுதி திறைகள் கொண்டு வரும் மன்ன
5. தொன்மூதாலத்து பொதியில் தோன்றிய நாலூர் கோசர்.
6. படைப்பு பலபடைத்து பலரோடுண்ணும் செல்வம்.

VI. கீழ்க்காணும் தொடர்களில் தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக.

1. பாஞ்சாலிக் கண்ணனைப் பார்த்து கண்ணாக் காப்பாய் என்றுக் கூறினாள்.
2. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துச் சொல் எனக்கு.
3. நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்.
4. கபிலபரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.
5. சோறுக்கொதிக்கிறது போத்தம்பி அடுப்பைக்குறை என்றவுடன் சென்றுப் பார்த்தான்.

தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக:

1. "செல்வ சிறுமீர்காள்! நீராட போதுவீர்," என்றாள் கோதை.
2. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்.
3. கொத்தி திரியும் அந்த கோழி.
4. கிட்ட போனால் முட்ட பகை.
5. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது.

V. வலிமிகா இடங்களில் உள்ள வல்லெழுத்துகளை நீக்கி எழுதுக.

1. என்னொடுப் போந்த இளங்கொடி நங்கை.

வல்லினம் மிகுமிடங்களில் அவ்வொற்றுகளை இட்டெழுதுக:

1. பட்ட பகலினிலே பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு.
2. பதிசு கிளவி பல்வகை பொருளை தொகுதியாக சொல்லுதல் ஆம்.
3. கள்வார்க்கு தள்ளும் உயிர்நிலை சுள்ளார்க்கு தள்ளாது புத்தேள் உலகு.
4. தேருளை புரவி வாரணதொகுதி திறைகள் கொண்டு வரும் மன்ன
5. தொன்மூதாலத்து பொதியில் தோன்றிய நாலூர் கோசர்.
6. படைப்பு பலபடைத்து பலரோடுண்ணும் செல்வம்.
7. செப்புத்திருமேனிகளின் பொற்காலம் எது? ஏன்?
8. தமிழ் மன்னர் வளர்த்த ஓவியக்கலைகளை எங்கெங்குக் காணலாம்?
9. தமிழர்தம் மரச்சிற்பக் கலை பற்றி எழுதுக.
10. நாயக்கர் கால தந்தச் சிற்பக்கலை பற்றி வரைக.

VII. பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளை நீக்குக.

1. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.
2. அவர்தான் கூறினார் இவர்தான் கூறினார் என்று பாராது எவர்தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.
3. இடதுபக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று
4. கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர்.
5. நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப் படுகின்றன.

ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக:

1. ஆசிரியர் நடத்தா பாடத்தி-ருந்து எந்த கேள்வியும் வரவில்லை.
2. கேள்விகள் மாணவர் பயிலா பகுதியில் இருந்து வந்ததால் எழுத தெரியவில்லை.
3. எதையும் எழுதி பழகவேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.
4. அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்து சிறந்தான்?
5. ஓட காண்பது வெள்ளம்; ஒடுங்க காண்பது யோகியர் உள்ளம்.
6. பத்து பழங்களில் ஒரு பழமே நல்லன.
7. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே.
8. இதனைச் செய்தது இவர் அல்லவா?
9. விழாவில் பல அறிஞர்கள் பேசினர்.
10. ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது.
11. மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்.

VI. ண, ந, ன வேறுபாடு அறிக

1. அரண் - மதில், பாதுகாப்பு, கோட்டை

அரன் -சிவன்

2. அண்ணம் - மேல்வாய்

அன்னம்- ஒரு பறவை

ஈ. பிழை நேர்வது எப்போது?

I. ஒற்றுப்பிழை

பாடலை பிரித்து படி. (பிழை) பாடலைப் பிரித்துப் படி (திருத்தம்)

ii. குறில் நெடில் பிழை

அ.தண்ணிர் குடித்தான். (தண்ணீர்)

ஆ.கடைக்குப் போய் வெட்டி சட்டை வாங்கினான். (வேட்டி)

இ. என்ன கோடுமை இது! (கொடுமை)

iii. துணையெழுத்துப் பிழை

அ.அப்பாவிக்குப் பென்னும் பெருளும் கிடைத்தது. (பொன்னும் பொருளும்)

ஆ.சோவல் சண்டை பார்த்தேன். (சேவல்)

1. ஒருமை-பன்மை

பிழை

அ. காற்று வீசின; மரங் - அசைந்தது.

ஆ. தங்கப்பனும் செல்லனும் பள்ளிக்குச் சென்றா

திருத்தம்

காற்று வீசியது; மரங்கள் அசைந்தன.

தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றார்கள்.

ii. காலம்

பிழை

அ. நாளைக்கு நான் ஊரு குப் போய்ச்சேர்ந்தேன்.

ஆ. நேற்று பால் பொங்குகி

திருத்தம்

நாளைக்கு ஊருக்குப் போய்ச்சேர்வேன்.

நேற்று பால் பொங்கியது.

வன்தான் முதலில் வருவான்.

தைதான் சிறந்தவள்.

## 8ம் வகுப்பு பழைய புத்தகம்

வானியல்=வான் + இயல்

தென்திசை=தெற்கு + திசை

ஐம்பூதம்=ஐந்து + பூதம்

பழந்தமிழர்=பழமை + தமிழர்

வானூர்தி=வான் + ஊர்தி

காலம் + தோறும்=காலந்தோறும்

செம்மை + ஞாயிறு=செஞ்ஞாயிறு

மயில் + பொறி=மயிற்பொறி

பெருமை + புலமை=பெரும்புலமை

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் அறிவு
2. உலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.
3. 'உலகம் உருண்டை வடிவமானது' எனக் கூறிய முதல் தமிழ்க்குரல் திருவள்ளுவர்
4. வான்வெளியில் உள்ள மிகப்பெரிய விண்மீன் ஞாயிறு (இது உண்மையல்ல)
5. தாமே ஒளிவிடக் கூடியவை நாள்மீன் எனப்பட்டன.

பொருத்துக.

1. இயல்புப்புணர்ச்சி- பாடம் + வேளை
2. தோன்றல்- பொன் + குடம்
3. திரிதல் -வாழை + குலை
4. கெடுதல்-தமிழ் + மண்

விடை

1. இயல்புப்புணர்ச்சி - தமிழ் + மண்
2. தோன்றல்-- வாழை + குலை
3. திரிதல்-பொன் + குடம்

4. கெடுதல்-பாடம் + வேளை

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்கு புணர்ச்சிஎன்பது பெயர்.

2. அல் + திணை என்பது அஃறிணை எனப் புணரும்.

3. தோன்றல், திரிதல், கெடுதல் என்பனவிகாரப்புணர்ச்சி ஆகும்.

உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. வாழை + தோட்டம் என்பது புணர்ச்சி.

அ) இயல்புப்புணர்ச்சி

ஆ) விகாரப்புணர்ச்சி

இ) திசைப்பெயர்ப்புணர்ச்சி

2. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது

அ) இயல்புப்புணர்ச்சி

ஆ) விகாரப்புணர்ச்சி

இ) பண்புப்பெயர்ப்புணர்ச்சி

3. விகாரப்புணர்ச்சி வகைப்படும்.

அ) ஐந்து

ஆ) ஆறு

இ) மூன்று

வல்லினம் மிகும் இடங்கள் சிலவற்றை அறிவோம்

அ, இ என்னும் சுட்டெழுத்துகளின்பின் வல்லொற்று மிகும்.

அ + கனி =அக்கனி,

இ + புத்தகம் = இப்புத்தகம்

எ என்னும் வினா எழுத்தின்பின் வல்லொற்று மிகும்.

எ + பொருள் = எப்பொருள்

அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபுகளின்பின் வல்லொற்று மிகும்.

அந்த + பையன் = அந்தப் பையன், இந்த + பள்ளி = இந்தப் பள்ளி

அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

அப்படி + கேள் = அப்படிக்கேள், இப்படி + செய் = இப்படிச்செய்

எப்படி + படித்தான் = எப்படிப் படித்தான்

அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

அவ்வகைப் பேச்சு

இனி, தனி, மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.)

இனிப் பேசுவான்.

இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) படத்தைப் பார்த்தான், அவனுக்குக் கொடு.

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்

(எ.கா.) தயிர்க்குடம்

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) பட்டுச்சேலை

நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) கூலித்தொழில்

ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) விழிப்புனல்

ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) நீர்ப்பாம்பு

ஏழாம் வேற்றுமைத்தொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) குடிப்பிறந்தார்

அ) தேவையான இடங்களில் வல்லின மெய்யிட்டு எழுதுக.

1. வெள்ளி கிண்ணம் விலையதிகம்.
2. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி.
3. தைதிங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
4. பால்பருக தந்தான்.
5. உறுதியாக செய்வேன் என்று வாக்கு கொடுத்தான்.
6. அந்த பையனா இப்படி சொன்னான்?
7. இந்த செயலை எப்படி செய்தாய்?

விடை

- வெள்ளிக் கிண்ணம் விலையதிகம்
- நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி
- தைத்திங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகைக் கொண்டாடப்படுகிறது
- பால்பருகத் தந்தான்
- உறுதியாகச் செய்வேன் என்று வாக்குக் கொடுத்தேன்
- அந்தப் பையனா இப்படிச் செய்தான்
- இந்தச் செயலை எப்படிச் செய்தாய்

ஆ) வல்லினமெய் சேர்த்தெழுதுக.

1. தனி + பையன் =தனிப்பையன்
2. இனி + பேசு =இனிப்பேசு
3. நீர் + குடம்= நீர்க்குடம்
4. பாம்பு + தோல் =பாம்புத்தோல்

## 9ம் வகுப்பு பழைய புத்தகம்

### மொழித்திறன்பயிற்சி

### வல்லினம்மிகும்இடங்களும்வல்லினம்மிகாஇடங்களும்

- இருசொற்களைச்சேர்த்துஎழுதும்போதுஇடையில்சிலஇடங்களில்வல்லினமெய்எழுத்துகள்( க், ச், த், ப் ) மிக்குவரும். மெய்யெழுத்து மிக்கு வரவேண்டிய இடத்தில் மிகாமலும் மிகாத இடத்தில் மிக்கும் வந்தால் பொருள் மாறுபடும்.ஆகவே, வல்லினம் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் தெளிவாக அறிதல் வேண்டும்.

வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்.

அ + பையன்=அப்பையன்

இ+ செடி = இச்செடி

எ + பணி= எப்பணி

2.அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; அப்படி, இப்படி, எப்படி என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

அந்த+ கோவில் = அந்தக்கோவில்

அங்கு + சென்றான் =அங்குச்சென்றான்

எங்கு + போனான் =எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி

பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

அவனுக்கு + கொடுத்தான்= அவனுக்குக்கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் =தண்ணீர்க்குடம்

மரம்+ பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி=பூட்டுச்சாவி

விழி+ புனல் = விழிப்புனல்.

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு= பச்சைப்பட்டு

பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

மல்லிகை + பூ= மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண்

தாமரை + கை = தாமரைக்கை.

9. ஓரெழுத்து ஒருமொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ+ சுடர் = தீச்சுடர்

பூ + கூடை =பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா+ புகழ் = அழியாப்புகழ்

ஓடா + குதிரை= ஓடாக்குதிரை

11. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + தொகை=எட்டுத்தொகை

12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில்தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி

நாடு + பற்று = நாட்டுப்பற்று

13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பொது+ தேர்வு = பொதுத்தேர்வு

திரு+ குறள் = திருக்குறள்

14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான்= சாலப்பேசினான்.

தவ + சிறிது = தவச்சிறிது.

15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் =எனக்கூறினான்.

இனி + காண்போம்= இனிக்காண்போம்.

வல்லினம்மிகாஇடங்கள்

1. அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச்சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது+ பறந்தது= அதுபறந்தது.

அவை + பறந்தன= அவைபறந்தன.

எது+ தங்கம்= எதுதங்கம்

எவை + சென்றன =எவைசென்றன.

2. ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகளின் பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான்=அவனாசென்றான்.

அவனோ + பேசினான் = அவனோபேசினான்.

அவனே + சிரித்தான் = அவனேசிரித்தான்.

3. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர்பூத்தது

வண்டு + பறந்தது = வண்டுபறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனைபடங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனைபறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனைகாக்கைகள்

5.வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு= சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர்

இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ்கற்றார்.

கடல் + கடந்தார் = கடல்கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த =பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு= ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ்= வாழ்கதமிழ்

வாழிய + பல்லாண்டு =வாழியபல்லாண்டு

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

சல+ சல= சலசல

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிற பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் = கற்றசிறுவன்

சிறிய+ பெண் = சிறியபெண்

பயிற்சி

தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.


1. அந்த பையனை நன்றாக படிக்க செய்தல் வேண்டும்.
2. வந்த பையன் சொன்னச் செய்திகளை பொறுமையாக கேட்டல் வேண்டும்.
3. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டுப் பலரும் வியந்தனர்.
4. கபிலப் பரணர் தமிழ்புலவர்கள்.
5. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர் நன்மை தீமைகளை அறிவார்.
6. அந்த சாலை மிக செம்மையாக காணப்படுகிறது.
7. ஒவ்வொருவரும் படித்ததனை கவனமாக குறிப்பேட்டில் எழுதி வைத்தல் வேண்டும்.
8. புத்தக படிப்புத் தேவை. அத்தோடு பட்டறிவைச் சேர்த்து கொள்ளல் வேண்டும்.
9. பார்த்து பார்த்து கேட்டு கேட்டு மகிழ்ந்தேன்.

## ல,ள,ழ,ர,ற,ண,ன,ந வேறு பாடு அறிதல் மயங்கொலிகள்

### மணம் - மனம்

- உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கின்றன. ஆனால் இரண்டுக்கும் இடையே பொருள் வேறுபாடு உண்டு. இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.
- மயங்கொலி எழுத்துகள் எட்டு வகைகள், அவை:
  - ண, ன, ந
  - ல, ழ, ள
  - ர, ற

### ண, ன, ந - எழுத்துகள்




ண - நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந -நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

### இன எழுத்துகள்

(ட், ண்) (த், ந்) (ற், ன்)

- ❖ இந்த இன எழுத்துகளைக் கொண்டு டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,
- ❖ தகரத்தை அடுத்து வரும் நகரம் தந்நகரம் என்றும்,
- ❖ றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

சொற்களில் ண, ன இடம்பெறும் வகை

ட என்னும் எழுத்துக்கு முன் ண் வரும்

(எ.கா.) கண்டம், வண்டி, நண்டு

ற என்னும் எழுத்துக்கு முன் ன் வரும்

(எ.கா.) மன்றம், நன்றி, கன்று


ணகரம் வர வேண்டிய இடத்தில் னகரம் எழுதப்படுமானால் பொருள் மாறுபடும் என்பதை உணர்க.

(எ.கா) வாணம் - வெடி

பணி - வேலை

வானம்-ஆகாயம்

ல, ள, ழ – எழுத்துகள்





- ல - நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும். இது 'வ' போல இருப்பதால் 'வகர லகரம்' என்கிறோம்.
- ள - நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம். இது 'ன' போல இருப்பதால் 'னகர ளகரம்' என்று கூறுவர்.
- ழ - நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனைச் சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம். இது 'ம' போல இருப்பதால் 'மகர ழகரம்' என்று கூறுவது இலக்கண மரபு.


பொருள் வேறுபாடு உணர்க.

- ❖ விலை - பொருளின் மதிப்பு
- ❖ விளை - உண்டாக்குதல்
- ❖ விழை – விரும்பு
- ❖ இலை - செடியின் இலை
- ❖ இளை - மெலிந்து போதல்

- இழை - நூல் இழை

ர, ற – எழுத்துகள்




- ர - நாவின் நுனி மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது. இஃது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.
- ற - நாவின் நுனி மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

பொருள் வேறுபாடு உணர்க

- ஏரி - நீர்நிலை
- கூரை - வீட்டின் கூரை
- ஏறி - மேலே ஏறி
- கூறை – புடவை

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிரம் என்பது தலை (தலை / தளை )
2. இலைக்கு வேறு பெயர் தழை (தளை / தழை)
3. வண்டி இழுப்பது காளை (காலை/காளை)
4. கடலுக்கு வேறு பெயர் பரவை (பரவை / பறவை)
5. பறவை வானில் பறந்தது (பறந்தது/பரந்தது)
6. கதவை மெல்லத் திறந்தான் (திறந்தான் / திரந்தான்)
7. மணம் வீசும். (மனம்/மணம்)
8. புலியின் கண் சிவந்து காணப்படும். (கன்/கண்)
9. குழந்தைகள் பந்து விளையாடினர். (பந்து/பன்து)
10. வீட்டு வாசலில் கோலம் போட்டனர். (கோலம்/கோளம்)

தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.

என் விட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.

2. தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்.

தேர்த் திருவிழாவிற்குச் சென்றனர்.

3. வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.

வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது.

1. ல, ள, ழ ஆகிய எழுத்துகள் அமைந்த சொற்களைப் பொருளுடன் தொகுக்க.

விடை

1. அலகு – பறவை மூக்கு,அளகு – பெண் பறவை,அழகு – வனப்பு
2. அலை – திரை, திரி, அளை – தயிர், அழை – கூப்பிடு
3. இலை – தழை, இளை – மெலி, இழை – நூல்
4. ஒலி – ஓசை, ஒளி – வெளிச்சம், ஒழி – கெடு
5. கலை – வித்தை , களை – நீக்க, கழை – மூங்கில்
6. கிலி – அச்சம், கிளி – ஒரு பறவை, கிழி – துண்டாக்கு
7. தலை – சிரசு, தளை – கட்டுதல், தழை – இலை
8. தால் – நாக்கு, தாள் – கால், பாதம், தாழ் – பணி
9. வலி – வலிமை, வளி – காற்று, வழி – பாதை
10. வால் – விலங்குகளின் வால் பகுதி, வாள் – கத்தி ,வாழ் – உயிர் வாழ்.

ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. அரம் - அறம்

அரம் – கூர்மையான கருவி இரும்பைத் தேய்த்துக் கூர்மையாக்குவதற்கு அரம் பயன்படும்.

அறம் – தர்மம் – பழந்தமிழர்கள் அறச்செயல்களில் சிறந்து விளங்கினர்.

2. மனம் – மணம்

மனம் – உள்ளம் – பிறருக்கு உதவி செய்வதற்கு மனம் வேண்டும்.

மணம் – வாசனை – மல்லிகை மணம் மிக்க மலர்.

## 11ம் வகுப்பு இயல் - 2

மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1. உலை, உளை, உழை

2, வலி, வளி, வழி

3. கலை, களை, கழை

4. கனை, கணை

5. குரை, குறை

6. பொரி, பொறி

(எ.கா.) 1. உலை, உளை, உழை

மன உளைச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்.

2. வலி, வளி, வழி

விடை :

வளியானது வலிமை கொண்டு வீசுவதால் மேகக்கூட்டம் வழியறியாமல் கலைகின்றது.

3. கலை, களை, கழை

விடை :

கலைகளில் ஒன்றான கழைக்கூத்தினைக் காழ்ப்புணர்வுகொண்டு களையக்கூடாது.

4. கனை, கணை

விடை :

கனைக்கும் பரியேறி களத்தில் பகைவனின் மார்பில் கணை விடுத்தான்.

5. குரை, குறை

விடை :

எங்கள் ஊரில் குரைக்கும் நாய்களுக்கு குறைவில்லை.

6. பொரி, பொறி

விடை :

பொறிக்கும் எந்திரத்தில் பொரி பொறிக்கப்பட்டது.

## 12ம் வகுப்பு இயல் - 1

### தமிழாய் எழுதுவோம்

- மொழியை மிகச் சிறந்த கருவி என்பர். அதைத் திறம்படக் கையாண்டால் கலையாக மிளிரும். பிழை மலிய எழுதினால் வெறும் களையாகவே கொள்ளப்படும்.
- நம்மில் பலர் பிழைபடப் பேசுவதால்தான் எழுதும்போது பிழைகள் பெருகுகின்றன. தமிழைத் தமில் என்று ஒலிப்பதைவிடக் கொடிய செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது. மழையை மலை என்று உச்சரிப்பது பிழைதானே? இன்னும் சிலர் வாழைப்பழத்தை வாலப்பலம் என்றும் வாளப்பலம் என்றும் தமிழை வாழவிடாமல் செய்வர். வாயைப்பயம் என்று கூடத் தமிழையும் சேர்த்து நசுக்குவர். எதைப் பற்றியும் கவலைப்படாமல் நாற்பத்தி மூன்று என்றோ முப்பத்தி நான்கு என்றோ 'பத்தி பத்தி'யாய் எழுதித் தள்ளுவர்.
- இப்படித் தவறாய் உச்சரித்து மொழியைச் சிதைப்போரிடையே, எழுத்துகளின் வேறுபாடுகள் தெரியாமல் பிழை செய்வோர் பலருண்டு. பசியோடு வந்த விருந்தினருக்குச் சேறு கொடுத்து மகிழ்வித்தான் என்று எழுதினால் மகிழவா முடியும்? அவன் சோற்றைத் தின்றான் என்பதற்கு, அவன் சேற்றைத் தின்றான் என்று எழுதினால் நகைக்கத்தானே செய்வர்? சொத்துத் தகராறு செய்தார் என்பதை, செத்துத் தகராறு செய்தார் என்று வியப்பு ஏற்படுத்துவோரும் உண்டு. ஜயசந்திரனை 'ஜய 'சந்திரன் என்று ஜ - ஜ வேறுபாடு தெரியாமல் ஐயப்படுவோரும் இருக்கத்தானே செய்கின்றனர். அன்புள்ள ஐயா என்பது

அன்புள்ள ஜயா ஆவதும், ஜப்பான் - ஐப்பான் ஆவதும் தமிழ் தெரியாமல் எழுதுவோரின் 'சிரி'த்திரவதை எனலாம். பாண்டியப் பேரரசன் மீன் பொரித்தான் என்று அவரைச் சமையற் கலைஞராய் ஆக்குவோரும் உள்ளனர். போய்ப் பார்த்துத் திரும்பினான் என்பதற்குப் பேய் பார்த்துத் திரும்பினான் என்று எழுதி அச்சம் ஊட்டுபவர்களும் இருக்கின்றனர். கலையரசன் காலையரசன் ஆகும்போது மாலையில் அரசன் யார்? என்று கேள்வி கேட்டால்தான் திருத்திக்கொள்வர் போலும்! கலையில் சிறந்தவனைக் காலையில் சிறந்தவன் என்றெழுதிப் படிப்போரிடையே ஐயக்குண்டு வீசுவோரும் உண்டு. அவன் மலைக்காற்று வாங்கினான் என்பதற்கும் மாலைக் காற்றுக்கும் வேறுபாடு உண்டல்லவா? கோடீஸ்வரனைக் கேடீஸ்வரன் என்றெழுதினால் அவர் கோபம் கொள்வாரா மாட்டாரா? விடை பெற்றார் என்பதை வடை பெற்றார் என்றெழுதினால் தமிழ் மணக்குமா? அவர் நல்ல மணம் படைத்தவரா? நல்ல மனம் படைத்தவரா? புலி(ளி)க்கறி சாப்பிட்டேன் என்றால் சட்டம் பாயும்தானே?

- தமிழில் பிழை இல்லாமல் எழுத முடியுமா? என்று ஐயம் கொள்ளத் தேவையில்லை. மொழியின் இயல்பை உணர்ந்தும் இலக்கண விதிகளை அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத்தவிர்க்க முடியும். சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் தவறில்லாமல் எழுதத் துணைபுரியும்.
- சிலர் ந, ண, ன / ற, ர / ல, ள, ழ ஆகிய எழுத்துகள் பற்றித் தெளிவில்லாமல் இருக்கின்றனர். உயிர்மெய் எழுத்துகளில் வரும் மேல்விலங்கு, கீழ்விலங்கு, கொம்புகள், துணைக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தும் முறையிலும் கவனம் தேவை. சொல்லில் எழுத்துப் பிழை இல்லாதிருக்கலாம். ஆனால் பொருட்பிழை ஏற்பட வாய்ப்புண்டு. முடிந்தால் தரலாம் / முடித்தால் தரலாம்; கறி தின்றான் / கரி தின்றான் - இங்கே எழுத்துப்பிழையில்லை. ஆனால் பொருள் வேறுபாடு உண்டு. இடமறிந்து எழுத வேண்டும்.

எழுதும்போது ஏற்படும் பிழைகளை கீழ்க்காணும் வகைப்பாட்டில் பிரிக்கலாம்.

1. எழுத்துப் பிழை
2. சொற்பொருட்பிழை
3. சொற்றொடர்ப்பிழை
4. பொதுவான பிழைகள் சில

இப்பகுதியில் எழுத்துப் பிழைகள் பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

பிழைகளைக் களைவதற்கான வழிமுறைகளை அறிந்தால் நல்ல தமிழில் எழுத முடியும். எழுத்துகள் குறித்த அடிப்படையான செய்திகள் சிலவற்றை மீண்டும் நினைவுகூர்தல் இங்கு உதவும்.

**அடிப்படைச் செய்திகள்**

(அ) உயிரெழுத்துகள் 12. குறில், நெடில் என்று இரண்டு வகைப்படும்.

(ஆ) மெய்யெழுத்துகள் 18. மூன்று வகைப்படும்.

வல்லின மெய்கள் - க், ச், ட், த், ப், ற்

மெல்லின மெய்கள் - ங், ஞ், ண், ந், ம், ன்

இடையின மெய்கள் - ய், ர், ல், வ், ழ், ள்

(இ) உயிர்மெய் எழுத்துகள் 216. (உயிர்மெய்க் குறில் 90, உயிர்மெய் நெடில் 126)

(ஈ) ஆய்தம் 1

**எழுத்துப்பிழை தவிர்க்க**

- எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுதமுடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம். குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பதும் எழுத்துகள் வரும்முறையில் தெளிவற்றிருப்பதும் பிழைகள் மலியக் காரணமாய் அமைகின்றன.
- எழுத்துகளின்ஒலிப்புமுறை. அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு. அவை சொல்லில் வரும் இடங்களையும் (முதல், இடை, கடை) தெள்ளத் தெளிவாய் மனத்துள் பதித்துக்கொள்வதைக் கடமையாகக்கொள்ள வேண்டும். ந, ண, ன / ற, ர / ல, ள, ழ இவற்றின் வேறுபாடு அறிந்து வாய்விட்டு ஒலித்துப் பழகுவது சாலச் சிறந்தது. இவ்வெழுத்துகளுக்கான சில இலக்கணத்தையும் கசடறக் கற்றல் இன்றியமையாத கற்றல் பணியாகும்.
- மேலுள்ள எட்டு எழுத்துகளில் நகரம் மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும். றகர மெய் சொல்லின் இறுதியில் வராது. மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.
- மேலுள்ள எட்டு எழுத்துகளில் மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும். றகர மெய் சொல்லின் இறுதியில் வராது. மற்றவை சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் வரும்.

**ந, ண, ன, ற, ர, ல, ள, ழ**

| ந, ண, ன, ற, ர, ல, ள, ழ | | |
|---|---|---|
| முதல் | இடை | கடை |
| நண்டு, நாடகம் | பந்து, கண்டு, கன்று, கற்று, பார்த்து, கால்கள், கொள்வது, புகழ்வது | கண், அவன், பார், கால், கொள், புகழ் |

- தமிழில் சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை. வரின் தமிழில்லை. க்ரீடம், ப்ரியா வடமொழி: க்ளிஷே - ஆங்கிலம்
- வல்லின மெய்யோடு சொல் முடியாது.அப்படி முடிந்தால் தமிழ்ச் சொல்லன்று என்றுணர்க. பார்க் (Park), பன்ச் (Punch), பட் (But), போத் (Both), டப் (Tub) போன்றவை தமிழில்லை.

- வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை, காட்ச்சி, முயற்ச்சி என்றெழுதுவது பிழை.
- க், ச், த், ப் ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா. காக்கை, பச்சை,பத்து, உப்பு.
- ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க. ச, ப என்னும் வரிசைகளுமே வரும். பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம், காற்று, கற்க, கற்சிலை, கற்பவை
- ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா. டமாரம், றப்பர் - தமிழ் இல்லை .
- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும் (அஃது, எஃகு, கஃசு).
- மெல்லின எழுத்துகளில் ண, ன சொல்லின் தொடக்கமாக வாரா.
- தனிச்சொல்லின் இடையில் வல்லினத்துக்குமுன் அவ்வல்லினமெய்யோ அவற்றின் இன மெல்லினமெய்யோ வரும். பிறமெய்கள் வருவதில்லை (தக்கை, தங்கை, பச்சை, இஞ்சி, பண்டு, பட்டம், பத்து, பந்து, தப்பு, பாம்பு, கற்று, கன்று).
- ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள்வினைமுற்று / கள் விகுதி (வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும் (தேய்க. நாய்கள். தாய்சேய், ஊர்க, ஊர்கள், ஊர்சூழ், செல்க, கால்கள், செல்கணம், வாழ்க, வாழ்தல், தோள்கள்).
- ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருவதில்லை. (கண்டு என்று வரும், கன்டு என்று வருவதில்லை. மன்றம் என்று வரும் மண்றம் என்று வருவதில்லை.)
- ஞ், ந், வ் என்னும் எழுத்துகளில் முடியக்கூடிய சொற்கள் அரிதாக உள்ளன (உரிஞ். வெரிந் பொருந், தெவ்).
- ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும் (பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை).
- தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.
- தனிக்குறிலையடுத்து ரகர ஒற்று வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுதவேண்டும் (நிர்வாகம் – நிருவாகம்; கர்மம் – கருமம், கன்மம்)
- ரகரத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகரவரிசை எழுத்துகளும் வாரா.
- உயிர் வரின் ஒரு, இரு முறையே ஓர், ஈர் என்று மாறும்.
- உயிர் வரின் அது, இது, எது முறையே அது, இது, எஃது என்பதாக மாறும்.

லகர எகர விதிகள் சில

- வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு. கல் + சிலை = கற்சிலை, கடல் + கரை = கடற்கரை.

- லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு. பல் + முகம் பன்முகம்.
- ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. மக்கள் + பேறு = மக்கட்பேறு.
- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு. நாள் + மீன் = நாண்மீன்.
- வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும். சொல் + துணை = சொற்றுணை.
- வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும். பல் + நூல் = பன்னூல்.
- அல்வழியில், தனிக்குறிலை அடுத்து லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும். அல் + திணை = அஃறிணை: பல் +துளி = பஃறுளி.
- இயக்குநர் என்பதே சரி. இயக்குனர் என்று எழுதுவது தவறு. இயக்கு. ஓட்டு. அனுப்பு. பெறு முதலான வினைகள் பெயரிடைநிலையான ந் என்பதைப் பெற்று (பூ+அர் =நர்), ஓட்டுநர், அனுப்புநர், பெறுநர் என்று பெயர்ச்சொற்களாகின்றன. உறுப்பினர், குழுவினர், ஊரினர் முதலானவை (உறுப்பு, குழு, ஊர்) பெயர்ச்சொற்கள். அதனால், அவை இன் என்னும் சாரியையைப் பெற்று முடிந்துள்ளன.

சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிறபோது பிழைகளைத் தவிர்க்கமுடியும்.

அறம் - அரம்; குறை - குரை; வளம் - வலம்: களம் - கலம்: கிளி - கிலி; என்றாள் - என்றால்; போனாள் - போனால்; ஆணை - ஆனை: மழை - மலை முதலிய சொற்களின் பொருள் வேறுபாட்டினைக் கற்றுணர்தல் மாணவர்களின் இன்றியமையாத பணியாகும்.

### பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ,ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்துகொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.
- கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுதவேண்டும்.

## 12ம் வகுப்பு இயல் - 2

மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1. தலை, தளை, தழை
2. கலை, களை, கழை
3. அலை, அளை, அழை

எ.கா : விலை, விளை, விழை

கார்ப் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

1. தலை, தளை, தழை

ஆட்டிற்குத் தழை திருடப்போன இடத்தில் மரத்தில் தலை தட்டி விழுந்தவனைத் தோட்டக்காரன் தளையிட்டு ஊர்த்தலைவரிடம் அழைத்துச் சென்றான்.

2. கலை, களை, கழை

கழை காட்டில் தீப்பிடித்ததால் களைகளுடன் கலைமான்களும் செத்து மடிந்தன.

3. அலை, அளை, அழை

கடலலையில் விளையாடச் சென்ற முருகன் அளையில் இருந்த அரவம் தீண்ட எத்தனை முறை அழைத்தும் பேச்சு மூச்சின்றி மயங்கிக் கிடந்தான்.

## 8ம் வகுப்பு

### எழுத்துகளின் பிறப்பு

- அ, உ, க, ப -ஆகிய எழுத்துகளை ஒலித்துப் பாருங்கள். வாயைத் திறந்து ஒலித்தாலே அ என்னும் எழுத்து ஒலிக்கிறது. உ என்னும் எழுத்தை ஒலிக்கும்போது இதழ்கள் குவிகின்றன. நாக்கின் முதற்பகுதி மேல் அண்ணத்தில் ஒட்டும்போது க என்னும் எழுத்து பிறக்கிறது. ப என்னும் எழுத்து இதழ்கள் இரண்டும் ஒட்டுவதால் பிறக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு எழுத்துக்கும் பிறக்கும் இடமும் பிறக்கும் முயற்சியும் வெவ்வேறாக உள்ளன.

### பிறப்பு

- உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

### எழுத்துகளின் இடப்பிறப்பு

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.


எழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

உயிர் எழுத்துகள்



- அ, ஆ ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.
- இ, ஈ,எ,ஏ,ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.
- உ,ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

மெய் எழுத்துகள்




- க், ங் - ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ச் ஞ் - ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடுஅண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ட், ண் - ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- த், ந் - ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.
- ப், ம் - ஆகிய இருமெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.

- ய் - இது நாக்கின் அடிப்பகுதி, மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.
- ர், ழ் - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
- ல் - இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ள் - இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.
- வ் - இது மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.
- ற், ன் - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

சார்பெழுத்துகள்

- ஆய்த எழுத்து வாயைத்திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது. பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்

அ) இ, ஈ

ஆ) உ, ஊ

இ) எ, ஏ

ஈ) அ, ஆ

[விடை : ஆ) உ, ஊ]

2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் --------

அ) மார்பு

ஆ) கழுத்து

இ) தலை

ஈ) மூக்கு

[விடை : இ) தலை]

3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம்

அ) தலை

ஆ) மார்பு

இ) மூக்கு

ஈ) கழுத்து

[விடை : ஆ) மார்பு]

4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள்

அ) க், ங்

ஆ) ச், ஞ்

இ) ட், ண்

ஈ) ப், ம்

[விடை : இ) ட், ண்]

5. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து --------- .

அ) ம்

ஆ) ப்

இ) ய்

ஈ) வ்

[விடை : ஈ) வ்]

பொருத்துக.

1. க், ங் – அ) நாவின் இடை, அண்ண த்தின் இடை.

2. ச், ஞ் – ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி.

3. ட், ண் – இ) நாவின் முதல், அண்ண த்தின் அடி.

4. த்,ந் – ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி.

விடை

1. க், ங் – இ) நாவின் முதல், அண்ண த்தின் அடி.

2. ச், ஞ் – அ) நாவின் இடை, அண்ண த்தின் இடை

3. ட், ண் – ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி.

4. த்,ந் – ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி.

## 6ம் வகுப்பு பழைய புத்தகம்

ல,ள,ர,ற,ண,ன,ந வேறுபாடு

- கிணரில் போட்டேன் = கிணற்றில் போட்டேன்
- சுவற்றில் வரைந்தேன் = சுவரில் வரைந்தேன்
- வயிர் பசிக்கிறது = வயிறு பசிக்கிறது
- மல்லிகை மணம் வீசியது(மனம்,மணம்)
- பூமியை வலம் வருவேன்(வலம்,வளம்)
- புலி பதுங்கிப் பாயும்(புலி, புளி)
- முகத்தில் புன் முறுவல் வேண்டும்(புன்,புண்)
- நாய் வால் நிமிராது(வால்,வாள்)

## 9ம் வகுப்பு பழைய புத்தகம்

## மயங்கொலிச் சொல் அறிதல்(26)

- அரை – பாதி
- அறை - கட்டடப்பகுதி
- உரை - பேசுதல்
- உறை- உறைதல்
- கரை – ஆற்றின் கரை
- கறை- ஆடையில் படியும் கறை
- கூரிய – கூர்மை
- கூறிய - கூறியவை
- கூரை - வீட்டின் கூரை
- கூறை – புடவை
- பரவை - கடல்
- பறவை - பறத்தல்
- இரங்கு - கருணை
- இறங்கு- படி இறங்குதல்
- எரிதல் - தீப்பற்றுதல்
- எறிதல் - வீசுதல்
- இறை - கடவுள்
- இரை - உணவு
- மணம்- வாசம்
- மனம் – உள்ளம்
- பணி - வேலை
- பனி - பனிப்பொழிவு
- ஆணி - இரும்பாணி
- ஆனி - மாதம்
- அலை - கடலலை
- அழை – கூப்பிடுதல்
- அளை- புற்று
- இலை- செடிகொடிகளின் இலை
- இழை- நூலிழை
- இளை- மெலிதல்
- உலை - அணுஉலை
- உழை- பாடுபடுதல்
- உளை- மனஉளைச்சல்
- கலை - ஆண்மான்

- கழை - கரும்பு
- களை- அயர்வு
- அலகு- பறவையின் அலகு
- அழகு- வனப்பு
- அளகு- பெண்மயில்
- வால்- குரங்கின் வால்
- வாழ்- சிறப்பாக வாழ்தல்
- வாள்-வீர வாள்
- தால்- தாலாட்டு, நாக்கு
- தாள்-எழுதுவதற்கு பயன்படும் பொருள்
- தாழ்-தாழ்ப்பாள்
- ஆல்- ஆலமரம்
- ஆழ்- ஆழம், மூழ்கு
- ஆள்- மனிதர்

இவ்வாறான மயங்கொலிச் சொற்களைப் பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம் மாணவர்களே.

மாணவர்களே மற்றொரு வகுப்பில் சந்திக்கலாம்.

## 12ம் வகுப்பு பழைய புத்தகம்

ண, ந, ன வேறுபாடு அறிக

- 1. அரண்- மதில், பாதுகாப்பு, கோட்டை
- அரன்-சிவன்
- 2. அண்ணம் - மேல்வாய்
- அன்னம்- ஒரு பறவை

## 12ம் வகுப்பு இயல் 1

**1. மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

மாணவச் செல்வங்களே,

இன்று உங்களுக்கு மயங்கொலி எழுத்துகள் அமைந்த சொற்களையும், அதன் பொருள் வேறுபாட்டினையும் கற்பிக்கப் போகிறேன்.

**ராமு** : ணகர னகர வேறுபாடுகளை விளக்குங்கள் ஐயா.

அண்ணம் - மேல்வாய்

அன்னம் - உணவு / சோறு

ட - பக்கத்தில் வரும் ண - இதை டண்ணகரம் என்று அழைப்பதுண்டு.

அன்னத்தில், ற - பக்கத்தில் வரும் ன - இதை றன்னகரம் என்று அழைப்பதுண்டு.

**சோமு** : ஐயா இதன் பயன்பாடுகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

இதன் பயன்பாடுகள் : ட – ண வும், ற - பக்கத்தில் ன வும் வரும் எனப்புரிந்தால் எழுத்துப்பிழைகள் மிகக் குறையும்.

மன்றம் - அவை

மண்டபம் - மக்கள் கூடுமிடம்

குன்று - சிறிய மலை

குண்டு - உருண்டை (வடிவம்)

இவை போன்று வேறுபாடு கண்டு பிழைகளைக் களையலாம்.

**ராமு** : இன்னுமொரு விளக்கம் தேவை. ல-ழ வேறுபாடுகள் பற்றியும் விளக்கம் தேவை ஐயா.

ல-ழ வேறுபாடு

கலை - நுட்பம் / அறிவு

கழை - மூங்கில்

மலை- குன்று

மழை - வான்மழை

தலை - உடல் உறுப்பு

தழை - வளர் / இலை

விலை - மதிப்பு

விழை - விருப்பம்

இவ்வாறான மயங்கொலிச் சொற்களை பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம்.

**ராமு** : மிக்க நன்றி ஐயா, தெளிவாகப் புரிந்து கொண்டேன் ஐயா.

ர-எ மயங்கொலிச் சொற்களுக்கு எ.கா. தாருங்கள் ஐயா.

ர - ற வேறுபாடு

மரம் - தாவரம்

மறம் - வீரம்

அரம் - கருவி

அறம் - தருமம்

இவ்வாறான மயங்கொலிச் சொற்களைப் பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம்.

சோமு : ஐயா, கடைசியாக லகர னகர வேறுபாட்டையும் கூறுங்கள் ஐயா. ல ள வேறுபாடு

கலை – அறிவு / நுட்பம்

களை - பயிரின் நடுவே வளர்வது / ஆடை களைதல்

கோல் - குச்சி

கோள் - செவ்வாய் (கோள்)

வலம் - வலப்புறம்

வளம் - செழிப்பு

## இன எழுத்துக்கள் , சுட்டு எழுத்துக்கள், வினா எழுத்துக்கள் அறிதல்

### 6ம் வகுப்பு இன எழுத்துகள்

- சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும். ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.




(எ.கா.) திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்




இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.




- மெய்யெழுத்துகனைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில்

எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும்.

- சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ.கா) ஓஒதல், தூஉம், தழீஇ

தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ) மஞ்சள் ஆ) வந்தான்

இ) கல்வி ஈ) தம்பி

[விடை : இ) கல்வி]

2. தவறான சொல்லை வட்டமிடுக.

அ) கண்டான் ஆ) வென்ரான்

இ) நண்டு ஈ) வண்டு

[விடை : ஆ) வென்ரான்]

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

பிழை - திருத்தம்

தென்றல் – தென்றல்

கன்டம் – கண்டம்

நன்ரி – நன்றி

மன்டபம் – மண்டபம்

tnpscbooks

**இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்.**

கங்கை, பக்கம், வண்டு, மண்டபம், மங்கை,

வெந்தயம், தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள்,

கம்பனம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்

விடை

(கங்கை), பக்கம், (வண்டு), (மண்டபம்), (மங்கை)

(வெந்தயம்), (தந்தம்), (பஞ்சு), பச்சை, தக்காளி, (மஞ்சள்)

(கம்பளம்), (குன்று), காக்கை, (செங்கடல்), (தேங்காய்)

**கீழ்க்காணும் சொற்களுள் அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுங்கள்.**

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பண்டம், சுண்டல், வண்டி,

பந்தயம்,பத்து, கற்கண்டு, தென்றல், நன்று

விடை

1. சங்கு – ங்கு
2. நுங்கு – ங்கு
3. பிஞ்சு – ஞ்சு
4. வஞ்சம் – ஞ்ச
5. பட்டணம் – ட்ட
6. சுண்டல் – ண்ட
7. வண்டி – ண்டி
8. பந்தயம் – ந்த
9. பந்து – ந்து
10. கற்கண்டு – ண்டு
11. தென்றல் – ன்ற
12. நன்று – ன்று

கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்டமிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | அ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

விடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | அ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

(i) மண்டபம்

(ii) பந்து

(iii) சங்கு

(iv) மஞ்சள்

(v) தென்றல்

6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 1

இயல் - 1

## இலக்கணமும் மொழித்திறனும்

### இலக்கணம் எதற்கு?

- நாம் பேசும் மொழியை எழுதும் மொழியை முறையாகப் புரிந்து கொள்வதற்கு இலக்கணம் தேவை
- இப்படி எழுது, அப்படி எழுது என்று கட்டளை இடுவதற்காக இல்லை
- அவன் வந்தாள் – என்று எழுதினால் யாருக்காவது புரியுமா? வந்தவர் ஆணா பெண்ணா என்பது எப்படி தெரியும்?
- நாம் பேசுவதும் எழுதுவதும் மற்றவர்க்கும் புரிய வேண்டும், ஆகையால் இலக்கணம் தேவைப்படுகிறது.

### மொழிக்குள் வியப்பு

- ஒரு கடலைப் பார்க்கிறோம் . ஒரு மலையைப் பார்க்கிறோம் எப்படி வியக்கிறோம் ஒரு மொழியைப் படிக்கும் போது அப்படி ஒரு வியப்பு ஏற்படும்
- தமிழின் முதல் எழுத்து – அ
- அ என்னும் எழுத்தின் முதுகுக்குப் பின்னால் | என்று ஒரு கோடு இருக்கிறது, உலகத்தில் நூற்றுக்கணக்கான மொழிகளின் முதல் எழுத்தில் இப்படி ஒரு கோடு இருக்கிறது. அ எழுத்து மனிதனைக் குறிக்கிறதாம். | என்னும் முதுகுக்கோடு பழங்காலத்தில் வேட்டை ஆடுவதற்கு மனிதன் முதுகில் சுமந்த அம்புக் கூட்டைக் குறிக்கிறதாம், என்னே வியப்பான செய்தி!
- எழுத்துகளும் மனிதர்களும்
- மனிதர்களைப் போலத்தான் எழுத்துகளும், அவற்றுக்குள் நட்பும் உண்டு இனமும் உண்டு.
- 'ங்' என்னும் எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும். 'ங' , 'க' இரண்டும் நண்பர்கள் (எ.கா.) சிங்கம், தங்கை
- அதேபோல் 'ஞ்', 'ச்' இரண்டும் நண்பர்கள் இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ,கா.) மஞ்சள், அஞ்சாதே
- ண்ட, ந்த, ம்ப, ன்ற எழுத்துகளும் நண்பர்கள். பெரும்பாலும் இவை சேர்ந்தே வரும். (எ,கா.) பண்டம், பந்தல், கம்பன், தென்றல்
- நட்பு எழுத்துகளை இன எழுத்துகள் என இலக்கணம் கூறுகிறது.

## 6ம் வகுப்பு பருவம் - 2

## இயல் - 3

### சுட்டு எழுத்துகள்

- அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த ஆகிய சொற்களைக் கவனியுங்கள். அவை ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சுட்டிக்காட்டுவதற்கு அச்சொற்களின் முதலில் அமைந்துள்ள அ, இ ஆகிய எழுத்துகளே காரணம் ஆகும்.
- இவ்வாறு ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்,
- அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால், இன்று 'உ என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

அகச்சுட்டு

- இவன், அவன், இது, அது -இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு, சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

புறச்சுட்டு

- அவ்வானம்-இம்மலை-இந்நூல்-இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

அண்மைச்சுட்டு

- இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு - இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இஃது அண்மைச்சுட்டு எனப்படும். அண்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'இ' ஆகும்.

சேய்மைச்சுட்டு

- அவன், அவர், அது, அவை, அவ்வீடு. அம்மரம் - இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இது சேய்மைச்சுட்டு எனப்படும். சேய்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'அ' ஆகும்.

**தெரிந்து தெளிவோம்**

- அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட 'உ என்ற கட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- (எ.கா.) உது, உவன்

சுட்டுத்திரிபு

- அம்மரம், இவ்வீடு ஆகியவை புறச்சுட்டுகள் என்பதை அறிவோம். இச்சொற்களை அந்த மரம், இந்த வீடு என்றும் வழங்குகிறோம்.
- அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று (திரிந்து) அந்த, இந்த என வழங்குகின்றன.
- இவ்வாறு, அஇ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த இந்த எனத் திரித்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும்.

## வினா எழுத்துகள்

- வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர். சில வினா எழுத்துகள் சொல்லின் முதலில் இடம்பெறும். சில வினா எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும்.
- ஏ, யா,ஆ,ஓ,ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.
  - ❖ மொழியின் முதலில் வருபவை - எ, யா (எங்கு, யாருக்கு)
  - ❖ மொழியின் இறுதியில் வருபவை - ஆ,ஓ (பேசலாமா,தெரியுமோ)
  - ❖ மொழி முதலிலும் இறுதியிலும் வருபவை - ஏ (ஏன், நீதானே)

அகவினா

- எது, யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துக்களுக்குப் பொருள் இல்லை.
- இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும்.

புறவினா

- அவனா? வருவானோ? இச்சொற்களில் உள்ள ஆ ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.
- இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருவது புறவினா எனப்படும்.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. என் வீடு அங்கே உள்ளது. (அது/அங்கே )
2. தம்பி இங்கே வா. (இவர்/இங்கே )
3. நீர் எங்கே தேங்கி இருக்கிறது? (அது/எங்கே )
4. யார் அவர் தெரியுமா? (அவர்/யாது)
5. உன் வீடு எங்கே அமைந்துள்ளது? (எங்கே என்ன)

சொற்றொடர்ப் பயிற்சி.

அ) அந்த, இந்த என்னும் சுட்டுச்சொற்களை அமைத்துத் தொடர்கள் எழுதுக.

விடை

(i) அந்தக் குழந்தை அழகாக இருந்தது.

(ii) இந்தக் குளத்தில் நீர் வற்றி விட்டது.

ஆ) எங்கே, ஏன், யார் ஆகிய வினாச்சொற்களை அமைத்துத் தொடர்கள் எழுதுக.

விடை

(i) "எங்கே செல்கிறாய்?" என்று கண்ணன் முகிலனிடம் கேட்டான்.

(ii) "ஏன் அழுகிறாய்?" என்று தாய் குழந்தையைக் கேட்டாள்.

(iii) திருக்குறளை இயற்றியவர் யார்?

## 10ம் வகுப்பு இயல் 5

### வினா, விடை வகைகள், பொருள்கோள்

- பல்வேறு சூழல்களில் வினாக்கள் வினவுகிறோம்; விடைகள் கூறுகிறோம். மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும் விடையளிப்பதிலும்கூட இருக்கிறது. அவற்றைப் பற்றி நன்னூலார் விளக்கியிருக்கிறார்.

**வினாவகை**

- அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினா ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| அறிவினா | தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது. | மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல். |
| அறியா வினா | தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது. | ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல். |
| ஐய வினா | ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது. | 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல். |
| கொளல் வினா | தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது. | 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல். |
| கொடை வினா | பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது. | 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காக வினவுதல். |
| ஏவல் வினா | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது. | "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல். |

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார் - நன்னூல்,385

"சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும் எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப" - நன்னூல்,386






**விடைவகை**

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடை எட்டு வகைப்படும்.

முதல் மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனவும் அடுத்த ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சுட்டு விடை | சுட்டிக் கூறும் விடை | 'கடைத்தெரு எங்குள்ளது?' என்ற வினாவிற்கு, 'இப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல். |
| மறை விடை | மறுத்துக் கூறும் விடை | 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல். |
| நேர் விடை | உடன்பட்டுக் கூறும் விடை | 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போவேன்' என்று உடன்பட்டுக் கூறல். |
| ஏவல் விடை | மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை. | இது செய்வாயா?" என்று வினவியபோது, "நீயே செய்"என்று ஏவிக் கூறுவது |
| வினா எதிர் வினாதல் விடை | வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது. | 'என்னுடன் ஊருக்கு வருவாயா?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது. |
| உற்றது உரைத்தல் விடை | வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல். | 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று உற்றதை உரைப்பது. |
| உறுவது கூறல் விடை | வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல். | 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று உறுவதை உரைப்பது. |
| இனமொழி விடை | வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல். | "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது |

## 6ம் வகுப்பு சுட்டெழுத்து

**இலக்கணமும் மொழித்திறனும்**

1. ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு பணி

"யார் இதை உடைத்தது?"

"இவன்"

- இந்த உரையாடல் நம் வீட்டுக்குள் அடிக்கடி நடக்கிறது.

அவன், அவள், அவர், இவன், இவள், இவர்,

அது, இது, அவை, இவை

என்ற சொற்கள், குறிப்பிட்ட மனிதரையோ பொருளையோ சுட்டிக்காட்ட உதவுகின்றன . அவை அ.இப்படிச் சுட்டிச்சொல்ல உதவும் எழுத்துகள் இரண்டு, இ. இவற்றைச் சுட்டெழுத்துகள் என்கிறோம் பழங்காலத்தில் .'உ' என்பதும் சுட்டெழுத்துதான் . 'உ' எழுத்து, பல பணிகளைச் செய்தது.

உதுக் காண் என்றால் சற்றுத் தூரத்தில் பார் என்று பொருள்.

உப்பக்கம் என்றால் முதுகுப் பக்கம் என்று பொருள்.

உம்பர் என்றால் மேலே என்று பொருள்.

இப்பொழுது, பயன்படுத்துவது இல்லை சுட்டிச்சொல்ல நாம் .'உ' எழுத்தைப் அவன், இவன், அது, இது என்று சுட்டுவது ஒருமுறை.

அப்பையன்

இப்பெண்

இவ்வீடு

என்றும் சுட்டுவோம் என்ன வேறுபாடு .? அவன், அவள், என்ற சுட்டுச் சொற்கள் ஆணா, பெண்ணா என்பதையும் சுட்டிச்சொல்லி பிடுகின்றன.

அ, இ சுட்டெழுத்துகள் தனியே நின்று சுட்டும்போது, ஆண் பண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன.

இன்று அது, இது, அந்த, இந்த, அங்கு, இங்கு என்ற சுட்டுச் சாற்களே பெருவழக்காகி விட்டன.

அந்தப் பக்கம்

இந்த வீடு

குறில் நெடில் கீழ்க்காணும் தொடர்களைக் குறில் நெடில் வேறுபாடு அறிந்து நிரப்புக.

1. அமுதன் பால் குடித்தான்(பல், பால்)
2. தென்றல் பாடம் படித்தாள்(பாடம், படம்)
3. சிற்பி சிலை செதுக்கினான்(சீலை, சிலை)
4. கடைஎழு வள்ளல்களுள் ஒருவர் பாரி(பரி, பாரி)
5. முகிலனின் பாட்டி கதை கூறுவார்(காதை, கதை)

இன எழுத்து கீழ்க்காணும் தொடர்களை உரிய இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதி நிரப்புக.

1. யானையிடம் உள்ளது தந்தம்

2. குளிர்ந்த காற்று தென்றல்
3. மெத்தையினுள் இருப்பது பஞ்சு
4. விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று பம்பரம்
5. நகை செய்யப் பயன்படுவது தங்கம்
6. வளையில் இருப்பது நண்டு
7. (பஞ்சு, தங்கம், தென்றல், நண்டு, தந்தம், பம்பரம்)

## 6 ஆம் வகுப்பு தமிழ் பருவம் :2

## இயல் - 3

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. என் வீடு அங்கே உள்ளது( அங்கே/அது).
2. தம்பி இங்கே வா( இங்கே/இவர்).
3. நீர் எங்கே தேங்கி இருக்கிறது? (அது( எங்கே/
4. யார் அவர் தெரியுமா? (அவர்(யாது/
5. உன் வீடு எங்கே அமைந்துள்ளது? (எங்கே என்ன(

1. பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக.

அ, பாண்டியன் நல்லவன் – பாண்டியன் நல்லவனா?

ஆ. அப்துல்லா வீட்டுக்கு வந்து விட்டார் - அப்துல்லா வீட்டுக்கு வந்து விட்டாரா?

இ, கடல் பெரியது – எது பெரியது?

## 10 ஆம் வகுப்பு தமிழ் இயல் - 3

3. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப் போக்கர் கேட்டது

---------------------- வினா.

"அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ----------- விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்

ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியா வினா, சுட்டு விடை

ஈ) கொளல் வினா, இனமொழி விடை

## ஒருமை பன்மை

## 7ம் வகுப்பு

**பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.**

எ.கா : கண்ணகி சிலம்பு அணிந்தான்.

விடை : கண்ணகி சிலம்பு அணிந்தாள்.

**1. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.**

கோவலன் சிலம்பு விற்கப் போனான்.

**2. அரசர்கள் நல்லாட்சி செய்தார்.**

அரசர்கள் நல்லாட்சி செய்தனர்.

**3. பசு கன்றை ஈன்றன.**

பசு கன்றை ஈன்றது.

**4. மேகங்கள் சூழ்ந்து கொண்டது.**

மேகங்கள் சூழ்ந்து கொண்டன.

**5. குழலி நடனம் ஆடியது.**

குழலி நடனம் ஆடினாள்.

## 8ம் வகுப்பு Page no 164

சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.

1. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை அல்ல
2. உங்களோடு வருவோர் நாம் அல்லோம்.
3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் அல்லள்
4. மொய்த்த பண்டங்கள் எதிர்மறைச் சொற்கள்

வந்தது நீ அல்ல; பார்த்தது நான் அல்ல, நான் படித்த புத்தகம் இது அல்ல என்றெல்லாம் பேசுகின்றோம். இவையெல்லாம் சரியான தொடர்கள் அல்ல. எதிர்மறை வினைமுற்றுகள் பல உண்டு. அவற்றை இடம் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

தன்மை

ஒருமை - நான் அல்லேன்.

பன்மை - நாம் அல்லோம்.

முன்னிலை

ஒருமை - நீ அல்லை.

பன்மை - நீவிர் அல்லீர்,

படர்க்கை

ஆண்பால் - அவன் அல்லன்.

பெண்பால் - அவள் அல்லள்.

பலர்பால் - அவர் அல்லர்,

ஒன்றன்பால் - அஃது அன்று.

பலவின் பால் - அவை அல்ல.

'வேறு, உண்டு, இல்லை' - ஆகியவை மூவிடத்திற்கும், ஐம்பாலுக்கும் பொதுவான சொற்கள் ஆகும்.

**பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.** Page no 165

1. அதைச் செய்தது நான் அன்று.

**விடை : அதைச் செய்தது நான் அல்லேன்.**

2. பானையை உடைத்தது கண்ணன் அல்ல.

**விடை : பானையை உடைத்தது கண்ணன் அல்லன்.**

3. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.

**விடை : மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று.**

4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

**விடை : சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லர்.**

5. பகைவர் நீவீர் அல்லர்.

**விடை : பகைவர் நீவீர் அல்லீர்.**

**தான், தாம் என்னும் சொற்கள்** Page no 212

- தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- (எ.கா.) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
- மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.
- (இங்குத் தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)
- (எ.கா) மாடுகள் தமது தலையை ஆட்டின.
- கன்று தனது தலையை ஆட்டியது.

**கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. சிறுமி தனது (தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.

2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் தமது (தனது தமது) உழைப்பை நல்கினார்.

3. உயர்ந்தோர் தம்மைத்தாமே (தம்மைத்தாமே/தன்னைத்தானே) புகழ்ந்து கொள்ளமாட்டார்கள்.

4. இவை தாம் (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.

5. குழந்தைகள் தம்மால் (தன்னால்/தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

Page 213

தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்தான் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

விடை

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தன்னுடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

9th new

tnpscbooks

ஒருமை பன்மை

கீழ்க்காணும் சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.

விடை :

அ) அவை யாவும் இருக்கின்றன –

தவறு (அவை - பன்மை ; யாவும் - ஒருமை)

அவை யாவையும் இருக்கின்றன. –

சரி (அவை - பன்மை ; யாவையும் - பன்மை )

அவை யாவும் எடுங்கள் -

தவறு (அவை யாவும் எடு என்பதே சரி) அவை - பன்மை , யாவும் - ஒருமை, எடு - ஒருமை)

அவை யாவையும் எடுங்கள் -

தவறு (அவை யாவையும் எடு என்பதே சரி) அவை - பன்மை, யாவையும் - பன்மை, எடு - ஒருமை

அவை யாவற்றையும் எடுங்கள் –

சரி (அவை - பன்மை, யாவற்றையும் - பன்மை)

8th old

பிழை நீக்கி எழுதும் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்துப் பிழைகளைப் பட்டியலிடுக.

(எ.கா.) ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார். அந்த சுற்றுலாவில் அவர் தான் கண்டதை கூறவே, ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

பிழைகள்

| பிழை | சரி |
|---|---|
| ஓர் மாவட்டம் | ஒரு மாவட்டம் |
| ஒரு அமைச்சர் | ஓர் அமைச்சர் |
| அவரது மகனோடு | அவருடைய மகனோடு |
| மேற்க்கொண்டார் | மேற்கொண்டார் |
| அந்த சுற்றுலா | அந்தச்சுற்றுலா |
| கண்டதை கூறவே | கண்டதனைக் கூறவே |
| அவர்தான் | அவர்தாம் |

6th old

1. ஒருமைபன்மை-

பிழை

அகாற்று வீசின .; மரங் .அசைந்தது -

ஆ .தங்கப்பனும் செல்லனும் பள்ளிக்குச் சென்றா

திருத்தம்

காற்று வீசியது; மரங்கள் அசைந்தன.

தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றார்கள்.

ii. காலம்

பிழை

அ.நாளைக்கு நான் ஊரு குப் போய்ச்சேர்ந்தேன் .

ஆநேற்று பால் பொங்குகி .

திருத்தம்

நாளைக்கு ஊருக்குப் போய்ச்சேர்வேன்.

நேற்று பால் பொங்கியது.

வன்தான் முதலில் வருவான்.

தைதான் சிறந்தவள்.

## 8ம் வகுப்பு

**பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.**

**கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா.**

**விடை:**

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | மாதங்கள் | புற்கள் |
| கடல்கள் | பசுக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பாக்கள் | பக்கங்கள் | பற்கள் |

## 8ம் வகுப்பு இயல் 8

### தான், தாம் என்னும் சொற்கள்

- தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- (எ.கா.) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
- மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.
- (இங்குத் தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)
- (எ.கா) மாடுகள் தமது தலையை ஆட்டின.
- கன்று தனது தலையை ஆட்டியது.

### கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. சிறுமி **தனது** (தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.

2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் **தமது** (தனது தமது) உழைப்பை நல்கினார்.

3. உயர்ந்தோர் **தம்மைத்தாமே** (தம்மைத்தாமே/தன்னைத்தானே) புகழ்ந்து கொள்ளமாட்டார்கள்.

4. இவை **தாம்** (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.

5. குழந்தைகள் **தம்மால்**. (தன்னால்/தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

**தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்தான் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

**விடை**

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தன்னுடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

## 8ம் வகுப்பு

**எதிர்மறைச் சொற்கள்**

வந்தது நீ அல்ல; பார்த்தது நான் அல்ல, நான் படித்த புத்தகம் இது அல்ல என்றெல்லாம் பேசுகின்றோம். இவையெல்லாம் சரியான தொடர்கள் அல்ல. எதிர்மறை வினைமுற்றுகள் பல உண்டு. அவற்றை இடம் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

**தன்மை**

ஒருமை - நான் அல்லேன்.

பன்மை - நாம் அல்லோம்.

**முன்னிலை**

ஒருமை - நீ அல்லை.

பன்மை - நீவீர் அல்லீர்,

**படர்க்கை**

ஆண்பால் - அவன் அல்லன்.

பெண்பால் - அவள் அல்லள்.

பலர்பால் - அவர் அல்லர்,

ஒன்றன்பால் - அஃது அன்று.

பலவின் பால் - அவை அல்ல.

'வேறு, உண்டு, இல்லை' - ஆகியவை மூவிடத்திற்கும், ஐம்பாலுக்கும் பொதுவான சொற்கள் ஆகும்.

**பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. அதைச் செய்தது நான் அன்று.

விடை : அதைச் செய்தது நான் அல்லேன்.

2. பானையை உடைத்தது கண்ணன் அல்ல.

விடை : பானையை உடைத்தது கண்ணன் அல்லன்.

3. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.

விடை : மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று.

4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

விடை : சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லர்.

5. பகைவர் நீவீர் அல்லர்.

விடை : பகைவர் நீவீர் அல்லீர்.

**சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை **அல்ல**
2. உங்களோடு வருவோர் **நாம்** அல்லோம்.
3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் **அல்லள்**
4. மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன **அன்று**
5. இந்த நிலத்துக்கு உரிமையாளர் **நீ** அல்லை.

## 6ம் வகுப்பு பருவம் - 3

## இயல் - 1

**திடம் அறிந்து பயன்படுத்துவோம்**

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) ஓர் ஊர் ஓர் ஏரி

ஒரு நகரம் ஒரு கடல்

இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) அஃது இங்கே உள்ளது

அது நன்றாக உள்ளது

**கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக**

1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

விடை : ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

**2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.**

**விடை** : ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள்.

**3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.**

**விடை** : அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.

**4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.**

**விடை** : அது நகரத்திற்குச் செல்லும் சாலை.

**5. அது ஒரு இனிய பாடல்.**

**விடை** : அஃது ஓர் இனிய பாடல்.

## 12ம் வகுப்பு

### நால்வகைப் பொருத்தங்கள்

- ஒரு மொழியின் எழுத்துகளிலோ சொல்லமைப்பிலோ தொடரமைப்பிலோ சொற்பொருள் அமைப்பிலோ காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். தற்காலத் தமிழிலும் இவ்வகையான மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இம்மாற்றங்களை எல்லாம் தழுவிக்கொள்கிற வகையில் காலத்திற்கேற்ற இலக்கணம் நமக்குத் தேவை. மொழி வளர்ச்சியும் இலக்கணத்தின் தேவையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை.

### திணை, பால், எண், இடம்:

- திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகள்; இவை சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவும். தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன. எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தங்கள் உடையதாய் அமைகிறது. பெரும்பாலான தொடர்களில் எழுவாயை வைத்துக்கொண்டே வினைமுற்றின் திணை, பால், எண் ஆகியவற்றைச் சொல்லிவிடலாம்.

**முருகன் நூலகம் சென்றான்.**

- இத்தொடரில், முருகன் என்னும் எழுவாய் அதன் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்திவிடுகிறது. மேலும் இந்த எழுவாய் தான் பெற வேண்டிய வினைமுற்றை உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை எனப் பொருத்தமுடன் அமையுமாறு வேண்டி நிற்கிறது. இதன் மூலம் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை அறியலாம்

### திணைப்பாகுபாடு

- உலக மொழிகள் அனைத்திலும் பெயர்ச் சொற்களே மிகுதி என்பர். பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என்று இருவகையாகப் பிரிப்பர். இவ்வாறு பாகுபடுத்தும் முறை எல்லா மொழிகளிலும் ஒரேமாதிரியாக

இருப்பதில்லை . தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு இருதிணைப் பாகுபாடு அமைந்துள்ளதை இலக்கண நூல்களால் அறியலாம்.

" உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" (தொல். சொல் 1)

- எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை; அவரல்லாத பிற அஃறிணை என்று கூறுகிறது. இவ்வகைப் பாகுபாடு ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் இல்லை.
- இன்றைய தமிழில் யார்? எது? போன்ற வினாச் சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு அறியப்படுகிறது.

அங்கே நடப்பது யார்?
அங்கே நடப்பது எது?

- என்னும் தொடர்கள் பொருட்குறிப்பின் அடிப்படையில் யார் என்ற பயனிலை உயர்திணையையும் எது என்ற பயனிலை அஃறிணையையும் உணர்த்துகின்றன.
- குழந்தை, கதிரவன் போன்றவை இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள். இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது அவற்றின் வினைமுடிபு இருதிணை பெற்றும் வருகின்றது.

குழந்தை சிரித்தான் - குழந்தை சிரித்தது
கதிரவன் உதித்தான் - கதிரவன் உதித்தது

- பேச்சு வழக்கில் அஃறிணை முடிபைப் பெற்று வருவதே பெருவழக்காக உள்ளது.

**பால் பாகுபாடு**

- தமிழில் பால்பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள், படர்க்கை இடத்தில் வரும். பயனிலை விகுதிகளான ஆன், ஆள், ஆர், அது, அன் முதலியவை பால் பகுப்பைக் காட்டுகின்றன.
- .பழந்தமிழில் ஐம்பால்களுள் பலர்பால்சொல் பன்மையிலும் உயர்வு கருதிச் சிலவேளைகளில் ஒருமையிலும் வந்துள்ளன.

மாணவர் வந்தனர் (பன்மை ) - ஆசிரியர் வந்தார் (ஒருமை)

- இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்குக் கள் என்னும் விகுதி உதவுகிறது.

அவர் வந்தார் ( ஒருமை )
அவர்கள் வந்தார்கள் (பன்மை)

- தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் தொடர்களில்அமையும்போது வினைமுற்றைப் பொறுத்தே பால் அறியப்படுகிறது.

தங்கமணி பாடினான் -

தங்கமணி பாடினாள்

- பால் காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துகின்றன.

ஆண் - பெண்

தம்பி - தங்கை

அப்பா - அம்மா

தந்தை – தாய்

- அஃறிணை எழுவாயில் ஆண் பெண் பகுப்புமுறை மரபில் இருந்தாலும் வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லை . எனவே ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன்பால் பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.

காளை உழுதது, பசு பால் தந்தது.

- ஆகிய தொடர்களில் காளை ஆண்பாலாகவும் பசு பெண்பாலாகவும் உள்ளன. ஆனால் வினை முற்று, பால் பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல் ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது
- தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. மாட்டினத்தில் பெண்பாலைக் குறிக்க பசுமாடு எனவும் ஆண்பாலைக் குறிக்க காளைமாடு (எருது) எனவும் சொற்கள் வழங்கப்படுகின்றன. பிற விலங்குகளைக் குறிக்கையில் ஆண்குரங்கு, பெண் குரங்கு எனவும் எழுவாய்ப் பொதுப்பெயருடன் ஆண் பெண் என்னும் பால் பாகுபாட்டுப் பெயர்கள் முன்சேர்த்து வழங்கப்படுகின்றன.

**எண் பாகுபாடு**

- இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்று வருகின்றன.

இரண்டு மனிதர்கள்

- அஃறிணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.

பத்துத் தேங்காய்

- இவற்றைப் பத்துத் தேங்காய்கள் என்று எழுதுவதில்லை.
- இக்காலத் தமிழில் அஃறிணைப் பன்மைக்கெனத் தனி வினைமுற்றுகள் இல்லை. ஆனால், ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயிலேயே வெளிப்படுகிறது.

ஒரு மரம் வீழ்ந்தது

பத்து மரம் வீழ்ந்தது

- தற்காலத் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் காணப்படுகிற ஒருமை - பன்மை பற்றிய குழப்பங்களுள் ஒன்று 'ஒவ்வொரு என்னும் சொல்லைப் பற்றியதாகும்.
- ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
- போன்ற தொடர்களைப் பேசவும் எழுதவும். காண்கிறோம்.

- ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.
- ஒவ்வொரு பள்ளியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
- என்றே பேசவும் எழுதவும் வேண்டும். (ஒவ்வொரு -ஒருமை)

**இடப்பாகுபாடு**

- இடம் தன்மை, முன்னிலை. படர்க்கை என மூவகைப்படும். பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும். பேசுபவன், முன்னிருந்து கேட்பவன், பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.
- தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டே தவிர ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை. சான்றாக, நான் புத்தகம் கொடுத்தேன் என்னும் தொடரில் பேசியவர் ஒருவர் என்று கூற முடியுமே ஒழிய ஆணா பெண்ணா என்று கூற முடியாது. முன்னிலையிலும் இவ்வாறே பால்பாகுபாட்டை அறிய முடியாது
- தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இருவகை உண்டு
- பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.
- நாம் முயற்சி செய்வோம் (உளப்பாட்டுத் தன்மைப் பன்மை)
- இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.
- பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும். நாங்கள் முயற்சி செய்வோம்(உளப்படுத்தாத் தன்மைப் பன்மை)
- நாம் தமிழ்மொழியைப் பல்வேறு நிலையில் பல்வேறு நோக்கில் பயன்படுத்துகிறோம். பழையனவற்றைத் தவிர்ப்பதற்கும் புதியனவற்றை ஏற்பதற்கும் நாம் தயங்கியதே இல்லை. கால ஓட்டத்தில் இலக்கணங்களும் இலக்கணக் கூறுகளும் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்கின்றன.
- ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே. மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம்.- **தமிழ் நடைக் கையேடு**

## சொல்

## வேர்ச்சொல் அறிதல்-வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று,

# வினையெச்சம், வினையாலணையும் பெயர்,பெயரெச்சம் சொல் வகை அறிதல்

## 10ம் வகுப்பு

### வினைமுற்று

**அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | சொன்ன அம்மா | சொல்லிச் சென்றார் | அம்மா சொல்லாதே! | கதையைச் சொன்னார் |
| தா | அரசர் தந்தார் | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | அரசரால் தரப்பட்டது |
| பார் | துளிர் பார்த்தாள் | பார்த்த துளிர் | பார்த்துச் சிரித்தாள் | துளிரே பார்! | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | வந்து நின்றது | குழந்தையே வா! | குழந்தையோடு வந்தான் |

## 9ம் வகுப்பு இயல் 1

**அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் **திகழ்கின்றது**. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் **கலந்து கொள்வாள்**. (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் **பேசப்படுகின்றன**. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா **சென்றார்கள்**. (செல்)
5. தவறுகளைத் **திருத்தினான்**. (திருத்து)

## 9ம் வகுப்பு இயல் 2

### துணைவினைகள்

**வினைவகைகள்**

- வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்தொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படை பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

**தனிவினையும் கூட்டுவினையும்**

- வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டுவினை என இருவகைப்படுத்தலாம்.

**தனிவினை**

படி படியுங்கள் படிக்கிறார்கள்.

- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் படி என்னும் வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. படி என்னும் வினையடி , பகாப்பதம் ஆகும். அதை மேலும்

பொருள் தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு, தனிவினையடிகளை அல்லது தனிவினையடிகளை கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

**கூட்டுவினை**

ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்.

- மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி, முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினை என்பர்.

கூட்டுவினைகள் பொதுவாக மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.

**1) பெயர் + வினை = வினை**

தந்தி + அடி = தந்தியடி

ஆணை + இடு = ஆணையிடு

கேள்வி + படு = கேள்விப்படு

**2) வினை + வினை = வினை**

கண்டு + பிடி = கண்டுபிடி

சுட்டி + காட்டு = சுட்டிக்காட்டு

சொல்லி + கொடு = சொல்லிக்கொடு

**3) இடை + வினை = வினை**

முன் + ஏறு = முன்னேறு

பின் + பற்று = பின்பற்று

கீழ் + இறங்கு = கீழிறங்கு

**முதல் வினையும் துணை வினையும்**

நான் படம் பார்த்தேன்.

கண்ணன் போவதைப் பார்த்தேன்.

- இந்தச் சொற்றொடர்களில், பார் என்னும் வினை, கண்களால் பார்த்தல் என்னும் பொருளைத் தருகிறது. இது பார் என்னும் வினையின் அடிப்படைப் பொருள் அல்லது சொற்பொருள்(LEXICAL MEANING) எனலாம்.

ஓடப் பார்த்தேன்.

எழுதிப் பார்த்தாள்.

- இந்தச் சொற்றொடர்களில் ஓடப்பார், எழுதிப்பார் என்பன கூட்டுவினைகள் ஆகும். இவற்றில் இரண்டு உறுப்புகள் உள்ளன. ஓட, எழுதி என்பன முதல் உறுப்புகள். இவை அந்தந்த வினைகளின் அடிப்படைப் பொருளைத் தருகின்றன. பார் என்பது இரண்டாவது உறுப்பு. இது இவ்வினையின் அடிப்படைப் பொருளான பார்த்தல் என்னும் பொருளைத் தராமல் தனது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருகிறது.

ஓடப் பார்த்தேன் - இதில் பார் என்பது முயன்றேன் என்னும் முயற்சிப் பொருளைத் தருகிறது.

எழுதிப் பார்த்தாள் - இதில் பார் என்பது சோதித்து அறிதல் என்னும் பொருளைத் தருகிறது.

- ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை, முதல் வினை (MAIN VERB) எனப்படும். ஒரு கூட்டு வினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டுவிட்டு முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும்.
- கூட்டுவினையின் முதல் வினை செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். துணைவினை, வினையடி வடிவில் இருக்கும். துணைவினையே திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ 40 துணைவினைகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை முதல்வினையாகவும் செயல்படுகின்றன.
- பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை இருவகை வினைகளாகவும் செயல்படுகின்றன.

**துணைவினைகளின் பண்புகள்**

1. துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
2. இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
3. பேச்சு மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன.

தமிழ் மற்றும் **ஜப்பானிய மொழிகளில்** துணைவினைகள் முதல் வினைகளுக்குப் பின்பே இடம்பெறும். (எ.கா.) கீழே விழுப் பார்த்தான். இத்தொடரில் விழு (விழு) என்பது முதல்வினை; பார்த்தான் என்பது துணைவினை.

தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது. அதாவது, தமிழில் துணைவினையாக வரும் வேர்ச்சொல் சில தொடர்களில் முதல்வினையாகவும் வரும்.

## 9ம் வகுப்பு இயல் - 9

**வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக.**

பூங்கொடி நேற்று பள்ளிக்குச் **சென்றாள்** (செல்).
தன் தோழிகளைக் கண்டு(காண்)மகிழ்ச்சியுடன் **உரையாடினாள்** (உரை).
வங்கிக்குப் **போய்** (போ) தான் கூடுதலாகச் **செலுத்திய** (செலுத்து) தொகையை திரும்பப் **பெற்றுக்** பெறு **கொண்டு**(கொள்) வந்தாள்.
வரும் வழியில் வீட்டுக்கு **வேண்டிய** (வேண்டு) பொருள்களை வாங்கி, அங்கு நின்ற பே ருந்தில்
**ஏறி** (ஏறு) வீடு **திரும்பினாள்**(திரும்பு).

## 7ம் வகுப்பு பருவம் - 2

## இயல் - 3

### தொழிற்பெயர்

- உழவர் செய்யும் தொழில் உழுதல். தையல்காரர் செய்யும் தொழில் தைத்தல். இத்தொடர்களில் உழுதல், தைத்தல் என்பன செயல்களின் பெயர்களாக அமைகின்றன. இவ்வாறு ஒரு செயலின் அல்லது வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.

  (எ.கா.) படித்தல், ஆடல், நடிப்பு, எழுதுதல் , பொறுத்தல்

- தொழிற்பெயரை விகுதி பெற்ற தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர் என வகைப்படுத்துவர்.

### விகுதி பெற்ற தொழிற்பெயர்

நடத்தல், உண்ணல், வாழ்வு, வாழ்க்கை ஆகிய பெயர்களைக் கவனியுங்கள். இவற்றில் நட, உண், வாழ் ஆகிய வினைப்பகுதிகள் தல், அல், வு, கை ஆகிய விகுதிகளோடு சேர்ந்து தொழிற்பெயர்களாக அமைகின்றன.

இவ்வாறு வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, மை போன்றவை தொழிற்பெயர் விகுதிகளாக வரும்.

(எ.கா.)

| | | | |
|---|---|---|---|
| தருதல் | - தல் | கூறல் | - அல் |
| ஆட்டம் | - அம் | விலை | - ஐ |
| வருகை | - கை | பார்வை | - வை |
| போக்கு | - கு | நட்பு | - பு |
| மறைவு | - வு | மறதி | - தி |
| உணர்ச்சி | - சி | கல்வி | - வி |

செய்யாமை - மை

### முதனிலைத் தொழிற்பெயர்

வானில் இடி இடித்தது

சோறு கொதி வந்தது

இடி, கொதி என்னும் சொற்கள் இடித்தல், கொதித்தல் என்னும் சொற்களின் பகுதிகளாகும். இவ்வாறு ஏவல் ஒருமை வினையாக அமையும் வினைச்சொற்களின் பகுதியை முதனிலை என்பர். முதனிலை எவ்வகை மாற்றமும் பெறாமல் தொழிற்பெயராக அமைவது முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.)

செல்லமாக ஓர் அடி அடித்தான்

அறிஞர் அண்ணா தம் பேச்சால் புகழ் பெற்றார்

இவற்றில் அடிக்கோடிட்ட சொற்கள் விகுதி பெறாமல் தம்பொருளை உணர்த்துகின்றன.

### முதனிலை திரிந்த தொழிற்பெயர்

தமிழ் படிக்கும் பேறு பெற்றேன்.

உணவின் சூடு குறையவில்லை .

இத்தொடர்களில் பேறு, சூடு ஆகிய சொற்களைக் கவனியுங்கள். பெறு, சுடு என்னும் பகுதிகளின் முதலெழுத்து நீண்டு, பேறு, சூடு எனத் திரிந்து தொழிற்பெயர்களாக மாறி உள்ளன. இவ்வாறு முதனிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) விடு - வீடு, மின் - மீன், கொள் - கோள், உடன்படு - உடன்பாடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற் பெயர் எது?

அ) எழுது ஆ) பாடு

இ) படித்தல் ஈ) நடி

2. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற் பெயர் எது?

அ) ஊறு ஆ) நடு

இ) விழு ஈ) எழுதல்

பொருத்துக.

வினா :

1. ஒட்டகம் - முதனிலைத் தொழிற்பெயர்

2. பிடி - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

3. சூடு - விகுதி பெற்ற தொழிற்பெயர்

விடை :

1. ஒட்டகம் - விகுதி பெற்ற தொழிற்பெயர்

2. பிடி - முதனிலைத் தொழிற்பெயர்

3. சூடு - முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

## 8ம் வகுப்பு

### வினைமுற்று

- படித்தான், ஆடுகின்றாள், பறந்தது, சென்ற, கண்டு ஆகியவை செயலை அடிப்படையாகக் கொண்ட சொற்கள் ஆகும். செயலை வினை என்றும் குறிப்பர். இவ்வாறு ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

### வினைமுற்று

- மலர்விழி எழுதினான். கண்ணன் பாடுகிறான். மாடு மேயும்.
- இத்தொடர்களில் எழுதினாள், பாடுகிறான், மேயும் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர். வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.
- வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

- ஒரு செயல் தடைபெறுவதற்குச் செய்யவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) மாணவி கட்டுரை எழுதினாள்.

செய்பவர் - மாணவி காலம் - இறந்தகாலம்

கருவி - தாளும் எழுதுகோலும். செய்பொருள் - கட்டுரை

நிலம் – பள்ளி செயல் - எழுதுதல்

### குறிப்பு வினைமுற்று

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

பொருள் – பொன்னன்

இடம் - தென்னாட்டார்

காலம் - ஆதிரையான்

சினை - கண்ணன்

பண்பு (குணம்) - கரியன்

தொழில் - எழுத்தன்

தெரிநிலை,குறிப்பு வினைமுற்றுகள் அன்றி ஏவல் வினைமுற்று, வியங்கோள்

வினைமுற்று எனப் பிறவகை வினைமுற்றுகளும் தமிழில் உண்டு.

**ஏவல் வினைமுற்று**

பாடம் படி. கடைக்குப் போ.

- இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

(எ.கா.) எழுது - ஒருமை

எழுதுமின் - பன்மை

பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

**வியங்கோள் வினைமுற்று**

- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.

(எ.கா.) வாழ்க, ஒழிக, வாழியர், வாரல்

**ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள்**

**ஏவல் வினைமுற்று**

- முன்னிலையில் வரும்.
- ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.
- கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்.
- விகுதி பெற்றும் பெறாமலும் வரும்.

**வியங்கோள் வினைமுற்று**

- இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.
- ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.
- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்.
- விகுதி பெற்றே வரும்.

**தெரிந்து தெளிவோம்**

1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது.
2. இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. இத்தொடரிலுள்ள வினைமுற்று --------**

அ) மாடு ஆ) வயல்

இ) புல் ஈ) மேய்ந்தது

**2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று**

அ) படித்தான் ஆ) நடக்கிறான்

இ) உண்பான் ஈ) ஓடாது

**3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்**

அ) செல்க ஆ) ஓடு

இ) வாழ்க ஈ) வாழிய

## 8ம் வகுப்பு இயல் - 3

### எச்சம்

- படித்தான், படித்த, படித்து - ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.
- படித்தான் என்னும் சொல்லில் பொருள் முற்றுப் பெறுகிறது. எனவே, இது வினைமுற்று ஆகும்.
- படித்த, படித்து ஆகிய சொற்களில் பொருள் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். இது பெயரெச்சம், வினையெச்சம் என்று இருவகைப்படும்.

### பெயரெச்சம்

- படித்த என்னும் சொல் மாணவன், மாணவி, பன்ணி, புத்தகம், ஆண்டு போன்ற பெயர்ச்சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.) படித்த மாணவன்.

படித்த பள்ளி.

- இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.

(எ.கா) பாடிய பாடல் - இறந்தகாலப் பெயரெச்சம்

பாடுகின்ற பாடல் - நிகழ்காலப் பெயரெச்சம்

பாடும் பாடல் - எதிர்காலப் பெயரெச்சம்

### தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சங்கள்

- எழுதிய கடிதம் - இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.
- சிறிய கடிதம் - இத்தொடரில் உள்ள சிறிய என்னும் சொல்லின் செயலையோ, காலத்தையோ அறிய முடியவில்லை. பண்பினை மட்டும் குறிப்பாக அறியமுடிகிறது. இவ்வாறு செயலையோ, காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக்

காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

**வினையெச்சம்**

- படித்து என்னும் சொல் முடித்தான், வியந்தாள், மகிழ்ந்தார் போன்ற வினைச் சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.) படித்து முடித்தான்.

படித்து வியந்தான்.

- இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

**தெரிநிலை, குறிப்பு வினையெச்சங்கள்**

- எழுதி வந்தான் - இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.
- மெல்ல வந்தான் - இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

**முற்றெச்சம்**

வள்ளி படித்தனள்.

- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.
- வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ------ எனப்படும்.**

அ) முற்று ஆ) எச்சம்

இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

**2. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம்**

அ) படித்து ஆ) எழுதி

இ) வந்து ஈ) பார்த்த

**3. குறிப்பு வினையெச்சம் ........................ வெளிப்படையாகக் காட்டாது.**

அ) காலத்தை ஆ) வினையை

இ) பண்பினை ஈ) பெயரை

**பொருத்துக.**

1. நடந்து – அ) முற்றெச்சம்
2. பேசிய – ஆ) குறிப்புப் பெயரெச்சம்
3. எடுத்தனன் உண்டான் – இ) பெயரெச்சம்
4. பெரிய – ஈ) வினையெச்சம்முற்றெச்சம்

**விடை**

**1. நடந்து – ஈ) வினையெச்சம்முற்றெச்சம்**

**2. பேசிய – இ) பெயரெச்சம்**

**3. எடுத்தனன் உண்டான் – அ) முற்றெச்சம்**

**4. பெரிய – ஆ) குறிப்புப் பெயரெச்சம்**

**கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.**

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து.

**பெயரெச்சம்** : **நல்ல, எறிந்த, வீழ்ந்த, மாட்டிய, அழைத்த.**

**வினையெச்சம்** : **படுத்து, பாய்ந்து, கடந்து, பிடித்து, பார்த்து.**

## 8th newbook - இயல் 2

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாடு வயலில் புல்லைமேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று ______.

அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது

2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ______.

அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ______.

அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்கஈ) வாழிய

| | நட | உண் | உறங்கு |
|---|---|---|---|
| ஆண்பால் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்கினான் |
| பெண்பால் | நடக்கிறாள் | உண்கிறாள் | உறங்கினாள் |
| பலர் பால் | நடக்கிறார் | உண்டார் | உறங்கினார் |
| ஒன்றன் பால் | நடந்தது | உண்டது | உறங்கியது |

| | | | |
|---|---|---|---|
| பலவின் பால் | நடந்தன | உண்டன | உறங்கின |
| தன்மை | நடந்தேன் | உண்கிறேன் | உறங்கினேன் |
| முன்னிலை | நடந்தீர் | உண்டீர் | உறங்குவீர் |
| படர்க்கை | அவன் நடந்தான் | அவன்உண்பான் | அவள் உறங்கினாள் |
| இறந்தகாலம் | நடந்தான் | உண்டான் | உறங்கினான் |
| நிகழ் காலம் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்குகிறான் |
| எதிர் காலம் | நடப்பான் | உண்பான் | உறங்குவான் |

1. நடக்கிறது - நட
2. போனான் - போ
3. சென்றனர் - செல்
4. உறங்கினாள் - உறங்கு
5. வாழிய -வாழ்
6. பேசினாள் -. பேசு
7. வருக -. வா
8. தருகின்றனர் - தா
9. பயின்றாள் - பயில்
10. கேட்டார் – கேள்

1. ‘வந்த’ – என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களைஎழுதுக.

(எ.கா.) வந்தமாணவன். வந்தமாடு.

2. ‘வரைந்து’ – என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களைஎழுதுக.

(எ.கா.) வரைந்து வந்தான். வரைந்து முடித்தான்.

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ______ எனப்படும்.

அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

2. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ______.

அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

3. குறிப்பு வினையெச்சம் ______ வெளிப்படையாகக் காட்டாது.

அ) காலத்தை ஆ) வினையைஇ) பண்பினைஈ) பெயரை

பொருத்துக.

நடந்து - முற்றெச்சம்

பேசிய - குறிப்புப் பெயரெச்சம்

எடுத்தனன் உண்டான் - பெயரெச்சம்

பெரிய – வினையெச்சம்

விடை : 4312

நடந்து – வினையெச்சம்

பேசிய - பெயரெச்சம்

எடுத்தனன் உண்டான் - முற்றெச்சம்

பெரிய - குறிப்புப் பெயரெச்சம்

கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து.

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| நல்ல | படுத்து |
| எறிந்த | பாய்ந்து |
| வீழ்ந்த | கடந்து |
| மாட்டிய | பிடித்து |
| அழைத்த | பார்த்து. |

பொருத்துக.

பெயரெச்சத்தொடர் - கார்குழலி படித்தாள்.

வினையெச்சத்தொடர் - புலவரேவருக.

வினைமுற்றுத்தொடர் - பாடி முடித்தான்.

எழுவாய்த்தொடர் - எழுதிய பாடல்.

விளித்தொடர் - வென்றான் சோழன்.

விடை ::43512

பெயரெச்சத்தொடர் -- எழுதிய பாடல்

வினையெச்சத்தொடர் - - பாடி முடித்தான்.

வினைமுற்றுத்தொடர் - வென்றான் சோழன்.

எழுவாய்த்தொடர் - கார்குழலி படித்தாள்.

விளித்தொடர் - புலவரேவருக.

வேர்ச்சொல்லை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.

அ) தா (உடன்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)

தந்தேன் - உடன்பாட்டு வினைத்தொடர்

தருவித்தேன் - பிறவினைத் தொடர்

ஆ) கேள் (வினாத்தொடர் ஆக்குக)

கேட்டாயா? - வினாத் தொடர்

இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர் ஆக்குக)

நீ அதைக் கொடு - செய்தித் தொடர்

நீ கொடு - கட்டளைத் தொடர்

ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)

பார்த்தான் - செய்வினைத் தொடர் பார்க்கப்பட்டான் - செயப்பாட்டு வினைத் தொடர்

பார்க்கச் செய்தான் - பிறவினைத் தொடர்

அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் திகழ்கின்றது. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் கலந்து கொள்வாள். (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா சென்றார்கள். (செல்)
5. தவறுகளைத் திருத்தினான். (திருத்து)

வினைத்தொகையை பொருத்தி எழுதுக. Pageno.229

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரை விளக்கு, மூடுபனி,

வளர்பிறை, தளிர் பூ)

விடை :

வளர்பிறை நிலவுடன் விரிவானம் அழகாகக் காட்சியளிக்கிறது.

தளிர்பூங்கொடிகளும், விளைநிலங்களும், மனதைக் கொள்ளையடிக்கின்றன.

நீள்வீதிகள் அனைத்தும் மூடுபனியில் மூழ்கிக் கிடக்கின்றன.

மெல்ல வீசும் குளிர்காற்றும் வளர்தமிழ் புகழ்பாடுகிறது.

தொலைவில் கலங்கரை விளக்கின் ஒளி உயர்மதில் சுவரை ஒளிரச் செய்கிறது.

பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

விடை :

அ) மா பெரும் பொதுக்கூட்டம் [கடி / மா]

ஆ) கடி விடுதும் (உறு/கடி]

இ) வாள் நுதல் [வாள்/ தவ]

ஈ) சால சிறந்தது [சால/மழ]

உ) கடி மனை [கடி/தட]

தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| தா | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| காண் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| பெறு | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| நீந்து | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| பாடு | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| கொடு | கொடுத்தேன் | கொடுக்கிறேன் | கொடுபேன் |

வினைபகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக. Pageno.251

பூங்கொடி நேற்றுப் பள்ளிக்குச் சென்று தோழிகளைக் கண்டு (காண்), மகிழ்ச்சியுடன் உரையற்றினாள் (உரை); பின்னர் வங்கிக்குப் போய் (போ) தான் கூடுதலாகச் செலுத்திய (செலுத்து) தொகையைத் திரும்ப பெற்று (பெறு) கொண்டு (கொள்) வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு வேண்டிய (வேண்டு) பொருள்களை வாங்கி (வா). அங்கு நின்ற (நில்) பேருந்தில் ஏறி (ஏறு) வீடு திரும்பினாள் (திரும்பு) .

## 7ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் - 2)

## இயல்-1

பயிற்சி :

1. பின்வரும் தொடரிலுள்ள வினைமுற்றை வட்டமிடுக.

யாழினி கடுமையாக உழைத்தாள்.

யாழினி கடுமையாக உழைத்தாள்.

2. பின்வரும் தொடரிலுள்ள பெயரெச்சத்தை வட்டமிடுக.

நன்கு படித்த மாணவன் முதல் மதிப்பெண் பெற்றான்.

நன்கு படித்த மாணவன் முதல் மதிப்பெண் பெற்றான்

3. பின்வரும் தொடரிலுள்ள வினையெச்சத்தை வட்டமிடுக.

குழந்தை ஆடிப் பாடி மகிழ்ந்தது.

குழந்தை ஆடிப் பாடி மகிழ்ந்தது.

4. அட்டவணையை நிரப்புக.

பின்வரும் பத்தியிலுள்ள வினைமுற்று, பெயரெச்ச, வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.

காலையில் கண் விழித்த செல்வி, படுக்கையை விட்டு எழுந்தாள்; பல் துலக்கி முகம் கழுவினாள்; வாசல் தெளித்துக் கோலமிட்டாள். அவளின் தாய் அவளின் செயலைக் கண்டு பாராட்டினாள். மனமகிழ்ந்த செல்வி மகிழ்ச்சியில் துள்ளி ஓடினாள்; ஆடிப்பாடி மகிழ்ந்தாள். அன்றைய பாடங்களைப் படித்து முடித்தாள்; பள்ளிக்கு விரைந்து சென்றாள்.

எழுந்தாள், கழுவினாள், கோலமிட்டாள், பாராட்டினாள், ஓடினாள், மகிழ்ந்தாள், முடித்தாள், சென்றாள்

ஆடி, பாடி

படித்து

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் (பருவம் - 2)

## இயல்-1

**தொகாநிலைத் தொடர்கள் வரும்படி கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. விளித்தொடர் <u>கதிரவா</u> வா
2. பெயரெச்சத்தொடர் <u>வந்த</u> கண்ணன்.
3. வினைமுற்றுத்தொடர் <u>பார்த்தேன்</u> கண்ணனை
4. வினையெச்சத்தொடர் கண்ணன் <u>சென்று வந்தான்</u> வந்தான்.
5. வேற்றுமைத்தொடர் கண்ணன் <u>வீட்டைக்</u> கட்டினான்.

**பொருத்துக.**

1. வினைமுற்றுத்தொடர் - உடைந்த நாற்காலி
2. விளித்தொடர் - வந்து நின்றான்.
3. பெயரெச்சத்தொடர் - கண்ணா வா!
4. வினையெச்சத்தொடர் - வந்தான் இராமன்.

1. வினைமுற்றுத்தொடர் - வந்தான் இராமன்.
2. விளித்தொடர் - கண்ணா வா!
3. பெயரெச்சத்தொடர் - உடைந்த நாற்காலி
4. வினையெச்சத்தொடர் - வந்து நின்றான்.

Page no 19

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மற்றுப்பிற என்னும் தொடரில் 'மற்று' என்பது

அ) உரிச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல்

2. சாலப் பசித்தது என்பது தொடர்.

அ) இடைச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

3. கூடிப் பேசினர் என்னும் தொடர் ஆகும்.

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர் இ) வினையெச்சத்தொடர்

Page no 60

உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக்கொண்டு முடிவது.

அ) நான்காம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை

இ) முதல் வேற்றுமை ஈ) ஆறாம் வேற்றுமை

## 9ம் வகுப்பு பழைய புத்தகம்

வேர்ச்சொற்களை வினைமுற்றாக்குக

1. நான் நாளை சந்தைக்குப் போவேன் (போ )

2. மாணவர்கள் பள்ளியில் கல்வி கற்றனர் (கல் )

3. யானை சினங்கொண்டு பிளிறியது (பிளிறு )

4. தேசிங்குராசா பாராசாரிக் குதிரையை அடக்கினார் (அடக்கு)

5. இந்தியஅணி நேற்றைய கால்பந்துப்போட்டியில் வெற்றி பெற்றது (பெறு)

பெயரெச்சத்தை வினைமுற்றாக மாற்றி எழுதுக:

(எ,கா) வனப்பு மிக்க சோலை

சோலை வனப்பு மிக்கது

1. துள்ளி ஓடிய புள்ளிமான்

புள்ளிமான் துள்ளி ஓடியது

2. மிகவும் இனித்த பழம்

பழம் மிகவும் இனித்தது

3. பாடம் படித்த வைகறைச்செல்வி

வைகறைச்செல்வி பாடம் படித்தாள்

4. நீதி தவறாத மன்னன்

மன்னன் நீதி தவறான்

5. நேற்று பெய்த மழை

நேற்று மழை பெய்தது

வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுக.

(எ,கா) நேற்று வந்த மதியழகன்

நேற்று மதியழகன் வந்தான்

1. எழிலன் படம் வரைந்தான்

   எழிலன் வரைந்த படம்

2. அப்பா சினம் கொண்டார்

   அப்பா கொண்ட சினம்

3. எழில் பாம்பைக் கண்டாள்

   எழில் கண்ட பாம்பு

4. குதிரை விரைவாக ஓடியது

   விரைவாக ஓடிய குதிரை

5. குரங்குகள் தாவிக் குதித்தன

   தாவிக் குதித்த குரங்குகள்

   11ம் வகுப்பு

3. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.

அ) வா ஆ) பேசு இ) தா ஈ) ஓடு உ) பாடு

எ.கா: வா - வேர்ச்சொல்

அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)

அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)

கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)

என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

விடை

ஆ) பேசு - வேர்ச்சொல்

❖ அண்ணா மேடையில் நன்றாகப் பேசினார். (வினைமுற்று)

❖ அண்ணா பேசிய பேச்சு அழகாக இருந்தது. (பெயரெச்சம்)

❖ அண்ணா பேசி முடித்ததும் கரவொலி எழும்பியது. (வினையெச்சம்)

❖ கடமை கண்ணியம் கட்டுப்பாடு வேண்டும் என்று பேசியவர் அண்ணா. (வினையாலணையும் பெயர்)

இ) தா - வேர்ச்சொல்

❖ தாத்தா எனக்குத் திருக்குறள் தந்தார். (வினைமுற்று)

❖ தாத்தா தந்த திருக்குறள் உயர்வானது. (பெயரெச்சம்)

❖ தாத்தா எனக்குத் திருக்குறள் தந்து பாராட்டினார். (வினையெச்சம்)

❖ எனக்கு திருக்குறளைப் பரிசாகத் தந்தவர் தாத்தா ஆவார். (வினையாலணையும் பெயர்).

ஈ) ஓடு - வேர்ச்சொல்

❖ உசேன் போல்ட் வேகமாக ஓடினார். (வினைமுற்று)

❖ சிறுத்தையென ஓடிய உசேன் போல்ட் முதலிடம் பெற்றார். (பெயரெச்சம்)

❖ நான்கு முறை ஒலிம்பிக்கில் தொடர்ந்து ஓடி உலகப் புகழ் பெற்றார். (வினையெச்சம்)

❖ 100 மீட்டர் ஓட்டத்தில் வெற்றியை மட்டுமே நோக்காகக் கொண்டு ஓடியவர் உசேன் போல்ட். (வினையாலணையும் பெயர்)

உ) பாடு – வேர்ச்சொல்

❖ இளையராஜா நன்றாகப் பாடினார். (வினைமுற்று)

❖ இளையராஜா பல்லவி பாடிய ராகம் நன்றாக இருந்தது. (பெயரெச்சம்)

❖ இளையராஜா சரணம் பாடிக் காட்டினார். (வினையெச்சம்)

❖ சிம்பொனி இசையுடன் பாடியவர் இளையராஜா ஆவார். (வினையாலணையும் பெயர்).

## அயற்சொல் – தமிழ்ச்சொல்

7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

இயல் 1,2,3

**பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்**

**பிறமொழிச்சொல் தமிழ்ச்சொல்**

- அனுமதி - இசைவு
- உபயம் - திருப்பணியாளர் கொடை
- ஆதவன் - ஞாயிறு
- உஷார் - விழிப்பு
- ஆரம்பம்- தொடக்கம்
- எதார்த்தம்- இயல்பு
- ஆஸ்தி - சொத்து
- ஐதிகம் -உலகவழக்கு
- இம்சை -துன்பம்
- காகிதம் -தாள்
- இருதயம் -நெஞ்சகம்
- கிரீடம் -மணிமுடி
- ஈசன் -இறைவன்
- உபசரித்தல் -விருந்தோம்பல்
- குபேரன் -பெருஞ்செல்வன்

# 11ம் வகுப்பு

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

1. வாடகை - குடிக்கூலி
2. நிச்சயம் - உறுதி
3. சம்பளம் - ஊதியம்
4. தேசம் - நாடு
5. பத்திரிகை - நாளிதழ்
6. வீசா - நுழைவு இசைவு
7. ராச்சியம் - நாடு
8. சொந்தம் - உறவு
9. மாதம் - திங்கள்
10. உத்திரவாதம் - உறுதிமொழி
11. ஞாபகம் - நினைவு
12. வித்தியாசம் - வேறுபாடு
13. பாஸ்போர்ட் - கடவுச்சீட்டு
14. கோரிக்கை - வேண்டுகோள்
15. சரித்திரம் - வரலாறு
16. சமீபம் - அருகில்
17. போலிஸ் - காவல்
18. சந்தோஷம் - மகிழ்ச்சி
19. வருடம் - ஆண்டு
20. உற்சாகம் - ஆனந்தம்
21. கம்பெனி - குழுமம்/தொழிலகம்
22. யுகம் - காலம்
23. முக்கியத்துவம் - முன்னுரிமை
24. தருணம் - வேளை
25. அங்கத்தினர் – உறுப்பினர்
26. அதிகாரி – அலுவலர்
27. அதிபர் – தலைவர்
28. அந்நியர் – அயலார்
29. அபிஷேகம் – நீராட்டு
30. அபூர்வம்– புதுமை
31. அலங்காரம்–ஒப்பனை

1. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.

அ) சங்கீதம்- இசை

ஆ) வித்தியா - கல்வி

இ) மகாஜனம்- மக்கள்

ஈ) சாகரம் - கடல்

## 10ம் வகுப்பு பழைய புத்தகம் இயல் - 9

1.அனுமதி – இசைவு

2.ஆபத்து – இடர்

3.ஆராதனை – வழிபாடு

4.ஆசிர்வாதம் – வாழ்த்து

5.இலஞ்சம்– கையூட்டு

6.லாபம் – வருவாய்

7.உத்தரவு – ஆணை

8.உத்தியோகம் – பணி

9.உபயோகம் – பயன்

10. கிராமம் –சிற்றூர்

11.குமாரன் – மகன்

12.சாவி –திறவுகோல்

13.நஷ்டம் – இழப்பு

14.நாஸ்டா – சிற்றுண்டி

15.பாக்கி –நிலுவை

16.கஜானா – கருவூலம்

17.விஞ்ஞானம் – அறிவியல்

18.ஜனங்கள் – மக்கள்

19.நிபுணர் – வல்லுனர்

20.ஹாஸ்பிடல் – மருத்துவமனை

21.டீ ஸ்டால் – தேனீர் கடை

22.பஸ் ஸ்டாண்ட் – பேருந்து நிலையம்

23.போஸ்ட் ஆபீஸ் – அஞ்சலகம்

## 6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

## இயல் - 1

- டி.வி - தொலைக்காட்சி
- டெலிபோன் - தொலைபேசி
- ரேடியோ - வானொலி
- ஃபேன் - மின்விசிறி
- டிபன் - சிற்றுண்டி
- டீ - தேநீர்
- கரண்ட்- மின்சாரம்
- சேர் - நாற்காலி
- லைட் - விளக்கு
- தம்ளர் - குவளை
- சைக்கிள் - மிதிவண்டி
- பிளாட்பாரம் - நடைமேடை
- ஆபீஸ் - அலுவலகம்
- சினிமா - திரைப்படம்
- டைப்ரைட்டர்- தட்டச்சுப்பொறி
- ரோடு - சாலை
- பிளைட்- வானூர்தி
- பேங்க் - வங்கி
- தியேட்டர் - திரையரங்கு
- ஆஸ்பத்திரி - மருத்துவமனை
- கம்ப்யூட்டர் - கணினி
- காலேஜ் - கல்லூரி
- யுனிவர்சிட்டி - பல்கலைக்கழகம்
- டெலஸ்கோப் - தொலைநோக்கி
- தெர்மாமீட்டர்- வெப்பமானி
- இண்டர்நெட்- இணையம்
- ஸ்கூல் -பள்ளி
- சயின்ஸ்- அறிவியல்
- மைக்ராஸ்கோப்- நுண்ணோக்கி
- நம்பர் – எண்
- சர்வகலாசாலை – பல்கலைக்கழகம்
- ஸ்வீட் ஸ்டால் – இனிப்பகம்
- டியூப்லைட் – குழல் விளக்கு
- கார் – மகிழுந்து

- டீ – தேநீர்
- காபி – குளம்பி நீர்
- சைக்கிள் – ஈருருளி
- பிளாஸ்டிக் - நெகிழி
- மீடியா - ஊடகம்

## 7ம் வகுப்பு பழைய புத்தகம் பக்க எண் 150

- ஆதவன் - ஞாயிறு
- ஆரம்பம் - தொடக்ககம்
- ஆஸ்தி - சொத்து
- இம்சை -துன்பம்
- இருதயம்- நெஞ்சகம்
- ஈசன் - இறைவன்
- உபசரித்தல் - விருந்தோம்பல்
- உபயம் - திருப்பணியாளர் கொடை
- உஷார் - விழிப்பு
- எதார்த்தம் - இயல்பு
- ஐதிகம்- உலக வழக்கு
- காகிதம்- தாள்
- கிரீடம் -மணிமுடி
- குபேரன் - பெருஞ்செல்வம்

## 9ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 1

- சுவிட்ச்- சொடுக்கி
- ஐஸ்வாட்டர் - குளிர்நீர்
- கூல் ட்ரிங்ஸ் - குளிர்சாறுகள்
- கிரைண்டர் - மின்அரைவை
- பிரிஜ் - குளிரூட்டும் பெட்டி
- டீ - தேநீர்
- வாஷிங்மெஷின் - வெளுக்கை இயந்திரம்
- டெலிபோன் – தொலைபேசி

## 9ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 2

- அங்கத்தினர் - உறவினர்
- அர்த்தம் -பொருள்

- அலங்காரம்- ஒப்பனை
- ஆரம்பம்-- தொடக்கம்
- விஞ்ஞானம் அறிவியல்
- தீபம் -விளக்கு
- கும்பாபிஷேகம்- குடமுழுக்கு
- சாவி -திறவுகோல்
- சரித்திரம் -வரலாறு
- சபதம் -உறுதி
- சாதம்- சோறு
- பௌத்திரி -பெயர்த்தி

## 9ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

- சமஸ்தானம் –அரசு
- முக்கியஸ்தர்- முதன்மையானவர்
- சினிமா தியேட்டர்- திரையரங்கம்
- பிளசர் கார்- மகிழுந்து
- ஏரோப்பிளேன் –வானூர்தி
- இலாகா –துறை
- அப்பாயிண்ட் -பணி அமர்த்தல்
- பிரதானம் –முதன்மை
- விஞ்ஞானம்- அறிவியல்
- பஸ் –பேருந்து
- ரயில்- தொடர்வண்டி
- கஜானா –கருவூலம்
- உத்தியோகஸ்தர்- அலுவலர்
- டிபார்ட்மெண்டல் ஸ்டோர்- பல பொருள் அங்காடி

## 9ம் வகுப்பு புதிய புத்தகம் இயல் - 1

- சாப்ட்வேர் மென்பொருள்
- ப்ரௌசர் உலவி
- க்ராப் செதுக்கி
- கர்சர் ஏவி அல்லது சுட்டி
- சைபர்ஸ் இணையவெளி
- சர்வர் வையக விரிவு வலை வழங்கி
- போல்டர் உறை

- லேப்டாப் மடிக்கணினி
- ப்ளாக்போர்டு கரும்பலகை

## 10ம் வகுப்புபுதிய புத்தகம்

### பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச்சொல்

1.ஷேஸ்திரங்கள்-கோவில்

2.விக்கிரகம்-சிலை

3.மார்க்கம்-வழி

4.யாத்திரை-பயணம்

5.ஷர்ட்-சட்டை

6.வின்-வெற்றி

7.காலேஜ்-கல்லூரி

8.ஒல்டு ஸ்டுடண்ட்-பழைய மாணவன்

9.வாட் ஹேப்பண்ட்-என்ன ஆயிற்று

10.டிராபிக் ஜாம்-போக்குவரத்து நெரிசல்

11.லேட்-தாமதம்

12.லாஸ்ட் வீக்-சென்ற வாரம்

13.டிபன்-சிற்றுண்டி

14.யுனிஃபார்ம்-சீருடை

15.வாஷ்-கழுவுதல்

16.டிவி-தொலைக்காட்சி

17.ஹோம் வெர்க்-வீட்டுப்பாடம்

18.பேன்-மின்விசிறி

19.ஸ்கூல்-பள்ளிக்கூடம்

20.வாட்டர்-தண்ணீர்

21.ஸ்கூல் பேக்-பள்ளி பை

## 12ம் வகுப்பு

- அனயம் - நிறைவானது
- எச்சௌந்தவன் - ஏழை எளியவன்
- கீழத்தார் - புன்செய்யின் ஒரு பகுதி
- கொராமுனுசு- கிராம நிர்வாக அலுவலர்
- கொடவாங்கல் -கொடுக்கல் வாங்கல்
- திருணை -திண்ணை
- தெகஞ்சத- முடிந்ததை

- பிஞ்சை-புன்செய்
  ரோசி -உரசுதல்
- வாந்தக்கமாக- இணக்கமாக
- வெதப்பெட்டி -விதைப்பெட்டி
- வெள்ளங்காட்டி -விடியற்காலை
- வேண்டாற- வேண்டாத
- திருகை - மாவு அரைக்கும் கல்
- குறுக்கம் - சிறிய நிலப்பரப்பு
- கடகம் -ஓலைப்பெட்டி
- வித்தியாரம்பம்- கல்வித்தொடக்கம்
- வித்தியாப்பியாசம்- கல்விப்பயிற்சி
- உபாத்தியாயர் -ஆசிரியர்
- கீழ்வாயிலாக்கம் -பின்ன எண்ணின் கீழ்த்தொகை
- மேல்வாயிலாக்கம்- பின்ன எண்ணின் மேல்தொகை
- குழிமாற்று-பெருக்கல்வாய்பாடு
  சீதாள பத்திரம்- தாழை மடல்
- நவத்வீபம் - வங்காளத்தில் உள்ள ஓர்

## எதிர்ச்சொல்

### 6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

### இயல் - 1

காய் × கனி

இம்மை × மறுமை

அல்லது × நல்லவை

இன்பம் × துன்பம்

கனவு × நனவு

இரவு × பகல்

கருப்பு × வெள்ளை

பள்ளம் × மேடு

மேல் × கீழ்

இனிப்பு × கசப்பு

### 6ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

## இயல் - 1

மாணவன் × மாணவி

உழவன் × உழத்தி

சிறுவன் × சிறுமி

பாட்டன் × பாட்டி

தோழன் × தோழி

அரசன் × அரசி

மகன் × மகள்

தந்தை × தாய்

## 7ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 1

## இயல் - 2

மகளிர் × ஆடவர்

பெண் × ஆண்

## 8ம் வகுப்பு பழைய புத்தகம் பருவம் - 3

## இயல் - 1

எளிது × அரிது

பாராட்டு × இகழ்ச்சி

பகை × நட்பு

பயனுடையார் × பயனிலார்

நகை× அழுகை

பகல் × இரவு

1. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

அ) போக்குதல் ஆ) தள்ளுதல்

இ) அழித்தல் ஈ) சேர்த்தல்

2. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

அ) அரிது ஆ) சிறிது

இ) பெரிது ஈ) வறிது

3. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்

அ) மறைந்த ஆ) நிறைந்த

இ) குறைந்த ஈ) தோன்றிய

4. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல்

அ.அழிவு ஆ.துன்பம்

இ.சுறுசுறுப்பு ஈ.சோகம்

எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

1. அணுகு - தெளிவு
2. ஐயம் - சோர்வு
3. ஊக்கம் - பொய்மை
4. உண்மை - விலகு

விடை :

அணுகு × விலகு

ஐயம் × தெளிவு

ஊக்கம் × சோர்வு

உண்மை × பொய்மை

## 6th term 3

எதிர்ச்சொல் எழுதுக

- உண்மை - பொய்
- நல்ல - கெட்ட
- மேலவர் - கீழோர்

எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

1. எளிது - புரவலர்
2. ஈதல் - அரிது
3. அந்நியர் - ஏற்றல்
4. இரவலர் - உறவினர்

விடை

1. எளிது - அரிது
2. ஈதல் - ஏற்றல்
3. அந்நியர் - உறவினர்
4. இரவலர் - புரவலர்

## திருக்குறள்

ஒழுக்கமுடைமை

(நல்ல நடத்தை உடையவராதல் )

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பொருள்: ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே; ஆதலால், அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல்வேண்டும்.

சொற்பொருள் : விழுப்பம் - சிறப்பு; ஓம்பப்படும் காத்தல்வேண்டும்.

இலக்கணக்குறிப்பு: ஒழுக்கம் - தொழிற்பெயர்; படும் -செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

2.பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

பொருள் : எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது, அதனை விரும்பிக் காத்தல்வேண்டும்.

சொற்பொருள் : பரிந்து - விரும்பி; தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும்.

இலக்கணக்குறிப்பு : காக்க - வியங்கோள் வினைமுற்று; பரிந்து, தெரிந்து - வினையெச்சங்கள்.

பிரித்தறிதல் : பரிந்தோம்பி - பரிந்து + ஓம்பி; தெரிந்தோம்பி - தெரிந்து + ஓம்பி.

3.ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

பொருள் : ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர். அவ்வொழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர்.

சொற்பொருள் : குடிமை உயர்குடி; இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்.

இலக்கணக்குறிப்பு : இழிந்த – பிறப்பு பெயரெச்சம்.

4.மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பொருள் : ஒருவன், தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக்கொள்ள இயலும். ஆனால், ஒழுக்கம் குறைந்தால், அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்துபோகும்.

இலக்கணக்குறிப்பு ; கெடும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; கொளல் – அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொருள்; பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது; அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

சொற்பொருள்; அழுக்காறு - பொறாமை; ஆக்கம் - செல்வம்.

இலக்கணக்குறிப்பு: உடையான் - வினையாலணையும் பெயர்.

அணி: உவமையணி.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

பொருள் : ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலகமாட்டார்.

சொற்பொருள் : ஒல்கார் - விலகமாட்டார்; உரவோர் - மனவலிமையுடையோர்; ஏதம் - குற்றம்.

இலக்கணக்குறிப்பு: உரவோர் - வினையாலணையும் பெயர்.

7.ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பொருள் : ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.

சொற்பொருள் : எய்துவர் - அடைவர்.

இலக்கணக்குறிப்பு : எய்தாப் பழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; எய்துவர் - பலர்பால் வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்: எய்துவர் - எய்து + வ் + அர். எய்து - பகுதி, வ் -எதிர்கால இடைநிலை, அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

பொருள் : நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

சொற்பொருள்: இடும்பை - துன்பம்; வித்து - விதை.

இலக்கணக்குறிப்பு : நல்லொழுக்கம், தீயொழுக்கம் - பண்புத்தொகைகள்.

9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

பொருள் : நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.

சொற்பொருள் : ஒல்லாவே - இயலாவே.

இலக்கணக்குறிப்பு :

சொலல் - தொழிற்பெயர்.

10. உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பொருள் : உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

சொற்பொருள்: உலகம் - உயர்ந்தோர்; ஒட்ட - பொருந்த; ஒழுகல் - நடத்தல், வாழ்தல்.

ஆசிரியர் குறிப்பு:

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது.
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் திருவள்ளுவர். இவர் கி.மு. 31இல் பிறந்தவர் என அறிஞரால் உறுதி செய்யப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.
- தமிழக அரசு, தைத் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது.

நூற்குறிப்பு :

- திரு + குறள் = திருக்குறள். மேன்மையான கருத்துகளைக் குறள் வெண்பாக்களால்கூறும் நூலாதலின், திருக்குறள் எனப் பெயர் பெற்றது.
- இஃது ஈரடிகளில் இயற்றப்பட்டிருப்பினும் விரிவான பொருளைத் தருகின்றது. இந்நூல் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது; உலகப் பொதுமறை எனப் போற்றப்பெறுகிறது.
- திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இஃது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது;
- ஒன்பது இயல்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது.
- ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். தமிழ்ச் சான்றோர் பலரால் இயற்றப்பட்ட திருவள்ளுவமாலை, திருக்குறளின் பெருமைகளைப் போற்றிப் புகழ்கிறது.
- 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்றும், 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' என்றும்,

- பாவேந்தர் பாரதிதாசன் திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.
- வெல்லாத தில்லை திருவள்ளுு வன்வாய் விளைத்த வற்றுள்,
  பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினிலே அழைத்துச்
  செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்
  இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே.பாவேந்தர் பாரதிதாசன்
- மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812இல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) திருக்குறளில் 133 அதிகாரங்களும் 1330 குறட்பாக்களும் உள்ளன.

ஆ) திருக்குறள் ஆங்கிலம் முதலான உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இ) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்எய்துவர் எய்தாப் பழி.

2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் __________

1. நால்வர் நான்மணிமாலை
2. திருவள்ளுவமாலை
3. இரட்டைமணிமாலை

ஆ) திருக்குறள் _________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.

1. சிந்தியல்
2. குறள்
3. நேரிசை

இ) 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் __________

1. பாரதியார்
2. சுரதா
3. பாரதிதாசன்

## அற நூல்கள் : நாலடியார்

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல் வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு சமணமுனிவர்

பாடல்பொருள்

- நாயின் கால்விரல்கள் நெருங்கி இருக்கும், அதனைப் போலச் சிலர் நம்மோடு நெருக்கமாக இருப்பார்கள், ஆனால் அவர்கள் ஈயின் கால் அளவுக்குக் கூட நமக்கு உதவ மாட்டார்கள் அப்படிப்பட்டவர்கள் நட்பால் நமக்கு என்ன பயன்?
- வாய்க்கால், தொலைவிலுள்ள நீரைக் கொண்டு வரும் அந்நீரை வயலுக்குப் பாய்ச்சி விளைய உதவும். வாய்க்காலைப் போல உதவும் மனிதர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவர்கள் நட்பை நாம் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.

### சொற்பொருள்

- நாய்க்கால்- நாயின் கால்
- ஈக்கால் - ஈயின் கால்
- அணியர் - நெருங்கி இருப்பவர்
- என்னாம் - என்ன பயன்?
- சேய்மை - தொலைவு
- செய் - வயல்
- அனையார் – போன்றோர்

### நூல் குறிப்பு

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார்.
- 400 பாடல்களைக் கொண்டது
- அறக்கருத்துகளைக் கூறும் நூலாகும்
- நாலடி நானூறு என்று அழைக்கப்படுகிறது
- சமணமுனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்

### பதினெண்கீழ்க்கணக்கு – விளக்கம்

- சங்க நூல்கள் எனப்படுபவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டில் பத்து நூல்களும் எட்டுத்தொகையில் எட்டு நூல்களுமாக மொத்தம் பதினெட்டு நூல்கள் இவற்றை மேல்கணக்கு நூல்கள் எனக் கூறுவர்.
- சங்க நூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு பதினெண்கீழ்க்கணக்கு என வழங்கப்படுகிறது. இத்தொகுப்பிலும் பதினெட்டு நூல்கள் உள்ளன.
- பதினெண் என்றால் பதினெட்டு என்பது பொருள். இந்நூலைக் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் கூறுவர்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை அறநூல்களே.

# 7ம் வகுப்பு பருவம் - 2

## இயல் - 2

### அழியாச் செல்வம்

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.* -சமண முனிவர்

**சொல்லும் பொருளும்**

வைப்புழி - பொருள் சேமித்து வைக்கும் இடம்

கோட்படா - ஒருவரால் கொள்ளப்படாது

வாய்த்து ஈயில் - வாய்க்கும்படி கொடுத்தலும்

விச்சை - கல்வி

வவ்வார் – கவர முடியாது

எச்சம் – செல்வம்

**பாடலின் பொருள்**

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது.
ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது.
மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது.
ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

**நூல் வெளி**

நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும்.
இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.
இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர்.
திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.
இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து நாலடியார்

# அறிஞர் : நாமக்கல் கவிஞர்

## 7 ஆம் வகுப்பு பருவம் : 1

## இயல் 1:

### எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது
கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே
அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

### சொல்லும் பொருளும்

ஊக்கிவிடும் - ஊக்கப்படுத்தும்

குறி - குறிக்கோள்

விரதம் – நோன்பு

பொழிகிற – தருகின்ற

### பாடலின் பொருள்

- நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது.
- தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.
- கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.
- நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்; அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

நூல் வெளி

- ✓ இப்பாடலின் ஆசிரியரை, நாமக்கல் கவிஞர் என்றும் அழைப்பர்.
- ✓ இவர் தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.
- ✓ காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக்கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.
- ✓ தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.
- ✓ மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.
- ✓ நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்துத் தரப்பட்டுள்ளது.